**கைத்தொழில் சிறப்பிதழ்**

**தமிழீழத் தேசத்தின் புதல்வர்களே !**
இந்த மண்ணில் உங்களின்
நேசிப்பு தெரியட்டும்
இது எம் உரிமை நிலம்
உயிர்கள் உறங்கும் நிலம்
இரத்த உறவான மண்

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் 11-11-1994

அன்பளிப்பு 40P

வீசுகின்ற காற்றும்,
வீழ்ந்து கிடக்கும் வயற் பரப்பும்
சூழ்ந்த பெருங்கடலும்
சுகமான மணற் பரப்பும்
நிமிர்ந்த நெடும் பனைகளும்
நிரைத்து நிற்கும்
தென்னைகளும்
எங்களுக்கே, எங்களுக்கே,
ஏன் இன்னும் வீண் தயக்கம்
எழுவோமே ! நிமிர்வோமே!
எங்கள் தேசம் இதுவென்று
எல்லோருக்கும் சொல்வோமே.




"தமிழீழம் ஒரு செழிப்பான பூமி. வளங்கள் பல நிறைந்த தேசம். தன்னிறைவான பொருண்மியத்தைக் கட்டியெழுப்பி, அதனை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லக்கூடிய நீர்வளத்தையும், நிலவளத்தையும் மனித தொழிலாக்க வளத்தையும்கொண்டது. இயற்கையின் கொடையாக எமக்கு வழங்கப்பட்ட இந்த வளங்களை நாம் இனங்கண்டு, அவற்றை உச்சப்பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும். மக்களின் தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் திறமையான திட்டமிடுதலின் அடிப்படையில், உற்பத்தியைப் பெருக்கவேண்டும். வேளாண்மையும், கைத்தொழிலுமே பொருண்மியக் கட்டுமானத்திற்கு அடித்தளமானது.தன்னிறைவான பொருண்மிய வாழ்வுக்கு ஆதாரமானது. இந்த இருதுறைகளையும் கட்டிவளர்ப்பதில் நாம் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். இந்த இலக்கில் எமது அமைப்பான தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆக்கபூர்வமான பல வேலைத்திட்டங்களை செயற்படுத்திவருகின்றது. இந்த முயற்சிகள் வெற்றிபெற எனது ஆசிகள்".

**தமிழீழத் தேசியத் தலைவர்**



# தொடரும் தமிழின அழிப்பு

### மன்னாரில்

மடு அகதி முகாமிலிருந்து அரிப்புத்துறையில் குடியேறிய ஒன்பதுபேர் தமது அன்றாட வாழ்வுக்காக கடலில் மீன்பிடிக்கச் சென்றசமயம், சிறீலங்கா கடற்படையினர் நடாத்திய மனிதாபிமானமற்ற தாக்குதலுக்கு இலக்காகினர். இவர்களில் அறுவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், மூவருக்கு என்ன நடந்தது என இதுவரை தெரியவில்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மீளக்குடியேறிய மீனவர்கள், வாழ்க்கையை நடாத்துவதற்கு தொழில் ஏதுமின்றித் தவித்ததாகவும், இதனால் பகல் நேரத்தில் கால்நடையாகவும், படகுகளில் சென்றும் கரையோர கடலில் கடலட்டை பிடிக்கும் தொழிலை இவர்கள் தொடங்கியிருந்தனர். இதுகுறித்து மன்னார் கத்தோலிக்க ஆயர் மேதகு இராயப்பு யோசப் அவர்கள் பாதுகாப்பு படையினருக்கு அறிவித்த பொழுது, அவர்கள் எதிர்ப்பு எதையும் தெரிவிக்கவில்லை எனவும் அறியப்படுகின்றது. ஆயினும் கடந்த மாதம் 27 ஆம் நாள் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் சிறீலங்கா பாதுகாப்பு படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டமை மிகவும் வேதனைக்குரிய செயல் என மன்னார் கத்தோலிக்க ஆயர் மேதகு இராயப்பு யோசப் அறிவித்துள்ளார்.

### வடமராட்சியில்

வடமராட்சி கிழக்கில் சிறீலங்கா குண்டுவீச்சு விமானங்கள், குடியிருப்புக்கள் மீது அகோர குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

மருதங்கேணி, செம்பியன்பற்று, ஆளியவளை, தாளையடி, மாமுனைப் பகுதி குடியிருப்புக்கள்மீது கண்மூடித்தனமான முறையில் விமானங்கள் தாக்குதல் நடாத்தின. இப்பகுதிகளுக்கு 09. 10. 1994 அன்று காலை திடீரென வந்த பொம்மர், அவ்ரோ, உலங்குவானூர்திகள் அப்பகுதிக் குடியிருப்புக்களைச் சுற்றிச் சுற்றி இடைவிடாது தாக்குதல் நடாத்தின.

இவற்றிற்கு உதவியாக வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு இராணுவமுகாம்களில் இருந்தும் ஆட்லறி எறிகணை தாக்குதல்களும் நடாத்தப்பட்டன.

இத்தாக்குதலினால், ஆறு வயதுடைய சிறுமி கொல்லப்பட்டார். அத்துடன் அப்பகுதியில் பல வீடுகள், மீன்வாடிகள் மற்றும் பலவும் சேதமடைந்துள்ளன.

### மட்டக்களப்பில்

கிரான் பாலத்தில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தினர், குடும்பத்தர் ஒருவரைக் கைதுசெய்து அடித்துப்படுகொலை செய்தபின், ஆற்றில் தூக்கிவீசிய சம்பவம் ஒன்று அப்பகுதியில் பெரும் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளது. தீலிவெட்டையில் வசிக்கும் கதிரவேல் சுந்தர்ராஜ் (வயது 41) என்ற

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...

# இந்தியா அஞ்ச வேண்டியதில்லை
## கொள்கை மாற்றம் அவசியம்

□ அரசியற்றுறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன்

"மிகப்பெரும் இன அழிவிற்கு உட்பட்டு நாங்கள் இருக்கின்றோம்; எங்களுடைய விடுதலைக்காக, எங்கள் மக்களுடைய தன்னாட்சி இறைமைக்காக நாங்கள் போராடிக்கொண்டிருக்கின்றோம் -ஆனால் இந்தியாவில் அத்தகையதொரு சூழல் இல்லை. எனவே இந்தியா எம்மைக்கண்டு அஞ்சவேண்டியதில்லை; அதில் அர்த்தமேயில்லை. எனவே இந்திய அரசு தனது தவறான பாதையை, அணுகுமுறையைக் கைவிட்டு, தமிழர்களுடைய பிரச்சினையில், புதியதொரு கொள்கையை வகுத்துக்கொள்ளவேண்டுமென எதிர்பார்க்கின்றோம்" என, தமிழீழ அரசியற்றுறைத் துணைப்பொறுப்பாளர் 05. 10. 1994 அன்று, தீருவிலில் நடைபெற்ற குமரப்பா - புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 7 ஆவது நினைவுநாள் நிகழ்வில் பேசும்போது தெரிவித்தார்.

"1983 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து, இந்தியா தமிழீழத் தமிழர்களுடைய பிரச்சினையில் தலையிடத் தொடங்கியது. இந்தியாவின் இந்தத் தலையீடு, ஈழத்தமிழ் மக்களுக்கு ஒரு நிம்மதியான

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...

# பெரும் போர் மூளும்
## பொருளியல் நிபுணர்கள் கருத்து

சிறீலங்காவின் பிரதமர் சந்திரிகா தலைமையிலான புதிய அரசு, இனப்பிரச்சினை தீர்வுக்கான முயற்சிகளில் இறங்கியுள்ளதாகக் கூறியுள்ளமை உலக வட்டாரங்களில் வரவேற்கப்பட்டபோதிலும், சர்வதேச சமூகத்தவர் 'பெரும் போர் மூளும் அபாயம் தொடர்வதாகவே' கருதுகின்றனர். "இனப்பிரச்சினைக்கான தீர்விலேயே பொருண்மிய அபிவிருத்தி தங்கியுள்ளது; தொடங்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தை தோல்விகாண நேரும்பட்சத்தில், இராணுவத்

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...

# குண்டு வெடிப்புக்கும் எமக்கும் தொடர்பில்லை

\- விடுதலைப் புலிகள்

## ஆதாரமின்றி புலிகளை குற்றஞ் சாட்டமுடியாது

\- சிறீலங்காப் பிரதமர்

சிறீலங்காவின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்காவும், ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்களும் பலியாகக் காரணமாக இருந்த குண்டுவெடிப்புக்கும் தங்களுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் வைத்து, 'ராய்ட்டர்' செய்தி நிறுவனத் தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்களிடம் தெரிவித்துள்ளனர் என அச்செய்தித்தாள் குழுவில் இடம்பெற்ற வருணா கருணாதிலக்க கொழும்புக்குத் தொலைபேசி மூலம் பலாலி இராணுவத்தளத்தில் இருந்து உறுதிசெய்துள்ளார்.

அதேவேளை கொழும்பு விசும்பாயவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், சிறீலங்காப் பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா "கொழும்பு கிராண்பாசில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில், ஆதாரம் இல்லாமல், எவர்மீதும் குற்றஞ்சாட்ட அரசு விரும்பவில்லை" எனக்கூறியுள்ளார். அவர் மேலும் "காமினி திசாநாயக்காவின் படுகொலையை அரசும் புலிகளும் சேர்ந்து செய்த சதியென முன்னாள் சபாநாயகர் முகமது கூறியிருப்பது, அப்பட்டமான புனைகதை. அவர் கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை.

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**



# மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்

"ஒருபுறம் போர்; மறுபுறம் சமாதானத்திற்கான முயற்சிகள்" இவ்வாறாகக் காணப்படும் இன்றைய அரசியல் சூழ்நிலை குழப்பம் நிறைந்தது. மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தக்கூடியது. இந்நிலையில், தமிழ் மக்கள் இவ்விடயத்தில் கவனமாகவும், நிதானமாகவும் இருக்கவேண்டியது அவசியமாகும்.

இனப்பிரச்சினைக்கு 'அரசியல் தீர்வு' என்பதுபற்றி சிறீலங்கா அரசால் நிறையவே பேசப்பட்டு வருகின்றது. இக்குரல், ஐ. நா. சபை வரையும் கேட்கின்றது. இவ் அரசியற்தீர்விற்கான பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளும் மந்தநிலையிலேயே உள்ளன. முதலாம் கட்ட பேச்சு வார்த்தையில், போரினால் விளைந்த அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விடயங்களே ஆராயப்பட்டன.

அதேவேளை, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசநாயக்காவின் படுகொலையை அடுத்து, அன்றாடப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையும் ஒத்திவைக்கப்பட்டது. பொது சன ஐக்கிய முன்னணிக்கு, பொதுத் தேர்தலில் சிங்கள மக்கள் அளித்த ஆதரவை அடுத்து, சிங்கள இனவாதக் கூக்குரல்கள் சற்று அடங்கிப் போயிருந்தன. ஆனால், நடைபெற்ற முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து மீண்டும் தலைதூக்கிய இனவாதக் கூக்குரல்கள், காமினியின் படுகொலையோடு உக்கிரமடைந்துள்ளன. இந்நிலையில், விடுதலைப் புலிகளுக்கும் திருமதி சந்திரிகாவின் அரசுக்குமிடையிலான பேச்சுவார்த்தையும் முன்னைய பேச்சுவார்த்தைகளைப் போன்று, "சாண் ஏற முழம் சறுக்கிய கதை" யாக மாறிவிடுமா? என்ற ஐயப்பாடு சகல மட்டங்களிலும் எழுந்திருப்பது நியாயமானதே.

இதேசமயம் வடக்கு - கிழக்குப் பகுதியில், பரவலாக என்று கூறமுடியாவிட்டாலும், ஆங்காங்கே ஆனால் இராணுவரீதியில் முதன்மையான தாக்குதல்களும் மோதல்களும் இடம்பெற்றவண்ணமே உள்ளன. இதைவிட தமிழ் மக்கள் மீதான, சிறீலங்கா ஆயுதப்படையினரின் தாக்குதல்களும் கணிசமாக இடம்பெற்று வருகின்றன; பலர் கொல்லப்பட்டும் உள்ளனர்.

இவ்வாறான நிலையில்தான் மக்கள் சமாதானத்தீர்விலோ, அன்றி போரிலோ நம்பிக்கைகொள்வது என்ற கேள்வி எழுகின்றது. அரசின் நிலைப்பாட்டை எவ்வாறு எடுத்துக்கொள்வது என்ற குழப்பமான நிலை தோன்றுகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு அரசியற்தீர்வு, பேச்சுவார்த்தை என்பன பற்றி அடிக்கடி கூறினாலும், இவ்விடயத்தில் அதன் முன்னேற்றம் சற்று மந்தகதி என்றே கூறலாம். இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வொன்றைக் காணும்முகமாக ஒரு நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்க, சில பொருட்கள்மீதான தடையை நீக்குவதாக அறிவித்ததாயினும், அப்பொருட்கள் எளிதாக வடக்கே வந்தடைவதாகத் தெரியவில்லை.

அடுத்ததாக யாழ்ப்பாணத்திற்கான மின்விநியோகம், துரிதகதியில் வழங்குவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படும் எனப்பல அறிவிப்புக்கள் வெளிவந்தபோதும், அது தற்பொழுது எத்தகைய முன்னேற்றகரமான நடவடிக்கையும் இன்றி முடங்கிப்போயுள்ளது.

இதேசமயம் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவும் சரி; பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தவும் சரி; முற்றாக இராணுவ அழுத்தம் அற்ற பேச்சுவார்த்தைக்குத் தயாராக இல்லை என்பதும் வெளிப்படை. பேச்சுவார்த்தையில் நம்பிக்கையீனம் ஏற்படுமானால், இராணுவத் தாக்குதலுக்கு உத்தரவிடுவதற்குத் தயாராகவே உள்ளனர். இதனைப் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவும், அனுருத்தவும் வெளிப்படையாகவே தெரிவித்தும் உள்ளனர்.

இதேவேளை, இராணுவ உயரதிகாரிகள் மட்டத்திலும், சமாதானத்தீர்வு பற்றிய நம்பிக்கை எதுவும் இல்லை. இந்நிலையிலேயே போர் நிறுத்தம், போக்குவரத்துப் பாதைத்திறப்பு போன்ற விடயங்களில், இராணுவம் எந்தவித உடன்பாட்டிற்கும் வரமுனையவில்லை. அரசும் இவ்விடயத்தில் தீவிர அழுத்தத்தைப் பிரயோகிப்பதாகவும் இல்லை.

மறுவளமாக இராணுவம் ஆயுதப்படைகளின் விரிவாக்கம், விசேட பயிற்சி என்பனவற்றிலே கவனம் செலுத்துகின்றது. சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடையும் பட்சத்தில், தாக்குதலுக்குத் தயாராக இருக்கவேண்டும் என அதற்கு விளக்கமும் கூறுகின்றது. ஆனால், சமாதானப் பேச்சின்மூலம் கிடைக்கப்பெறும் கால இடைவெளியினைப் பயன்படுத்தி, இராணுவ விரிவாக்கத்தையும் நவீன மயமாக்கத்தையும் மேற்கொள்ளவே எண்ணுவதாகக் கருத வழி ஏற்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையில், சமாதானத்திற்கான நம்பிக்கை குறைவாகவே தென்படுகின்றது. சிறீலங்கா ஆட்சியாளர்களும் சரி, இராணுவத்தினரும் சரி சமாதான முயற்சிகளில் முழுமையான நம்பிக்கைகொண்டுள்ளதாகத் தெரியவில்லை. சமாதானமுயற்சிக் காலத்தை, ஓர் போர்த் தயாரிப்பிற்கான காலமாகவும், அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கான காலமாகவும் கருதுவது போன்றும் உள்ளது.

இதன்காரணமாக தற்பொழுது இடம்பெறும் சமாதான முயற்சிகள் குறித்த ஒவ்வொரு நகர்விலும், தமிழ் மக்கள் மிகவும் அக்கறையாகவே இருக்கவேண்டும்; அவ்வாறு இல்லாதுவிடில், சமாதானம் வருகின்றது என எதிர்பார்த்துக்கொண்டிருக்க, திடீரெனப் போர் முன்னால் வந்து நிற்கக்கூடும். அவ்வேளையில் போரைக்கண்டு மிரண்டு விடாது, திடமான உறுதியோடு அதனை எதிர் கொள்ளத் தக்கவகையில் தமிழ் மக்கள் யாவரும் விழிப்பாக இருக்கவேண்டும். ■

# கைத்தொழில் சிறப்பிதழ் பற்றிய ஒரு நோக்கு

பல்வேறான தடைகளையும் உடைத்தெறிந்து, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டிற்காக அயராது உழைத்து வரும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வெளியீடான 'ஆதாரம்' என்ற இதழ் (வைகாசி -ஆனி 1994 இதழ்) கவிதை, சிறுகதை, கட்டுரைகள் (பதினொன்று) ஆகியவற்றை உள்ளடக்கி, 'கைத்தொழில் சிறப்பிதழ்' ஆக அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதழ் தாங்கியுள்ள ஆக்கங்கள் யாவும், தமிழீழத்தின் இன்றைய, எதிர்கால கைத்தொழில் மேம்பாடுகளையே சுட்டி நிற்கின்றன.

குறிப்பாக, தமிழீழத்தின் கைத்தொழிற்றுறை எதிர்நோக்கியுள்ள தடைகள் எவை? அத்தடைகளை எவ்வாறு உடைத்தெறியலாம்? தமிழீழத்திற்குப் பொருத்தமான கைத்தொழில்கள் எவை? பொருத்தமான கைத்தொழில் கொள்கை எது? கைத்தொழிற்றுறை ரீதியான எதிர்காலத் தேவைகள் எவை? எமது அறிவியல் -தொழில் நுட்பத்தை எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம்? கைத்தொழிலுக்குத் தேவையான நிதிவளத்தை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்? என்பது போன்ற வினாக்களுக்கு இவ்விதழ் மூலம்,'தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்'(TEEDOR) விடைகாண முனைந்துள்ளது.

"தமிழீழத்தில் என்ன வளம் உண்டு" எனவும் சிலர் வினாவுகின்றனர். இது அவர்களின் தமிழீழம் பற்றிய தெளிவற்ற பார்வையினையே எடுத்துக் காட்டுகின்றது. எமது இயற்கை வளங்களை (நீர்வளம், மண்வளம், கடல்வளம், பனைவளம்) தூர நோக்குடன் திட்டமிட்டுப் பயன்படுத்தினால்,"தமிழீழத்தில் என்ன வளம் இல்லை" என்ற புதியதொரு பார்வையைக் கொடுப்பதற்கும் கைத்தொழில் சிறப்பிதழின் ஆக்கங்கள் உதவியாக அமைந்துள்ளன.

எம்மினத்தின் மீது ஏவிவிடப்பட்டிருக்கும் கொடிய போரை உறுதியுடன் எதிர்கொண்டிருக்கும் அதேசமயம், தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழத்தின் பொருண்மியத்தை மேம்படுத்துவதிலும் அதற்கான கட்டுமானத்தை உருவாக்குவதிலும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார்கள். இதற்கு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செயற்பாடுகள் பெரும் சான்றாக உள்ளன. தமிழீழத்தின் தொலை நோக்குமுள்ள பொருண்மிய கட்டுமானத்தில், கைத்தொழில் பெரும் பங்கு வகிக்கவேண்டும் என்பதையும் கைத்தொழில் சிறப்பிதழின் ஆக்கங்கள் வெளிப்படுத்துகின்றன.

வெறும் தனிமனிதன் என்ற நிலையில் இருந்து விடுபட்டு, சமூகம், கிராமம், நகரம், நாடு என்ற வளர்ச்சிப் போக்கினை, 'தமிழீழத் தேசியம்' என்ற உயரிய சிந்தனையினை எமது தேசிய விடுதலைப் போராட்டம் பெற்றுத் தந்துள்ளது. தமிழ்த் தேசியம் இன்று சர்வதேசத்திலும் பேசப்படுகின்றது. இந்த வளர்ச்சிக்கும், சுயமாக நின்று எமது பொருண்மிய கட்டுமானத்தை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளுக்கும் எம் மாவீரர்களின் அளவிடமுடியாத அர்ப்பணிப்புக்களே அடிப்படைக் காரணமாகும். எம்மினத்தை எதிர் நோக்கிய பொருண்மிய தடைகளை உடைப்பதற்கும் மாவீரர்களே வழி சமைத்தார்கள். தமிழீழத்திலும், மற்றும் தமிழீழ மக்கள் வாழும் நாடுகளிலும் மாவீரர் நாளை எழுச்சியுடன் கொண்டாடுவதற்கு நடவடிக்கைகளை எடுத்துவரும் இவ்வேளையில், மாவீரரின் தியாகத்தில் எழுந்த தமிழீழ பொருண்மிய கட்டுமானத்தின் முக்கிய அங்கமான, 'தமிழீழக் கைத்தொழில்கள்' பற்றிய தெளிவான பார்வையினை, தமிழீழத்திற்கு வெளியே வாழும் மக்களும் அறிவது அவசியம் என்ற காரணத்தினாலேயே இவ்விதழை கைத்தொழில் சிறப்பிதழாக வெளியிடுகின்றோம்.

தமிழீழத்திற்கு வெளியேயுள்ள தமிழீழ மக்களும் தாம் வாழும் நாடுகளில் இருந்து கொண்டே, எமது பொருண்மிய மேம்பாட்டிற்குத் தேவையான அறிவாற்றல், தொழில் நுட்பம், நிதிவளம் ஆகியவற்றைக் கொடுத்து உதவலாம்; கொடுத்து உதவவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அத்துடன் தாம் வாழும் நாடுகளில் இயங்கும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக்கிளையுடன் சேர்ந்து இயங்குவதன் மூலம் தமிழீழ பொருண்மிய விடுதலையிலும் பங்கெடுத்து கொள்ளலாம். ■

# மாவீரர் அஞ்சலிப் பாடல்

மண்ணை நினைத்து விண்ணை அடைந்த மாபெரும் வீரர்களே
நம்மை நினைத்து தம்மை கொடுத்த தியாகத்தின் எல்லைகளே
நீங்கள் எங்களின் தெய்வங்களே - இங்கு
நாங்கள் உங்களின் பிள்ளைகளே.

உங்களின் குருதியை நெல்மணியாக நாம் மண்ணில் காணுகின்றோம்
உங்களின் வியர்வையை ஊறிடும் தண்ணியாய் மண்ணில் காணுகின்றோம்
உண்ணிடும் உணவிலே உங்களின் பொன்முகம் நாம் தினம் காணுகின்றோம்
வாழ்ந்திடும் வாழ்விலே உங்களின் தாயுள்ளம் நாம் தினம் காணுகின்றோம்
நீங்கள் எங்களின் தெய்வங்களே இங்கு
நாங்கள் உங்களின் பிள்ளைகளே.
(மண்ணை)

மண்ணையே பூசித்து மக்களை நேசித்து போர்க்களம் போகின்றீர்
மண்ணையும் காத்திட்டு மக்களை காத்திட்டு எங்கு நீர் போகின்றீர்
உங்களைத் தேடியே கண்களில் நீருடன் நாமிங்கு அலைகின்றோம்
எங்களைச் சுற்றியே நீங்களும் இருப்பதை யாரிங்கு காணுகின்றோம்
நீங்கள் எங்களின் தெய்வங்களே - இங்கு
நாங்கள் உங்களின் பிள்ளைகளே.
(மண்ணை)

எங்களின் வாழ்க்கையே உங்களின் சிந்தனை என்றுநீர் வாழ்ந்து சென்றீர்
எங்களின் வாழ்விலே உங்களின் மூச்சினை தென்றலாய் வீசச் செய்தீர்
தாயினும் மேலாக தாயக மண்ணையே நீர் தினம் காதலித்தீர்
உயிரினும் மேலாக உம்முயர் இலட்சியம் தமிழீழம் என்றிருந்தீர்
நீங்கள் எங்களின் தெய்வங்களே - இங்கு
நாங்கள் உங்களின் பிள்ளைகளே.
(மண்ணை)

எதிரியின் பாசறை தேடியே நீங்களும் மகிழ்வுடன் செல்லுகின்றீர்
உறுதியுடன் கருவறை காட்டியே நீங்களும் எங்குதான் செல்லுகின்றீர்
விடியலைத் தேடிய வேங்கைகள் உங்களின் பூவுடல் தேடுகின்றோம்
பூவுடல் மீதிலே சத்தியம் உங்களின் இலட்சியம் வாழவைப்போம்
நீங்கள் எங்களின் தெய்வங்களே - இங்கு
நாங்கள் உங்களின் பிள்ளைகளே.
(மண்ணை)

**கலை, பண்பாட்டுக் கழகம் - இத்தாலி.**

# மாவீரர் நாள் சிறப்பிதழ்

எதிர்வரும் '**களத்தில்**' இதழ் (25.11.1994), '**மாவீரர் நாள்**' சிறப்பிதழாக வெளிவரவுள்ளது. அத்துடன்,

**'அரசியலமைப்பு': ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய**

என்ற தலைப்பில் திரு. மு. திருநாவுக்கரசு என்பவரால் எழுதப்பட்டு, கடந்த ஆவணி மாதம் 10 ஆம் நாள் தமிழீழத்தில் வெளியிடப்பட்ட ஒன்பது அத்தியாயங்களைக்கொண்ட இந்நூலில் உள்ள ஆக்கங்களை, பகுதிபகுதியாக வெளியிடத் தீர்மானித்துள்ளோம். இதன் முதற்பகுதி மாவீரர் நாள் சிறப்பிதழுடன் தொடங்கப்படும் என்பதை வாசகர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

# யாழ்தேவி முறியடிப்பு நினைவுக்கல் திறப்பு

சிறீலங்கா இராணுவத்தின் ஒப்பரேசன் யாழ்தேவி நடவடிக்கை முறியடிப்பின் முதலாம் ஆண்டு நினைவுகூரலும், நினைவுக்கல் நாட்டலும் அண்மையில் இடம்பெற்றது. காலை 10 மணியளவில் இதில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான நினைவுக்கல், சமர் நடந்த அல்லிப்பளைப் புளோப்பளைப் பகுதியில் சம்பிரதாயப்படி திரைநீக்கம் செய்யப்பட்டது.

பளை வட்டப்பொறுப்பாளர் திரு. சின்னக்கிளி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதலில், பொது ஈகச்சுடரினை விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த திரு. மனோச் அவர்களும், தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்களும் ஏற்றிவைத்தனர்.

நினைவாலய தூபி ஈகச்சுடரினை யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராசா அவர்கள் ஏற்றிவைத்து, நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்து வைத்தார். இந்நிகழ்வில் பொதுமக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், கூட்டுறவாளர்கள், தொழிலாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். பின்னர் திரு. இளம்பரிதியும், மாவீரர் செயற்பாட்டுக்குழுவைச் சேர்ந்த திரு. பூபாலசிங்கம் அவர்களும் உரைநிகழ்த்தினர். ■

# தமிழருக்கு மகத்தான சேவைபுரிந்த வைத்தியகலாநிதி பொன்னம்பலம்

## - விடுதலைப்புலிகள் அரசியற்றுறை இரங்கல்

பிரபல சத்திரசிகிச்சை நிபுணரும், சேவை மனப்பான்மை கொண்ட மருத்துவருமான வைத்தியகலாநிதி பொன்னம்பலம் அவர்கள் 16. 09. 1994 அன்று கொழும்பில் இயற்கை எய்திய செய்தி தமிழ் மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

1976 ஆம் ஆண்டு தை மாதத்தில் யாழ். மருத்துவமனைக்கு மாற்றலாகிவந்து, சேவையாற்றத் தொடங்கிய அவர், இவ்வாண்டின் முற்பகுதியில் சுகவீனம் காரணமாக கொழும்பு செல்லும் வரை, தொடர்ச்சியாக 18 ஆண்டுகள் தமிழ் மக்களுக்கு மருத்துவசேவை புரிந்துள்ளார்.

நெருக்கடியான காலகட்டங்களிலெல்லாம் யாழ். மருத்துவமனையிலேயே தங்கியபடி மக்களுக்கும், போராளிகளுக்கும் அவர் ஆற்றிய மருத்துவச்சேவை போற்றுதற்குரியது. இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியற்றுறையினர் விடுத்த இரங்கற் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அச்செய்தியில், இந்தியப்படைகளினால் யாழ்ப்பாணம் முற்றுகையிடப்பட்டு, யாழ். வைத்தியசாலைப் படுகொலை நடைபெற்ற வேளைகளிலெல்லாம் தன்னுயிரைக்கூட பொருட்படுத்தாது, தொடர்ச்சியாக யாழ். மருத்துவமனையிலேயே கடமைபுரிந்திருந்தார்.

அதேபோல 'இரண்டாவது ஈழப் போர்' தொடங்கியவேளையில், வைத்தியர்கள் இல்லாது யாழ். மருத்துவமனை மூடப்படவேண்டிய சூழல் ஒன்று எழுந்தபோதும், அதை மூடவிடாது தொடர்ச்சியாக இயங்கவேண்டும் என்பதில் உறுதியுடனிருந்து அதில் வெற்றியும்கண்டார்.

66 வயது கடந்துவிட்ட நிலையிலும், சேவை மூப்படைந்த போதும், தனது நோயையும்



பொருட்படுத்தாது, அவர்செய்த மருத்துவப்பணியை இந்தமண் என்றும் மறக்கமாட்டாது.

வைத்திய கலாநிதி பொன்னம்பலம் அவர்களின் பிரிவை எண்ணித்துயரும் அவரது குடும்பத்தின் வேதனையில், எமது மக்களுடன் நாமும் பங்குகொள்கின்றோம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# சிறப்புற நடைபெற்ற மிருதங்க அரங்கேற்றம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிக் கலைஞன் செல்வன் நிதர்சனின் மிருதங்க அரங்கேற்றம் அண்மையில் நல்லூர் இளங்கலைஞர்மன்ற கலாமண்டபத்தில் மிகவும் சிறப்புற நடைபெற்றது.

இந்நிகழ்வில் பெருந்திரளான மக்கள், கலைஞர்கள் போராளிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பிற்பகல் 4 மணியளவில் தொடங்கிய இந்நிகழ்விற்கு விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்செல்வன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

அந்நிகழ்வின் தொடக்க நிகழ்வாக மங்கள விளக்கை நிதர்சனம் பொறுப்பாளர் திரு. ஜவான், அவர்களும் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ரதி அவர்களும் ஏற்றிவைத்தனர்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட போராளிகளுக்கும், மக்களுக்குமாக இரண்டுநிமிட மௌன அஞ்சலியைத் தொடர்ந்து, கலை, பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. அன்பரசன் வரவேற்புரையை நிகழ்த்தினார்.



தொடர்ந்து வாழ்த்துரையை நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும், வணபிதா பிரான்சிஸ் யோசப் அடிகளும் நிகழ்த்தினர்.

தலைமையுரையைத் தொடர்ந்து வாழ்த்துரைகளை, சங்கீத பூசணம் திரு. எஸ். பாலசிங்கம், கலாநிதி சபா ஜெயராசா. பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ், சங்கீதரத்தினம் திரு. சி. மகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வை அடுத்து, தமிழீழ அரசியற்றுறைத் துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் உரை நிகழ்த்தினார். சிறப்புரையை தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்செல்வன் நிகழ்த்தினார். இறுதியாக இசையரங்கும் மதிப்பீட்டுரையும் இடம்பெற்றதுடன் நிகழ்வு இனிது நிறைவெய்தியது. ■

## 'படை இல்லாத...

யாக்கி, தொடர்பாடல் மூலம் இந்தியாவில் புகுத்தப்படப்போகும் மேற்கத்தைய முதலாளிய நுகர்வுப்பாங்கினாலான இழிவுப்பண்பாடு ஒருபுறம்; மேற்கத்தைய ஆதிக்க, அரசியல் கருத்துக்கள் புகுத்தப்படல் இன்னொருபுறம் - இவை இறுதியில் இந்திய அரசியலில் தலையிட வழிவகுக்கும் என்பது பிரதான அச்சம். அத்தோடு இன்று இந்தியாவில் மிகவேகமாக வளர்ந்துவரும் உயர்மத்திய வகுப்பினை, அதிலும் குறிப்பாக அதன் இளைய உலகத்தைக் குறிவைத்துத் தாக்கப்போகும் இப்பண்பாட்டுப் படையெடுப்பால், பெரும் சமுகச் சிக்கல் தோன்றும் என சமூக வியலாளர் வேறு கவலை தெரிவிக்கின்றனர். ஆனால் மேற்குலகமோ தன்வழிக்கு வசமாக வந்துள்ள இந்தியப் பொருண்மியத்தை முற்றிலும் திறந்த போட்டிச்சந்தைப் பொருண்மியமுறைக்கு முற்றிலுமாகத்தள்ளிவிட, இந்தியாவின் இறுக்கமான கருத்துலகம் மாற்றப்படவேண்டும் என்பதில் மிகத்தெளிவாகவே உள்ளது. எனவே நவமுதலாளியத்துவத்தின் பண்பாட்டுத் தூதுவனாக புதுவகை நுகர்வுப் பாங்கொன்றின் கதாநாயகனாகப் படை எடுப்பது எதுவுமில்லாமலே புதுவகை ஆக்கிரமிப் பொன்றினைச் செய்ய, மேடொக் உட்பட எல்லோருமே தயாராகிவிட்டனர். எனவே எவ்வகையிலும் இடைநிறுத்த முடியாத ஒரு நிலையைநோக்கி, இந்தியப் பொருண்மியத்தின் புதிய மாற்றங்கள் செல்கின்றன. அதுமட்டுமன்றி எதிர்வரும் காலத்தில் இந்தியாவின் அரசியல் போட்டியாளராக அமையப்போகும் சீனா, யப்பான் மற்றும் கிழக்காசிய நாடுகள் இப்போது அடுத்த பாய்ச்சலுக்குத் தயாராகிவிட்டன.

இப்பாச்சலானது - இன்று உலகில் ஒரு சூறாவளியின் மையம் போல் அமைதியாக, ஆனால் பெரும்வீச்சோடு அரங்கேறும் நவீன தொடர்புச்சாதன உலகப் புரட்சியோடு தொடர்புடையது. இதன் மையமாக அமைவது தான், **'செய்மதி தொலைக் காட்சி ஒளிபரப்புக்கள்'** (Satellite Television Transmissions) இதன் உச்சமாக அமைவது தான், **'தகவல்தொடர்பு அதியுயர் நெடுஞ்சாலை'** எனப்படுகின்றது. (Information Super Highway) கணனிகளையும், நவீன தொலைத்தொடர்பு சாதனங்களையும் ஒன்றிணைத்து, தனது வாடிக்கையாளரின் தேவைகளை, விருப்புக்களை அவரது இல்லத்தின் அறைக்குள்ளே நிறைவேற்றும் இப்பெருவீதிநுட்பத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்கள் இப்போது ஆசியாவிலும் தமது வருகையை அறிவிக்கின்றன. இதன் வருகையை முன்னிட்டு யப்பான், கொங்கொங், சிங்கப்பூர், ஏன் சீனாகூடத் தம்மை தயார்படுத்துகின்றன. இன்னுமொரு 5 ஆண்டுகளுக்குள், இப்பெருவீதித் தொழில்நுட்பம் ஆசியாவிலும் சாத்தியப்படும் எனப்படுகின்றது. எனவே தான் இந்தப் பாய்ச்சலுக்கும் ஈடுகொடுக்கவேண்டிய நிலை இந்தியாவுக்கு; இத்தகு தனது தொடர்புசாதனத்துறையை வெளியார் தலையீட்டிற்கு உட்படுத்தவேண்டியநிலை. இதன் தீயவிளைவுகள் பற்றி இந்தியா இப்போதைக்குச் சிந்திக்கப் போவதில்லை என்பது மிகத்தெளிவு.

எனவே இப்போது **மேற்குலகம் தனது முதலாளிய பொருண்மிய விரிவாக்கத்திற்குத் தேவையான கருத்துக்கள் உற்பத்திசெய்து, இந்தியாவில் விநியோகிக்கத் தயாராகிவிட்டது. இதன்விளைவுகள் என்னவாகப்போகின்றது என்பதைப்பொறுத்தே இந்திய எதிர்காலம் அமையப்போகின்றது. ஆனால், இது சாதாரண இந்தியக் குடிமகனுக்கு எவ்வித நன்மையும் பயக்கப்போவதில்லை என்பது மிகத்தெளிவு. சோவியத் சாம்ராச்சியத்தை வீழ்த்தியவர்கள், இந்தியக்குட்டி சாம்ராச்சியத்தை என்னசெய்ய உத்தேசித்திருக்கின்றார்கள் என்பதை நாம் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.** ■

# மட்டக்களப்பு மாவட்டத்தில் மரங்கள் அருகும் ஆபத்து

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாலை, மற்றும் வேம்பு போன்ற பாரிய மரங்கள் அருகிப்போகும் ஆபத்துக் காணப்படுவதாகத் தெரியவருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும், மரங்கள் வெட்டப்பட்டுவருவதுமே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொப்பிகல காட்டுப்பகுதியில் படையினர் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதல்களால் பெருமளவு மரங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் படையினர் காவலரண்கள் அமைப்பதற்கென பெருமளவு மரங்களைத் தறிப்பதுடன், தமது சொந்தத் தேவைகளுக்காக மரங்களை வீடுகளுக்கு அனுப்புவதும் இடம்பெற்று வருகின்றது. இவ்வழிவு நடவடிக்கைகள் தொடர்வதன் காரணமாக, மரங்கள் அருகும்நிலை காணப்படுகின்றது. ■

# சிறப்புற நடைபெற்ற ஆசிரியர் நாள் விழாக்கள்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் அனைத்திலும் கோட்டம் மற்றும் பாடசாலை ரீதியாக ஆசிரியர் நாள் வெகுசிறப்பாக நடைபெற்றது.

அனைத்துப் பாடசாலைகளினதும், ஆசிரியர்கள் அந்தந்தப் பாடசாலை பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை மற்றும் மாணவர்களினாலும் கௌரவிக்கப்பட்டனர்.

ஆசிரியர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு, தனித்தனியே மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு பாராட்டப்பட்டனர். பாடசாலைகளில் கல்விமான்களும் பெற்றோரும் நலன்விரும்பிகளும் கலந்துகொண்டு பாராட்டுரை நிகழ்த்தினர்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில், சிறப்பாக 25 ஆண்டுகள் ஆசிரிய சேவையைப் பூர்த்திசெய்த ஆசிரியர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய ஆசிரியர் நாள் விழாவினை, வித்தியாலய அதிபர் செல்வி அன்னபாக்கியம் கனகரத்தினம் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றித் தொடக்கிவைத்தார். பழைய மாணவர் சங்கத்தலைவர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், அனைத்து ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர். ■

# இராணுவத் தடைமுகாமில்

## பொலிசாரின் கெடுபிடி

ஏறாவூர் முதல் வாழைச்சேனை வரையிலான செங்கலடி, முறக்கொட்டாஞ்சேனை போன்ற இடங்களில் உள்ள இராணுவத் தடைமுகாம்களில், பொலிசாரும் இராணுவத்துடன் இணைந்து செயற்படுகின்றனர்.

இப்பொலிசார் தடைமுகாமிற்கு வரும் வாகனங்களில் ஏறி, படையினர் தவிர்ந்த வேறு எவரும் வாகனத்திற்குள் இருக்கவேண்டாம்; சோதனைசெய்யும் இடம்வரை இறங்கி, நடந்துசெல்லுமாறு சிங்களத்தில் கூறுகின்றனர். இறங்கி நடக்க முடியாதவர்கள் வாகனத்தில் இருப்பின், அவர்களைக் கட்டாயத் தின்பேரில் இறங்கி நடந்துசெல்லப் பணிக்கின்றனர். இதில் வயோதிபரும், நோயாளிகளும், கர்ப்பிணிகளும் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ■

# போர் நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டாலே பேச்சுவார்த்தையில் முன்னேற முடியும்

## 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவிப்பு

**"மிகவிரைவில் போர் நிறுத்தம் ஒன்று செய்யப்படவேண்டும். அதன் மூலம் மட்டுமே எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கும்; அல்லாதுபோனால், பேச்சுவார்த்தைகளை இனவாத சக்திகள் குழப்புவதற்கு வழியேற்படும் என்று 'ராவய' செய்தித்தாளின் ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.**

இலண்டன் பி. பி. சியின் சிங்களச் சேவையில் இடம்பெற்ற வாராந்த அரசியல் விமர்சனத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் சமாதான முயற்சிகள் தொடர்பான முழுவிடயங்களும் மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படவேண்டும். இச்சமாதான முயற்சியானது, புதிய அரசிற்கு நெருக்கடிகளைக் கொடுக்கும் என்பதுடன், அரசின் முன்னுள்ள பாரிய பிரச்சினையாகவும் உள்ளது. தீர்வுத்திட்டமானது, அரசின் எதிர்காலத்தையும் நாட்டின் வளர்ச்சி அல்லது அழிவைத் தீர்மானிக்கும் அம்சமாகவும் அமையப்போகின்றது.

வடக்கு - கிழக்கு மக்களுக்கு வழங்கப்போகும் தீர்வுத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, தீர்வின் வெற்றி அமையப்போகின்றது. இத்தீர்வானது விடுதலைப் புலிகள் போர்மூலம் பெற்ற உரிமைகளுக்கு ஒத்ததாகவோ அல்லது அதற்கு மேலானதாகவோ இருந்தால் மட்டுமே, தமிழர்கள் அதனை ஏற்றுக்கொள்வர்" எனவும் அவர் தெரிவித்தார். ■

# தமிழர் - சிங்களவர் ஏற்கக்கூடிய தீர்வை முன்வைப்பதில் அரசிற்கு சிக்கல்

தமிழ் - சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சமாதானத் தீர்வை முன்வைப்பதில், ஒரு இக்கட்டானநிலை தோன்றியிருப்பதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான ஒரு தீர்வை முன்வைப்பது என்பது ஓர் எளிதான விடயம் அல்ல என்றும், வடக்கு மாகாணத்தின் கணிசமான பகுதி விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின்கீழ் இருப்பதால், அந்த நிர்வாகத்திற்கு ஒத்த ஒருதீர்வை முன்வைக்கவேண்டிய ஒரு நிலைக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு தீர்வை சிங்கள மக்கள் விரும்புவார்களா? அல்லது இதற்குக் குறைந்த ஒரு தீர்வைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? என்பதே அரசின் சங்கடமான நிலையாகும் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது. ■

# இனப்பிரச்சினைக்குத் தீர்வின்றேல் நாட்டில் எதிர்காலம் இல்லை

## □ அமைச்சர் நிமால் சிறீபால சில்வா

"வடக்கு - கிழக்கில் நிலவும் இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்படாவிட்டால், இலங்கையின் எதிர்காலமே இல்லாது போய்விடும்" என வீடமைப்பு நிர்மாண, பொதுவசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

கோட்டல் தாஜ் சமுத்திராவில் நடைபெற்ற விருந்துபசாரம் ஒன்றில் இக்கருத்தைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், "எனவே வடக்கு -கிழக்கு பிரச்சினைக்கு முதல் இடம் கொடுக்கப்போவதாக பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா திட்டவட்டமாக தெரிவித்துள்ளதாகவும், இதற்கான முயற்சிகள் பூரணவிசுவாசத்துடன் நடைபெறுவதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே இன்று தனிப்பட்ட அளவிலும், அரசியல் மட்டத்திலும் வடக்கு -கிழக்கு பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதை தாம் வற்புறுத்திவருவதாகத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு பூரணதிருப்தியடைகின்ற அதேவேளை, இதனை ஒரு மனிதாபிமான பிரச்சினையாகக் கருதியே தீர்வுகாணப்படவேண்டும். இதனை அரசியல் இலாபம் கருதி தீர்க்கமுடியாது. இதனைத் தீர்ப்பதன் மூலம் ஆட்சிக்கு மீண்டும் நாம் வரலாம்; அல்லது ஆட்சிப்பொறுப்பை நாம் இழக்கலாம். இன்று அமைச்சர்களாக இருப்பவர்கள்கூட நாளை சாதாரண பிரஜைகளாக மாறலாம். ஆனால் எல்லாவற்றையும்விட, இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்.

எனவே இப்பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம், இந்த யுகத்திற்கான கடமைகளை நிறைவேற்றியவர்களாகமாறிவிடுவோம். எனவே அரசியல்வாதிகள் சொந்த இலாபம் கருதி, பிழையான செயல்களை மேற்கொள்ளக்கூடாது" என, மேலும் தெரிவித்தார். ■

# அயல் நாட்டுச் செய்திகள்

# குற்றப்புலனாய்வு அதிகாரியாக நடித்த போலி ஆசாமி கைது

## உயர் பொலிஸ் அதிகாரி உடைந்தையாம்

கொழும்பு குற்றப் புலனாய்வு தலைமையகத்தின் உயரதிகாரி போல நடித்து, வடக்கு-கிழக்குப் பகுதிகளிலிருந்து கொழும்பு சென்று தங்கியுள்ள தமிழ் இளைஞர்களிடம், பணம் பறிப்பதில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர், அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடக்கிலிருந்து கொழும்பு வந்து, மத்திய வீதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த விஸ்வநாதன் பிரபாகரன் என்பவரிடம், இந்நபர் 5000 ரூபாவை பெறும்போது, லஞ்சத் திணைக்கள அதிகாரிகளால் பிடிக்கப்பட்டார்.

உயர் பதவி வகிக்கும் பொலிஸ் ஒருவரின் உதவியுடன், இந்நபர் மிக நீண்ட காலமாக இந் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாகக் தெரிய வந்துள்ளது. சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி, இந்நபர் பொலிசாருக்குத் தகவல் வழங்குபவர் எனத் தெரிவிக்கும் கடிதமொன்றை வழங்கியிருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, வாக்குமூலம் அளிக்க வரும்படி சிரேஸ்ட பொலிஸ் அதிபருக்கும், லஞ்சத் தடுப்புத் திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது. ■

# தென்னிலங்கையில் 1987 - 1991 ஆம் ஆண்டுவரை காணாமற்போன 20,000 பேரின்

## ■ குடும்பங்களுக்கு விரைவில் நட்ட ஈடு

**1987** முதல் 1991 வரை கடந்த ஆட்சியில் காணாமற்போன சுமார் 20,000 பேரின் குடும்பங்களுக்கு இவ்வாண்டுக்குள் நட்ட ஈடு வழங்கப்படவுள்ளது. அரச பயங்கரவாதம் மற்றும் ஜே. வி. பி. பயங்கரவாதம் என்பவற்றால் இவர்கள் காணாமற்போனதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமற்போனவர்களில் திருமணம் செய்தவர்களுக்கு முதற்கட்ட நட்ட ஈடாக 40,000 ரூபாவும், திருமணமாகாதவர்களுக்கு 15,000 ரூபாவும் பிள்ளைகளுக்கு 10,000 ரூபாவும், காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

காணாமற் போனோருக்கு மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படுவதோடு, இரண்டாம்கட்ட நட்ட ஈடாக 10,000 ரூபா வழங்கப்படும்.

வடக்கு - கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் காணாமற்போனோரின் விபரம் அடுத்த ஒரு மாதகாலத்தினுள் திரட்டப்படும். முதற்கட்டமாக தென்மாகாணத்திலேயே இது மேற்கொள்ளப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# ஆயுதங்களைப் போடும் வரை புலிகளுடன் பேசப் போவதில்லை

## - திருமதி. சிறிமா. திசநாயக்கா

"தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழேபோடும் வரை, நான் அவர்களுடன் எந்தவிதப் பேச்சுவார்த்தையிலும் ஈடுபடமாட்டேன்" என, திருமதி சிறிமா திசாநாயக்கா பி. பி. சியின் கொழும்புச் செய்தியாளருக்கு, அண்மையில் அளித்த செவ்வி ஒன்றில் தெரிவித்துள்ளார். அவர் மேலும், இனப்பிரச்சினைக்கான தமது தீர்வு, 1987 இல் மேற்கொள்ளப்பட்ட இலங்கை -இந்திய ஒப்பந்த அடிப்படையிலேயே அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

திருமதி திசநாயக்காவின் இக்கூற்று, ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த 17 ஆண்டுகால ஆட்சியின் பழைய பல்லவியே என்றும், "பாடல் பழசு; பாடகரே புதிசு" என்றும் அரசியல் அவதானிகளால் கருதப்படுகின்றது.

அதேவேளை, அண்மையில், கொல்லப்பட்ட தனது கணவரின் கொலையைத் துப்புத்துலக்க இந்திய மத்திய புலனாய்வுத்துறையினை அனுப்பும்படியும் சிறீலங்கா அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். சிறீலங்கா அரசும் இவரது கோரிக்கைகளை ஏற்றுள்ளது. அதன் பிரகாரம் இந்திய மத்திய புலனாய்வுத்துறையின் உயர் அதிகாரியான திரு. கார்த்திகேயன், பகுப்பாய்வு நிபுணர் பேராசிரியர் சந்திரசேகரன் ஆகிய இருவரும் கொழும்பு வரவுள்ளார்கள் எனவும் அறிவிக்கப்படுகின்றது. ■

# பொலிஸ் அதிகாரியைக் கைதுசெய்ய உத்தரவு

## மேலும் பல புதைகுழிகளைத் தோண்டமுடிவு

தென்பகுதி வன்செயல் காலத்தில் பலியானோரின் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள்பற்றி மேலும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

1989 ஆகஸ்ட்டில் கெக்கந்தள எனும்மிடத்தில் பெரும் எண்ணிக்கையிலானோர் கொல்லப்பட்டமை தொடர்பாக தாக்கல்செய்யப்பட்ட இருமனுக்களை கொழும்பு மஜிஸ்ரேற் சந்திரா விஜயபால ஏற்றுக்கொண்டார்.

இதில் பலியானவர்களின் சடலங்களை மீண்டும் தோண்டி எடுக்குமாறு அவர் கட்டளையிட்டுள்ளார். வாதுகம முன்னாள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சரத் எதிரிசிங்காவைக் கைது செய்து, உடனடியாக நீதிமன்றில் ஆஜர் செய்யு மாறு மாஜிஸ்ரேட் கட்டளை பிறப்பித்துள்ளார். விசாரணைகளை நடத்துமாறும் குற்றப் புலனாய்வுத்துறையினர் பணிக்கப்பட்டுள்ளனர். ■

# வடபகுதியில் தேர்தல் குறித்து அரசு எம்முடன் பேசவில்லை

## - விடுதலைப் புலிகள்

"வடபகுதியில் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளில், ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவது குறித்து, அரசு எவ்வித பேச்சுக்களையும் தம்முடன் மேற்கொள்ளவில்லை" என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

முதலாம்கட்டப் பேச்சுக்களில், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடமளிக்குமாறு புலிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்த கருத்துக்கே, புலிகளின் அதிகாரபூர்வ வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்துள்ளன. ■

# வெளிநாட்டு நிறுவன உதவி பெருமளவில் மோசடி

திருகோணமலை நகரில், பொதுமக்களுக்கு மனிதநேய நிறுவனங்கள் வழங்கும் உதவிகளில், ஊழல்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை நகரப்பகுதியிலுள்ள இளைஞர் முன்னேற்றச் சங்கத்திற்கு, சிறுவர் பராமிப்பு நிறுவனத்தினால் 10 இலட்சம் ரூபா பெறுமதியான உதவி வழங்கப்பட்டது. இவ்வுதவியில், இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியிலும் குறைந்த அளவே, மக்களுக்கு சென்றடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்கும் உதவிகளில், பெருமளவு ஊழல்கள் இடம்பெற்றுவருவதாகத் திருகோணமலை நகரிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ■


# போரும் சமாதானமும்

## பாரிசில் நடைபெற்ற பொதுக்கூட்டம் பற்றிய ஒரு பார்வை

கடந்த *23. 10. 1994* ஞாயிற்றுக் கிழமை பாரிசில், 'போரும் சமாதானமும்' என்ற கருத்தடக்கத்துடன் கூடிய பொதுக்கூட்டம்



நடைபெற்றது. இந்நிகழ்வினை, தமிழர் கலைபண்பாட்டுக் கழகத்தின் பிரான்சுக்கிளையினர் ஒழுங்கு செய்திருந்தனர். இக் கருத்து வெளிப்பாட்டு நிகழ்வில், தமிழீழத்தில் இருந்து வருகை தந்திருந்த அருட்தந்தை இமானுவேல் அவர்கள் கலந்துகொண்டமை சிறப்பம்சமாக அமைந்தது. இவருடன் சுவீடன் உப்சலா பல்கலைக்கழகத்தில் இருந்து வருகை தந்திருந்த பேராசிரியர் பீற்றர் சார்க், இலண்டனில் இருந்து வருகை தந்திருந்த இலங்கை இனவெறிக்கெதிராக செயற்படும் 'CASTIS'- அமைப்பின் தலைவி செல்வி மக் கோனல், விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளர் திரு. லோறன்ஸ் திலகர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்



துரை வழங்கினார்கள். இக்கூட்டத்திற்கு சுமார் 400 க்கு மேற்பட்டோர் வருகை தந்திருந்தார்கள்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் மத்தியில், எமது தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியதான பல்முக விடயங்களை வெளிக்காட்டி நின்றதால், இக் கூட்ட அமர்வு பெரிதும் பயனுடையதாகவே அமைந்ததெனலாம். அத்துடன், வெளிநாட்டுப் பேச்சாளர் சிலரின் பார்வையில் எமது போராட்டக் குணாம்சம் வெளிக் கொணரப்பட்டமையும் முக்கிய அம்சமாகவே அமைந்ததெனலாம். புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மனங்களில் தொக்கு நின்ற பல்வேறு தெளிவற்ற வினாக்களின் விடையாகவும் இக்கூட்ட அமர்வு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். திருச்சபையின் குரு முதல்வரும், கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்தவக் கல்லூரியின் அதிபரும், யாழ். நற்சமூக

நடுநிலைய இயக்குனருமாகிய அருட்தந்தை இமானுவேல் அவர்கள், எமது தமிழீழ மக்களின் போராட்ட வாழ்வியலையும், இடம்பெயர்ந்து அகதியாக வாழும் தமிழ் மக்களின் வாழ்வியல் நிலையினையும் தெளிவுபடுத்தி, வெளிநாட்டுத் தமிழர்களின் இன்றைய வரலாற்றுக்கடமையினையும் மிகத் துல்லியமாக எடுத்துரைத்தார்.

> "எமக்கான தேசியம் எமது மண்ணிலேயே உருவாக்கப்பட்டு வருகிறது"
> - திரு. லோறன்ஸ் திலகர்

"நாங்கள் எங்கள் சரித்திரத்தை நன்கு அறிந்தவர்களாக இருக்கவேண்டும்; சிலர் நினைப்பது போல எமது போராட்டமானது அண்மையில் தோன்றிய ஒன்றல்ல; நாங்கள் போராட்டம் தொடங்கியது பல ஆண்டுகளுக்கு முன்பு; அது போராக வெடித்தது சில ஆண்டுகளுக்கு முன்பு. இன்றைய போராட்ட கட்டமானது எமது நீண்ட போராட்டத்தின் ஒரு பரிணாமம்" என்று கூறிய அருட்தந்தை அவர்கள், இன்று எமது மக்கள் தமிழீழத்தில் எதிரியின் கொடிய பல்துறைசார் அடக்கு முறைக்கு எதிராக மிக உறுதியோடு போராடி வருகிறார்கள் என வியப்புடன் விபரித்தார். அத்துடன் தற்போதைய சமாதான சூழ்நிலை பற்றி குறிப்பிடுகையில் "எந்த ஒரு நிலையிலும் எமது உள்ளூர் உற்பத்தி மேம்பாட்டுக்குத் தடையாக அமையும் எந்த ஒரு பொருளையும், இறக்குமதி செய்யமாட்டோம்" என்று கூறியது எல்லோரையும் வியக்கவைத்தது. எமது தேசத்தின் சுபீட்சத்தை நோக்கிய கட்டுமானத்தில் எமது மண்ணின் மக்கள் அனைவரும் மிகவும் திடமான, இணைப்பான உறுதியுடன் இருப்

> "எதிர் காலத்தில் நல்ல சமூகத்தை நோக்கிய முனைப்பில் விடுதலைப் புலிகள்தீவிரமாகவும், கவனமாகவும் இருக்கிறார்கள் "
> - பேராசிரியர் பீற்றர் சாக்

பதனை அருட்தந்தையின் கூற்று எமக்கு மிகவும் தெளிவுபடுத்தியது. "ஒரு புறம் எல்லையிலே மண்மீட்பிற்கான ஆயுதப்போர் நடந்து கொண்டிருக்கையில், எமக்குள்ளும் நாம் போராட்டம் நடத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்" தலைவரின் இக்கூற்றினை நினைவுபடுத்திய அருட்தந்தை, எமக்குள் இருக்கும் பல்வேறுபட்ட சமூக முரண்பாடுகள் களையப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினார். "எமது மண்ணில் ஏற்படுத்தப்படுகின்ற புதிய சமுதாய அமைப்பில் கலந்து கொள்ளக்கூடிய தகைமையுடனேயே எமது மண்ணிற்கு நாம் திரும்புதல் வேண்டும். இதற்கு நீங்கள் அனைவரும் உங்களைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்"

"சந்திரிகாவின் சமாதான முன்னெடுப்புக்களை வரவேற்கும் அதேவேளை, அவருக்கு முன்னாலும், பின்னாலும் [இராணுவ, பௌத்த மத, இனவாத சக்திகள்] இருக்கின்ற சக்திகள் அவரது நல்லெண்ண முயற்சிகளுக்கு எவ்வளவு தூரம் துணையாக நிற்பார்கள் என்பதனையும், எல்லாவற்றையும் மீறி

அனைத்து எதிர்வுகளுக்கும் முகம் கொடுத்து முழுத்தேசத்தினதும் மக்களினதும் தலைவிதியை இவர் மாற்றி அமைப்பாரா என்பதும் காலத்தின் நிர்ணயமாகவே அமையும்" எனவும் அவர் குறிப்பிட்டார். "உலகெங்கும் வாழுகின்ற அனைத்து தமிழ் மக்களும் ஒன்றிணைய வேண்டிய வரலாற்றுக் காலகட்டம் இது" என்பதனை வலியுறுத்திய அருட்தந்தை இம்மானுவேல் அவர்கள், தமிழீழ மக்களின் பேராட்டத்துடன் அனைவரும் உங்களை இணைத்து கொள்ள வேண்டும் என அறைகூவல் விடுத்தார்.

அடுத்ததாக உரை நிகழ்த்திய சுவீடன் உப்சலா பல்கலைக்கழக பேராசிரியர் பீற்றர் சார்க் அவர்

> "நான் உங்கள் மண்ணில் பிறந்திருந்தால் ஒரு பெண் புலியாகவே இருந்திருப்பேன்"
> - செல்வி. மக் கோனல்

கள், மூன்று தலைப்புக்களில் தனது உரையினை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. எமது போராட்டத்தில் போரும் சமாதானமும், மாவீரர் தியாகம், பெண்புலிகள் என்ற தலைப்புக்களை ஏந்தி ஒரு வித்தியாசமான விரிவுரையினை நிகழ்த்தியமை மக்களுக்கு ஒரு வித்தியாசமான அனுபவத்தினையே கொடுத்தது எனலாம். இடையிடையே தமிழ்வார்த்தைகளையும் உபயோகித்து பேராசிரியர் உரை நிகழ்த்தியமை, தமிழை வெறுக்கும் தமிழர்களின் மனச்

சாட்சியை நிச்சயம் உறுத்தி இருக்கும். தற்போதைய சமாதான முன்னெடுப்புக்களின் முதல்வரான புதிய அரசின் பிரதமர் சந்திரிகாவின் செயற்பாடுகளில் நம்பிக்கை தெரிவித்த பேராசிரியர், அவரது கணவர் விஜயகுமாரணதுங்காவின் கடந்தகால சமாதான நல்லெண்ண



முயற்சிகளையும், அதன் விளைவாய் சிங்கள தீவிர இனவாதிகளால் அவர் கொலையுண்டதையும் நினைவு

படுத்தினார். அன்று, தனது கணவர் செய்து முடிக்க முடியாமல் இருந்ததை இன்று, தான் செய்து முடிப்பதற்காக துணிச்சலுடன் களத்தில் இறங்கி இருக்கின்றார். அத்துடன் சமாதானத்தை விரும்பும் சந்திரிகாவிற்கும் போரை விரும்பும் இராணுவத்திற்கும் இடையிலான இடைவெளி முரண்பாட்டையும் அவர் சுட்டிக்காட்ட தவறவில்லை. விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கு என்றும் தயாராகவே இருந்துள்ளார்கள். கடந்தகால அரசு அதற்குத் தயாராக இருக்கவில்லை என்பதனையும் சுட்டிக் காட்டிய பேராசிரியர், "- சிங்கள இனவாதம் தென்பகுதியில் சற்று தணிந்து வருவதனையும் அவதானிக்க முடிகின்றது" என்றும் கூறினார். அடுத்து பேராசிரியரின் தியாகம் பற்றியதான விளக்கவுரை ஒரு சொல் ஆராய்வாகவே இருந்திருந்தாலும், மாவீரர்களின் தற்கொடையின் உன்னத தன்மையினையும் அவரது உரை தெளிவாக்கியது. மனம், சாட்சி போன்ற போராட்டத்துடன் கலந்தமைந்த தமிழில் வழங்கும் சொற்களின் தன்மை பற்றியும், தனது கருத்தினை வெளிப்படுத்தினார்.

அத்துடன், பெண் புலிகள் பற்றியும் ஓர் விளக்கவுரையினையும் மேற்கொண்டார். "பெண்கள் கடின வேலைகளுக்கு உகந்தவர்கள் அல்ல; அவர்கள் குழந்தையை உருவாக்கும் ஒரு இயந்திரம் என்ற சிலரின் அல்லது சிறுஅமைப்புக்களின் கருத்து உருவாக்கத்திற்கும் முற்றிலும் மாறாக, விடுதலைப்புலிகளின் பெண்புலிகள் விளங்குகின்றார்கள்" என்பதை குறிப்பிட்ட பேராசிரியர், "சமூகத்திலே ஆண்களுக்கு நிகராக பெண்களும் விளங்க முடியும் என்பதை விடுதலைப் புலிகளின் பெண்கள் நிருபித்தும் காட்டி இருக்கின்றார்கள்" எனவும் குறிப்பிட்டார். "பெண் புலிகள் நல்ல சமூகத்தை நோக்கிய முனைப்பில் தீவிரமாக இருக்கிறார்கள்; எதிர் கால தமிழீழ அமைப்பு எப்படி அமைய வேண்டும் என்பதிலும் கவனமாய் உள்ளார்கள்" என தனது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

பேராசிரியரைத் தொடர்ந்து உரை நிகழ்த்திய இலங்கையின் 'இனவெறிக்கு எதிரான அமைப்பு' ஒன்றின் தலைவியாக இருக்கும் செல்வி மக் கோனல், எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மீதான தனது

> "எமது உள்ளூர் உற்பத்தி மேம்பாட்டிற்கு தடையாக அமையும் எந்தப் பொருளையும் இறக்குமதி செய்யமாட்டோம் "
> - அருட் தந்தை இமானுவேல்

ஆர்வத்தினையும், அக்கறையினையும் வெளிப்படுத்தினார். இவர் தமிழீழ மக்களின் போராட்டத்தின் நியாயத் தன்மையினை மிகவும் அறிந்தவராகவே இருந்தார். உலகின் பல்வேறு நாடுகளிலும் நடந்த, நடக்கின்ற இனவெறி செயற்பாடுகளை எமது பிரச்சினையுடன் ஒப்பிட்டுத் தனது கருத்தினைத் தெளிவுப

டுத்தினார். அத்துடன் பிரித்தானியா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின், சிறிய நாடுகளுக்கு எதிரான புதிய அடக்குமுறைச் செயற்பாடுகளையும் செல்வி மக் கோனல் விபரிக்கத் தவறவில்லை. தமிழ் மக்களின் இன்றைய அவல நிலைக்கு, பிரித்தானிய அரசு ஒரு காரணியாக இருந்ததையும் அவர் நினைவுபடுத்தினார். பல்வேறு கால கட்டங்களிலும் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள இனவெறி அரசு நடாத்திய இனவெறி தாக்குதலை நினைவுபடுத்திய மக் கோனல், இறுதியாக 83 யூலையில் நடைபெற்ற தமிழின படுகொலைகள் தன்னை ஆழமாக பாதித்ததையும், அதன் துயரவடுக்கள் தன் ஆழ் மனதில் இன்றும் பதிந்து உள்ளது என்பதை



யும் உணர்வு பொங்கக் கூறிய போது, சபையோரின் அடிமனக் கதவுகள் தட்டப்பட்டே இருக்கும். ஐரிஸ் விடுதலைப் போராட்ட அரசியல் வேலைதிட்டங்களில் ஈடுபட்டுவரும் ஒருவராகவும், பெண் விடுதலையின் பால் ஆர்வம் உடையவராகவும் இருக்கும் மக் கோனல், எமது தமிழீழ பெண் போராளிகளின் செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடுகையில், "அவர்கள் எதிர் காலத்தில் ஒரு புதிய எழுச்சிகரமான பெண்சமூக அமைப்பைக் கட்டி எழுப்புவார்கள்" என தனது ஆழமான நம்பிக்கையினை வெளிப்படுத்தினார். தமிழ் மக்கள் பலருடன் பரீட்சயமான செல்வி மக் கோனல், அண்மையில் இலண்டனில் நடைபெற்ற தமிழ் வைத்தியர்களின் மகாநாடு ஒன்றில் கலந்து கொண்டு, தமிழீழத்தில் இருந்து வருகை தந்திருந்த பலரையும் சந்தித்து அவ்விடத்து யாதார்த்த நிலையினை ஆர்வத்துடன் கேட்டு அறிந்ததுடன், தான் அறிந்து கொண்ட விடயங்களை இச் சபையோரிடமும் பகிர்ந்து கொண்டார். எமது தமிழீழ விடுதலைப் போரட்டத்தை உளப்பூர்வமாக நேசிக்கும் மக் கோனல், "வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் உங்களால் முடிந்த வழிவகைகளில் உங்களின் விடுதலைக்குப் போராடுங்கள், கை கொடுங்கள்" என வேண்டிக் கொண்டார். "நியாயமான உங்கள் போராட்டம் நிச்சயம் வெற்றி

**தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...**

# எமக்கென்றொரு கைத்தொழிற் கொள்கை

**கைத்தொழில் சிறப்பிதழ்**

**தமிழீழத்திலிருந்து**
**வே. பாலகுமாரன்**

21 ஆம் நூற்றாண்டு நெருங்கும் நிலையில், கைத்தொழில்மயமாகிய நாடுகள் என்கின்ற நிலையில் பல மூன்றாம் உலகநாடுகள் அமையும் நிலையில், நவீன தொழில்நுட்பம் என்பது ஒரு புரட்சியாக, உலகத்தையே ஒரு கிராமம் ஆக்கி உயர்தொழில்நுட்ப பெருஞ்சந்தையொன்று உருவாக்கப்படும் இன்றைய நிலையில், தென்னாசியாவின் மூலையொன்றிலே தனது இருப்பை உறுதிப்படுத்தி, விடிவைக் காணப்போகும் தமிழீழம், இப்புதிய உலக ஒழுங்கில் தன்னை எவ்வாறு பொருத்திக்கொள்ளப் போகின்றது என்கின்ற உண்மையான ஆர்வம், அங்கலாய்ப்பு இன்று பலரிடையே நிலவுகின்றது.

ஏனென்றால் கைத்தொழிற் புரட்சியால் தாக்கமுற்ற, அதனால் கைத்தொழில் மயமாக்கல் நடைபெறாத ஒரு தேசம், அன்னியர் பிடியிலிருந்து விடுவிக்கப்படாமையால், நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் தாக்கமும் ஏற்படாத இந்த தேசம், எவ்வாறு பொருண்மிய, அதிலும் குறிப்பாகத் தனது கைத்தொழில் கொள்கையை வகுக்கப்போகின்றது என்பது பற்றி, பலரும் வியப்புடன் நோக்கக்கூடும்.

## தமிழீழ கைத்தொழில் வளர்ச்சிக்குத் தடையாகவுள்ள அடிமை மனோபாவம்

முன்னர் ஆங்கிலேயர் காலத்தில், தமிழீழம் சிங்கள தேசத்துடன் இணைக்கப்பட்டபோது, எமது தாயகத்தின் பௌதீகத் தோற்றம் மட்டும் மாற்றம் பெறவில்லை. எமது முன்னோர் மனதிலும் எண்ணமாற்றங்கள், தாழ்வுச்சிக்கல்கள் என தமது உள்ளார்ந்த ஆற்றலை மிகக் குறைவாக மதிப்பிட்டு, அன்னியத்தன்மையை பெரிதும் வியந்து பாராட்டும் அடிமை மனோபாவத்தின் உளவியல் வெளிப்பாடுகள் வேரூன்றின. அவை இன்னமும் நீடிக்கின்றன. எனவே, அடிமைத்தளையை அறுத்து மனத்தளவில் உறுதியான நம்பிக்கைகள்கொண்ட எண்ணங்கள் உருவாகவேண்டிய அவசியம் இப்போது பொருண்மியத்துறையிலும் உணர்த்தப்படுகின்றது. அந்தவகையிலே கைத்தொழில்துறையிலும் பழைய மனோநிலைகள் அற்ற, புதிய சூழலுக்குப் பொருந்திய புத்தூக்கமுள்ள, புதுமையான கைத்தொழில் கொள்கையொன்று வகுக்கப்படவேண்டியது அவசியமாகின்றது.

அதிலும் குறிப்பாக, இன்று பல பின்னடைவுகளுக்குக் காரணமாக போர்க்கால சூழ்நிலை காண்பிக்கப்பட்டாலும் அவற்

> **நாம் வழமையான முறையில் சிந்திக்காமல் எமது சூழலுக்குப் பொருத்தமான முறையில் எமது வளங்களைச் செவ்வனே பயன்படுத்தி சிறிய , நடுத்தர கைத்தொழில்களை உருவாக்கமுடியாதா? உருவாக்கமுடியும் . உருவாக்கவும் வேண்டும்.**

றில் பல, 'தப்பித்தல் காரணங்கள்' தான்என்று இன்று உணரப்படுகின்றன. ஏனென்றால், முனைப்பான போராட்ட சூழலுக்கு முன்னர், தமிழீழப் பகுதியில் தொழில்முனைவோர் புதிதாகத் தொழில்களை ஆரம்பிக்க, முதலிட, தொழில் ஆபத்துக்களை எதிர்நோக்கி எதிர்நீச்சல்போட்டுப் போராட, பெருமளவில் முன்வந்ததாக வரலாறு இங்கில்லை. எனவே, ஒருசில விதிவிலக்காளர் தவிர, எங்கும் எப்போதும் 'பூரணபாதுகாப்பை' எதிர்பார்க்கின்ற மனோபாவம், இன்று மாறவேண்டும். இதுவே எமக்கான கைத்தொழில் கொள்கையின் தோற்றுவாய்க்கு வித்திடும் மனமாற்றமாகும்.

அன்றும் சரி; இன்றும் சரி; மாற்றான் வளர்ச்சிகண்டு அதிசயிப்பதேயன்றி, அவ்வளர்ச்சியின் பின்னணிகள், சூழல்கள் என்பன பற்றியோஅதன் பின்னாலான உழைப்பு, திறமை, அதன் சாதகம், பாதகங்கள் என்பன பற்றியோ எம்மவர் பெரிதும் அறியவிரும்பவில்லை. 15 ஆம், 16 ஆம் நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில், பல நவீன கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றைச் சந்தைப்படுத்துவதற்கான குடியேற்ற நாடுகள் உருவாக்கப்பட, சர்வதேசவணிகம் விரிவடைந்தது. அதன்மூலம் சுரண்டப்பட்ட குடியேற்ற நாடுகளின் வளங்கள், மேற்குலகின் கைத்தொழில் வளங்களுக்கு அத்திவாரமாக அமைந்தது. இவ்வாறாக மேற்குலகின் பாரிய கைத்தொழிற்சாலைகள், அவற்றையொட்டிய கைத்தொழில் நகரங்கள் என விரிவான தோற்றப்பாடாக, 'கைத்தொழில் புரட்சி' ஏற்பட்டபோது நிகழ்ந்தபோது நாம், நாம் யாரென்பதையே அறியாத குருட்டு அடிமைத்தனத்தில் மூழ்கியிருந்தோம்.

## கைத்தொழில் வளர்ச்சியில் சோவியத்தினதும் இந்தியாவினதும் மறுபக்கம்

இதன்பின், சிங்களதேசம் கைத்தொழில் மயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டபோது, எமது பகுதி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டதும் நாமறிந்த உண்மை. இப்போது, நவீன கைத்தொழில் வளர்ச்சியின் எல்லையைக்கண்ட நாடுகள் பற்றி நாம் வியக்கும்போதும், ஏற்கும் போதும் அவற்றின் மறுபக்கத்தையும் பார்க்க தவறி விடுகின்றோம். புதிதாகக் கைத்தொழில்மயமாகிய நாடுகள் அதற்காகக் கொடுத்த விலைகள் பற்றியோ அல்லது இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு சூழல் மாசடைந்து நஞ்சுச் சூழலில் மக்கள் வாழும் நிலைகள் பற்றியோ பாரிய கனரகத் தொழில்களை மட்டும் நம்பி வளர்ந்த சோவியத், அதன் பாணியில் இந்தியா போன்ற நாடுகள் படும்பாடுகள் பற்றியோ அல்லது பெரும் கைத்தொழில் மயமாக்குதலுக்கு உட்படாத நிலையிலும் வியத்தகு அறிவியல் முன்னேற்றங்கள், உயர் தொழில்நுட்ப வளர்ச்சிகள் கண்ட நாடுகள் பற்றியோ நாமறிதல் அவசியம். அப்போதுதான், 21 ஆம் நூற்றாண்டின் புதிய சூழலுக்கு முகம்கொடுக்கத்தக்க வகையில், எமக்குத் தேவையான உயர்தொழில்நுட்பத்தைப் பெறுவதற்கான சரியான தெரிவை நாம் செய்யமுடியும்.

1917 ஆம் ஆண்டுப் புரட்சியின்பின், மிகக்குறுகிய காலத்திலே மின்மயமாக்கல் மூலம் பாரிய கனரகத் தொழிற்சாலைகளை உலகிலேயே வியக்கும் வண்ணம் கட்டிய நாடு சோவியத் ஆகும். இன்று அவற்றில் மிகப்பெரும்பாலானவை மூடப்பட்டதோடு, இருக்கும் சிலவும் மக்களின் நாளாந்த தேவைக்கான பாவனைப் பொருட்களை உருவாக்கும் ஆலைகளாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. புரட்சியின் பின்னாலான காலகட்டத்திலேயே சோவியத் கைத்தொழில் மயமாக்கல் பற்றி முன்வைக்கப்பட்ட குறைபாடாக, மக்களின் நாளாந்த தேவைக்கு உதவும் பற்பசை, சவர்க்காரம் போன்ற பொருட்களைக்கூட தரமாகத் தயாரிக்க அதிக ஆர்வம் காட்டாமல், பெரும் விண்வெளித் தயாரிப்புக்களிலும் ஆயுதத் தயாரிப்பிலுமே சோவியத் ஈடுபட்டமை கருதப்படுகின்றது. அதுபோலவே இந்தியாவின் கைத்தொழில் மயமாக்கலும் சோவியத் பாணியைப் பின்பற்றியமையால், இன்று பலத்த நெருக்கடிகளைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றது. இத்தகைய பட்டறிவுகளை, நாம் எமக்கான ஆலோசனைகளாகக் கருதி ஆராயமுடியும்.

## புதிதாக கைத்தொழில் மயமாகிய கிழக்காசிய நாடுகளின் மறுபக்கம்

அதுபோலவே மூன்றாம் உலகநாடுகள், குறிப்பாகக் கிழக்காசியாவில் புதிதாகக் கைத்தொழில்மயமாகிய நாடுகள் பற்றி வியக்கும்போது, அவற்றின் மறுபக்கத்தையும் பார்க்கவேண்டும். இத்தகைய வளர்ச்சிக்கு உதாரணமாகக் காட்டப்படும் யப்பானுக்கு, இன்று வகைதொகையற்று வளர்ந்த தனது உயர் தொழில்நுட்ப சாம்ராச்சியத்தை இனி எவ்விதம் பராமரிப்பது என்பதே பெருத்த பின்னடைவாக மாறியிருக்கின்றது. இயந்திரத்தனமான உழைப்பு யப்பானிய மக்களின்

> **"எமது உள்ளார்ந்த ஆற்றலைக் குறைவாக மதிப்பிடாமல், அடிமைத்தளையை அறுத்தெறிந்துவிட்டு, மனத்தளவில் உறுதியான நம்பிக்கையான எண்ணங்களை உருவாக்கி எமது புதிய சூழலுக்கு பொருத்தமான - புத்தூக்கமுள்ள புதிய கைத்தொழில் கொள்கையை வகுக்கவேண்டும்."**

மனோநிலையைப் பெரிதும் பாதித்துள்ளது. யப்பானிய முதலாளிய பொருண்மிய ஆட்சிமுறையில் ஊழலும், வன்முறையுமே பிரிக்கமுடியாத நிறுவனமயப்படுத்தப்பட்ட அங்கங்களாக இருக்கின்றது. இவற்றின் இழிவான பக்கங்கள் எழுதத்தரமானவையல்ல; இவற்றின் விளைவு, உலகிலே வளர்ச்சியடைந்த நாடுகளில் ஆகக்கூடிய தற்கொலை விகிதம்கொண்ட நாடாக யப்பான் மாறியிருக்கின்றது. இன்று யப்பானில் மிக அதிகமாக விற்பனையாகும் நூல் 'இலகுவாகத் தற்கொலை செய்வது எப்படி' என்ற நூலேயாகும். இந்நூலில் தற்கொலையாளர் தெரிவுசெய்யவேண்டிய முறைகள், அதற்கு ஏற்ற இடங்கள் எல்லாமே மிகவிபரமாக உள்ளன. இப்போது யப்பானில் தற்கொலை செய்வோர் அருகில் இந்நூல் காணப்படுகின்றதாம். அதுபோலவே, அதிநவீன வளர்ச்சியால் இயற்கை உணர்வுகளோடு ஒட்டாத செயற்கை வாழ்க்கைமுறைமை, மனிதம் இல்லாத பொறிகள் தீர்மானிக்கும் வாழ்க்கை உருவாக்கும் வக்கிரபுத்திகொண்ட மனித செயற்பாடுகள், இன்று அமெரிக்க சமுதாயத்தின் அடிப்படைகளையே ஆட்டம் காணவைத்துவிட்டது. இன்றைய அமெரிக்காவின் இளவயது வாழ்க்கை மட்டும் அல்ல, பச்சிளம் பாலகரின் பாங்கான வாழ்க்கையும் பறிபோய்விட்டதாக அமெரிக்க சமூகவியலாளர்கள் இப்போது அலறுகிறார்கள்.

புதிதாகக் கைத்தொழில்மயமாகிய கிழக்காசிய நாடுகளில் மறுபக்கம் எப்படி இருக்கின்றது? தென்கொரியா, தாய்வான், தாய்லாந்து, இந்தோனேசியா இவற்றின் வளர்ச்சி விகிதம் எமது வாயைப் பிளக்கச்செய்யும் அதேவேளை, இந்நாடுகளின் தொழிலாளர் அணிகள், உலகிலேயே மிகமோசமான ஆலை விபத்துக்கள் அதிகம் நடைபெறும் வேலைத்தளங்களில் ஆகக்கூடிய வேலைநாட்கள் உழைப்பதும், சேரிப்புறங்களில் புற்றீசல்போல் வாழ்ந்துமடியும் கதைகளும் நாம் அறியவேண்டிய பயங்கர உண்மைகள் ஆகும். மனித விழுமியங்கள் மறுக்கப்பட்டு, பெண்கள், குழந்தைகள் பாலியல் வணிகப்பொருட்கள் ஆக்கப்படுவதும், ஒருசிறு ஆளும் வர்க்கத்தினதும் அதனைச்சார்ந்தோரினதும் நன்மைக்காக உழைத்துமடிவதும் புதிய கைத்தொழிற்கொள்கை என நாம் கொள்ள முடியுமா? இந்தக் காரணிகள், இருப்பவனுக்கும் இல்லாதவனுக்கும் இடையே உள்ள வருமான ஏற்றத்தாழ்வுகள், எவ்வளவு தூரத்திற்கு அகன்று செல்கின்றன என்பதை வெளிப்படுத்துகின்றன. எனவே இந்நாடுகள் கண்ட வளர்ச்சி என்பது என்ன? மோசமான சூழலில் நச்சுப்பொருள் கலந்த காற்றைச் சுவாசித்து, நிறையக்குடித்து வாழும் மனிதவர்க்கம் ஒருபுறம்; உயர் நவீன வாழ்க்கைத் தரத்தோடு புதிதாகத் தோன்றும் மேல் தட்டு வர்க்கம் ஒருபுறம், இதுதான் தென்கிழக்காசிய நாடுகள் அடைந்துள்ள வளர்ச்சியின் மறுபக்கம் ஆகும்.

## எமக்குப் பொருத்தமான கைத்தொழில்கள்

எனவே நாம் மேற்கூறிய நாடுகளைப் போல் வழமையான முறையில் சிந்திக்காமல், எமது சூழலுக்குப் பொருத்தமான முறையில் எமது வளங்களை செவ்வனே பயன்படுத்தி சிறிய, நடுத்தர நேர்த்தியான கைத்தொழில்களை எமது வேளாண், கடற்றொழில் துறைகளை உள்ளடக்கி உருவாக்கமுடியாதா? அதற்கான மிகப்பொருத்தமான உயர்தொழில்நுட்ப அறிவை ஏன் நாம் தெரிவுசெய்யக்கூடாது. புதிய உலக ஒழுங்கில், உலகத்தையே ஒரு கட்டுப்பாடு அற்ற வணிகச் சந்தை ஆக்குவதற்குப் பொதுவாக முயன்றுகொண்டு, அதேசமயம் தமது நலன்களை மட்டுமே மையமாக வைத்துக்கொண்டு, செயற்படும் புதிய முதலாளியங்களின் ஏவல் போட்டியில் நாம் பகடைக்காய்கள் ஆவதில் என்ன பயன்? அதேசமயம் எமக்காக எம்முடைய விசேடித்த வளங்களைப் பயன்படுத்தி, அவற்றை நவீன மயமாக்கலுக்கு உட்படுத்தி, அவற்றின் மூலம் உலக வர்த்தகத்தில் எமக்கென ஒரு இடத்தை நாம் பெறமுடியாதா? இவை பற்றி நாம் ஏன் சிந்திக்கக்கூடாது. விடியப்போகும் எமது தேசத்தின் புதிய கைத்தொழிற்கொள்கை இவ்வகையில் ஏன் அமையக்கூடாது? சிந்தித்துச் செயற்படுவோம். ■

---

**துணிவுள்ள மனிதம்**

புயங்கள் அசைந்திடப் பயங்கள் அகன்றிட
சுயமுடன் உழைப்பவர் தேசம் - இது
சுதந்திர மண்ணின் வாசம்! - கொடும்
பயங்கர வேலையைத் தயங்காது முடிக்கும்
'துணிவுள்ள மனிதம்' இங்கே! - இதுபோல்
இயங்கிடும் நாடெது எங்கே,

மின்வலு இன்றேல் தன்வலு இழக்க
மண்புழு அல்லடா தமிழர் - இவர்
உடன்பழுவுக் கஞ்சிடா மனிதர் - இங்கே
பின்வலு ஊட்டித் தன்திறன் காட்டி
இயந்திர மெல்லாம் இயக்கும் - எங்கள்
முயற்சியை உலகமே வியக்கும்

எதிர்ப்பவர் படையை விரட்டுவர் தமிழர்.
என்பதால் இங்குண்டு வீரம் - எதையும்
வென்றுமே வாழ்ந்திடும் நேரம் தடை
விதித்தெவர் எமக்கு விலங்கிட முடியும்?
வல்லவர் யாரென்று தெளிவாய் - எம்மை
விளங்கிட வில்லையேல் அழிவாய்!

எத்தொழில் எனினும் அத்தொழில் தன்னில்
புத்தெழில் காண்பதே எண்ணம் - இங்கே
புதுமைகள் விளைவது திண்ணம் - ஈழம்
கைத்தொழில் நாடாய் வித்தக உலகில்
பூத்தெழ வேண்டுமே என்று - மனம்
வைத்து நாம் உழைப்போமே இன்று!

வேலணையூர் சுரேஸ்

# கைத்தொழிற்துறை ரீதியான சுதந்திரத் தமிழீழத்தின் எதிர்காலத் தேவைகள்

'பீனிக்ஸ் பறவைகள்' அவைகளை எரித்த சாம்பலிலிருந்து உயிர்பெற்றுச் சிறகடிப்பதாக ஐதீக்கக்கதைகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட ஒரு தசாப்தகால முனைப்பான ஆயுதப்போராட்டத்தினால் சிதைந்துபோய்க்கிடக்கும் எமது கைத்தொழிற்றுறைக்கு, தன் சொந்தச் சாம்பலிருந்து சிறகடித்துப் பறக்கவேண்டிய காலத்தின் தேவையும் (சுதந்திரத் தமிழீழத்தின் கைத்தொழிற்றுறைக்கு) இருக்கப் போகின்றது.

எமது எதிர்காலத்தேவைகள் எப்படி இருக்கும் என்பதைப் பின்வரும் நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. **மனிதவளம் தொடர்பான தேவைகள்.**
2. **மூலவளம் தொடர்பான தேவைகள்.**
3. **தொழில்வளம் தொடர்பான தேவைகள்.**
4. **பொருள்வளம் தொடர்பான தேவைகள்.**

## 1. மனிதவளம் தொடர்பான தேவைகள்.

தமிழீழ மக்களிடையே மூளைசாலிகளுக்கும் உடலுழைப்பாளிகளுக்கும் பஞ்சமில்லாத காலமொன்றிருந்தது. மூளைசாலிகளும், நாட்டைவிட்டு வெளியேறிய உழைப்பாளிகளது தொழிற்றுறைகளும் முடக்கப்பட்ட நிலையிலிருந்து, உழைக்காதவன் எவனும் இங்கில்லை என்ற பொற்காலம் இங்கு வரவேண்டும். மூளைசாலிகள் இங்கு திரும்பிவரமாட்டார்கள் என்று கொள்கையளவில் எடுத்துக்கொண்டால், உடலுழைப்புத் தவிர்ந்த ஏனைய பயிற்றப்பட்ட துறைகளில் எமது தேவை பாரியதாக இருக்கப்போகின்றது.

1993 இல் மதிப்பிடப்பட்ட சனத்தொகை அடிப்படையில் 29, 99, 000 எனப்பார்த்தால், 2000 ஆம் ஆண்டளவில் குறைந்தது 37, 83, 000 குடிமக்களாவது தமிழீழத்தில் இருப்பார்கள். இவர்களில் குறைந்தது 7, 56, 600 பேருக்காவது (20%) வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படவேண்டும்.

எனவே, அபிவிருத்தியை நோக்கியதாக எமது கல்விக் கட்டமைப்பு மாற்றப்படவேண்டும். சிலவேளைகளில் எமது அபிவிருத்திக்காக வெளிநாடுகளில் இருந்து தொழில்நுட்பங்களை இங்குகொண்டுவர நேரலாம். அப்போது அத்தொழில்நுட்பங்களை உள்வாங்கக்கூடிய திறமைசாலிகள்

**"எமது பகுதிகளில் ஏற்கனவே தேங்காய், எள், இலுப்பை, ஆமணக்கு, வேம்பு முதலிய விதைகளையும் தற்போது சூரிய காந்தி விதைகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது"**

இங்கே உருவாக்கப்படவேண்டும். அவர்களோடு இணைந்து செயலாற்ற ஏனைய மட்டங்களிலான தொழில்நுட்பம்சார் தொழிலாளர்கள் பயிற்றப்படவேண்டும்.

எமது மக்களின் ஆக அடிப்படைத் தேவைகளைவிட்டால், அடுத்ததாக இந்தக் கல்விக்கட்டமைப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. எனவே தொழில் முன்னிலைப்பாடங்களை எமது பாடவிதானங்களில் புகுத்தி, ஆகக்குறைந்த கல்விமட்டத்திலும் உற்பத்தித்திறன்வாய்ந்த ஆளணியினர் வெளிவரக்கூடியதான கட்டமைப்பு ஒரு மிகமுக்கியமான தேவையாகும். இதற்கான கல்வி நிலையங்களைத் தமிழீழத்தில் பரவலாக அமைப்பதன் மூலம் வளங்களை நோக்கிய குடிசனப் பெயர்வையும், பரவலான வேலைவாய்ப்புக்களையும் ஏற்படுத்தமுடியும்.

## 2. மூலவளங்கள் தொடர்பான தேவைகள்

### 2.1. கடல்வளம்

தமிழீழத்தில் அமையப்போகும் பெரும்பாலான நிர்வாக மாவட்டங்கள் கடலோரமாக அமையப்போகின்றன. மிகநீண்டதும், இரண்டு கடலடித்தள மேடைகளை உள்ளடக்கியதுமான கடற்பிரதேசம் எமதாகப்போகின்றது. எனவே கடல்சார்ந்த தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்பது வெளிப்படை. 1983 இன் தரவுகளின்படி தமிழீழத்தின் மீன் உற்பத்தி 1, 04, 315 மெற்றிக்தொன்கள் ஆகும். இது முழு இலங்கையினதும் உற்பத்தியில் 56% ஆகும். இது எமது தன்னிறைவுத் தேவைக்கு மேலதிகமானதாகும். இந்தத் தேவைகளிலே பின்வருவனவும் உள்ளடங்குகின்றன.

1. **கரையோர ஆழ்கடல் மீன்பிடிக்கலங்களின் உற்பத்தி.**
2. **கரையோர ஆழ்கடல் மீன்படி வலைகள் உற்பத்தி.**
3. **கரையோர ஆழ்கடல் மீன்பிடிக்கான ஏனைய உபகரணங்கள் உற்பத்தி.**
4. **பனிக்கட்டி உற்பத்தி.**
5. **மீன்களைத் தகரத்திலடைத்தல்.**
6. **நண்டு, இறால், சிங்கறால், கணவாய், கடலட்டை, சுறாச் செட்டை முதலியவற்றை பதனிட்டு ஏற்றுமதிசெய்தல்.**
7. **சங்கு, சிப்பிகளிலான ஆபரண உற்பத்தி, முத்துக்குளிப்பை இயந்திரமயமாக்குதல்.**
8. **குளிரூட்டும் களஞ்சியங்களை நிறுவுதல்.**
9. **நன்னீர் மீன்வளர்ப்பு, இறால், மட்டி வளர்ப்பு.**
10. **மீன்களை கரைநோக்கி இழுப்பதற்கான செயற்கைப் பவளப்பாறைகளை நிறுவுதல்.**
11. **தற்பொழுதே தன்னிறைவு இலக்கை எட்டிவிட்டிருக்கும் உப்பு உற்பத்தியையும், உப்புசார் தொழில்களையும் மேம்படுத்தல் அல்லது புதிதாக நிறுவுதல்.**

### 2.2. பனை, தெங்குவளம்

தமிழீழத்தில் ஏறக்குறைய 1, 09, 55, 000 பனைகளும் 20, 98, 000 தென்னைகளும் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இவைகளில் கிட்டத்தட்ட 5% ஆன பனைமரங்களே தற்போது பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் பயன்பாட்டை, படிப்படியாக 60% ஆக்கி பின்வரும் வசதிகளை ஏற்படுத்தவேண்டும்.

1. **பதனீர் உற்பத்தி.**
2. **வினாகிரி, மதுசாரம், மது முதலியவற்றின் உற்பத்தி.**
3. **எமது நுகர்வுக்கு ஆண்டுதோறும் 67, 000 மெற்றிக்தொன் சீனியும், 2000 மெற்றிக்தொன் சர்க்கரை அல்லது பனங்கட்டியும் தேவை. இவைகளை உற்பத்திசெய்யும் வசதிகள் உருவாக்கப் படவேண்டும்.**
4. **தும்படித்தல், கயிறு திரித்தல் ஏனைய தும்பு, கயிற்று உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதிக்காகத் தயாரித்தல்.**
5. **பனம்பழச்சாறு அடிப்படையிலான உணவுப்பொருட்களின் உற்பத்தியும் ஏற்றுமதியும்.**

### 2.03. புகையிலை

எமது விவசாயிகள் புகையிலையைத் தரமாகப் பயிரிடுவதில், திறமைசாலிகள். சிகரட் புகையிலையை சர்வதேச தரத்துக்கு உற்பத்திசெய்தால்,

**"உழைக்காதவன் எவனும் இங்கில்லை என்ற பொற்காலம் வரவேண்டும்"**

1. **சிகரட் புகையிலை ஏற்றுமதிக்கான வசதிகள்**
2. **சிகரெட் உற்பத்தி**
3. **சர்வதேச தரம் வாய்ந்த சுருட்டு உற்பத்தியும் ஏனைய புகையிலை சார்ந்த உற்பத்திகளும்.**

### 2.04 கால்நடை வளம்

தமிழீழத்தின் வன்னி மாவட்டங்களிலும் தென்தமிழீழத்திலும் 3, 00, 000 க்கு மேல்பட்ட பால்தரக் கூடிய பசுக்கள், எருமைகள், ஆடு முதலியன உண்டு. பால் தராத ஏனைய பசுக்கள், ஆடுகள் பன்றி, எருமை முதலியனஅண்ணளவாக3, 50, 000 உண்டு. இவை இறைச்சிக்காகப் பயன்படுத்தப்படலாம். பால் கொடுத்துக் களைத்த மாடுகளையும் இறைச்சிக்குப் பயன்படுத்தலாம். தமிழீழத்திலே ஒரு மாதத்துக்கு அண்ணளவாக 21, 000 கால்நடைகள் வெட்டப்படுகின்றன. இவற்றின் தோல்கள் பெறுமதியான மூலப் பொருட்களாகும். எமது கால்நடைகளின் தரம் மேம்படுத்தப்படுவதோடு பின்வரும் வசதிகள் அவசியமாகத் தேவைப்படும்.

1. **நவீன பண்ணை முறை வளர்ச்சிக் காலகட்டத்தில், பால் கறப்பதை இயந்திர மயமாக்குதல்.**
2. **பால் சேகரிப்பு அமைப்பு**
3. **பதனிடல் மையங்கள்**
4. **பால், இறைச்சி இடத்துக்கிடம் எடுத்துச் செல்வதற்கான குளிரூட்டப்பட்ட அமைப்புகள்.**
5. **விநியோக வலைப்பின்னல் அமைப்பு**
6. **ஏனைய பால், இறைச்சி தொடர்பான உற்பத்தி மையங்கள் (பால் பவுடர்) வெண்ணெய், சீஸ், யோகட் முதலியன.**
7. **தோல் பதனிடல்**
8. **தோற்பொருட்கள் உற்பத்தி மையங்கள்**
9. **பொதியிடல் பொருட்கள் உற்பத்தி**

### 2.05 கனியவளங்கள்

#### 1. களிமண்

ஒட்டிசுட்டான், காண்டாவளை, முருங்கன் போன்ற இடங்களிலுள்ள மண்ணைப் பயன்படுத்தி பீங்கான் பொருட்கள், ஓடு, செங்கல் முதலியன உற்பத்தி செய்வதற்

**கைத்தொழில் சிறப்பிதழ்**

குமான வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலதிகமாக ஒரு சீமெந்து அரைக்கும் ஆலையும் வேண்டும். இதற்கு குடாநாட்டின் சுண்ணக்கல்லையும் பயன்படுத்தலாம்.

#### 2. கண்ணாடி மணல்

குடத்தனைப் பகுதியில் காணப்படும் காண்ணாடித் தயாரிப்புக்குகந்த மணலை பயன்படுத்தக் கூடிய 'கண்ணாடித் தொழிலகம்' ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

#### 3. இல்மனைற்

புல்மோட்டையிலிருந்து செம்மலை வரை படியும் இம்மணல், பெருமளவு அந்நியச் செலவாணியை ஈட்டித் தரக்கூடியது. புல்மோட்டையில் ஆகக்கூடிய உற்பத்தியாக 33, 873 மெற்றிக் தொன் இல்மனைற்றும் (1986) 13, 301 மெற்றிக் தொன் (1981) றூட்ரைலும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இவைக்கான படிவுகள் இன்னும் சிறிதுகாலமே கிடைக்கும் என்பதால் இவற்றை சேகரித்து, திட்டமிட்ட அளவுகளில் சந்தைப்படுத்துவதன் மூலம் அந்நியச் செலவாணியை அதிகரிக்கமுடியும்.

#### 4. ஏனைய கனியங்களுக்கான ஆய்வுகள்

உலோகப் படிவுகள், பெற்றோலியம், இயற்கை வாயுக்கள், பெறுமதி குறைந்த கற்கள் மற்றும் ஏனைய நிலத்தடி வளங்கள் முதலியவற்றுக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 2.06 விவசாயம் சார் வளங்கள்

#### 1. தானியங்கள், நெல் பதப்படுத்தல், களஞ்சியப்படுத்தல்

நெல் எமது மக்களின் பிரியத்துக்குரிய பிரதான உணவாகும். நெல்லை அரிசியாகச் சேமிப்பதைவிட நெல்லாக நீண்டகாலம் சேமித்துவைக்க முடியும். 1990 ஆம் ஆண்டில் நெல் 6, 09, 000 மெற்றிக் தொன்களும், ஏனைய உபதானியங்களாக 16, 000 மெற்றிக் தொன்களும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் 1/3 பங்கு அளவில்தான் தானியங்கள் நிலையான இருப்பில் இருக்கும் என எடுத்துக்கொண்டாலும், 2000 மெற்றிக் தொன் கொள்வனவுகொண்ட 100 களஞ்சியங்களாவது தேவைப்படும். இந்தக் களஞ்சியங்களில் பெரும்பகுதி கேள்விப் பகுதியில் அமைக்கப்படுவதோடு, தானியங்களை உலர வைப்பதற்கான வசதிகளும் இணைக்கப்பட வேண்டும். தற்போது சுயதேவைப் பூர்த்தி மட்டத்திலுள்ள நெல்லின் தரத்தையும் விளைவையும் மேம்படுத்தி, அறுவடையின் பின்னான இழப்புக்களைக் குறைத்து மேலதிக உற்பத்தியை ஏற்றுமதி செய்யவும்

**தொடர்ச்சி 8 ஆம் பக்கம்...**

# கைத்தொழிற்துறை ரீதியான...



**கைத்தொழில் சிறப்பிதழ்**

**தமிழீழத்திலிருந்து**
**வி. பி. யோசேப்**

வழிசெய்யப்பட வேண்டும். இதற்கென ஒரு மத்திய தானிய அதிகாரசபை நிறுவப்படவேண்டும். இந்தச் சபைக்கு பரவலான கொள்வனவு, களஞ்சியப்படுத்தல், அரிசியாக்கல், போக்குவரத்து , வலைப்பின்னல் அமைப்புகள் இருக்க வேண்டும். களஞ்சியங்கள் பற்றிக் கருத்திலெடுக்கும்போது, சமீபகாலங்களில் சிறீலங்காவில் பயன்படுத்தப்பட்ட உருளை வடிவ சீமெந்து குதங்கள் (SILOS) மற்றும் சொரியல் குதம்(BULK WARE HOUSE) முதலியன தோல்வியடைந்துள்ளதற்கான காரணிகளையும் ஆராய வேண்டும்.

2. அரிசி, மற்றும் தானியங்களிலிருந்து பியர், மோல்ற் போன்றவற்றை உருவாக்கும் அமைப்புகள், தவிட்டு எண்ணெய் பிரிக்கும் அமைப்புகள், உமியிலிருந்து சிப்போட் தயாரிக்கும் அமைப்புகள் முதலியன நிறுவ ஏற்பாடு செய்யவேண்டும்.

3. மரக்கறிகளை பதனிட்டு தகரத்திலடைத்தல், பழச்சாறுகள், பழப்பாகு, கோடியல், அச்சாறுகள், ஊறுகாய்கள் முதலியவற்றை தயாரிக்கக் கூடிய வசதிகளை ஏற்படுத்த வேண்டும். வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புள்ள மரக்கறி, பழவகைகள் பதனிட்டு, ஏற்றுமதி செய்யக்கூடிய நிறுவனங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

**சிறீலங்காவுக்கு 2-வது பெரிய வெளிநாட்டுச் செலவாணித் தொகையைப் பெற்றுக் கொடுக்கும் மூலமாக, வெளிநாட்டில் வதிவோர் அனுப்பும் பணம் இருக்கின்றது. இவர்களில் 65 வீதத்திற்கும் அதிகமானோர் தமிழீழப் பிரஜைகளே. இவர்களிடையே பிரச்சாரத்தை மேற்கொள்வதன் மூலம் பெருமளவு நிதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.**

### 2.07 எண்ணெய் வித்துக்கள் - எண்ணெய் பிரிப்பு

எமது பகுதிகளில் ஏற்கனவே தேங்காய், எள், இலுப்பை, ஆமணக்கு, வேம்பு முதலிய விதைகளையும் தற்போது சூரியகாந்தி விதைகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இவைகளிலே தேங்காய் எண்ணெய், எள் எண்ணெய், இலுப்பை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் முதலியன எமது உணவுத் தேவையை (ஒரு கோடியே 10 இலட்சம் லீற்றர்) பூர்த்தி செய்யக்கூடியனவாகும். ஆமணக்கெண்ணெயில் உராய்வு நீக்கி எண்ணெய்களின் இயல்புகள் முழுமையாக இருப்பதாக அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே வாகன, பொறி உராய்வு நீக்கி எண்ணெய்யாக இதனைப் பயன்படுத்தலாம். (தொடக்க இலக்காக 10,00,000 லீற்றர் என்று எடுத்துக்கொள்ளலாம்.) இதனால் அந்நிய செலவாணி பெரிதும் மீதப்படும். தற்போதுள்ள எண்ணெய் பிரிப்பு அமைப்புகளில் 10% எண்ணெய் இழக்கப்பட்டு விடுகிறது. எனவே வினைத்திறனோடு எண்ணெய் பிரிப்பை மேற்கொள்ளவும், அவற்றிலிருந்து சவர்க்கார உற்பத்தியை மேற்கொள்வதற்குமான அமைப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

### 2.8 சீனி உற்பத்தி

எமது சீனித்தேவை கிட்டத்தட்ட 65,000 மெற்றிக் தொன்களாகவும் பனங்கட்டித் தேவை 2,000 மெற்றிக் தொன்களாகவும் இருக்கும். இதிலே கந்தளாய் சீனி ஆலையில் 11,423 மெற்றிக் தொன் உற்பத்திசெய்யப்படலாம். எமது பனை, தெங்கு வளத்திலிருந்து உற்பத்தி செய்யப்படுபவற்றுக்கு குறைநிரப்பாக வேறு ஆலைகள் நிறுவப்படவேண்டும். எம்மிடம் உள்ளவற்றில் 70% பனை, தெங்கு பயன்பாடு எட்டப்பட்டால், கருப்பஞ் சீனிக்குத் தேவையிராது. சீனி உற்பத்தியில் கிடைக்கும் மதுசாரம் வாகன எரிபொருள் தேவைக்கும், ஏற்றுமதிக்கும் பயன்படுத்தக் கூடியதாயிருக்கும்.

### 2.09 மென்பானம், பிஸ்கட்

எமது உள்ளூர் பழங்களையும், தானியங்களையும் பயன்படுத்திச் செய்யப்பட்ட மென்பானங்களும், பிஸ்கட் போன்ற உணவு வகைகளும் பெருமளவு பாராட்டுக்களைப் பெற்றுள்ளதோடு, இத்துறையும் ஓரளவுக்கு வளர்ந்துள்ளது. இத்துறையை விஞ்ஞான பூர்வமான முறையிலே மேம்படுத்தி, உற்பத்திகளை சர்வதேச தரத்துக்குகொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

### 2.10 உயிரியல் உற்பத்தித்துறை

உயிரியல் உற்பத்தித்துறை தற்போது தவழும் பருவத்தில் உள்ளது. இத்துறையில் கூடிய அவதானம் செலுத்தப்பட்டு, அரிசியிலிருந்து,

1. பியர்
2. உயிரியல் சவர்க்காரம்
3. நொதியங்கள்
4. காளான்
5. வினாகிரி
6. சேலைன்

போன்ற பல்வேறு வகையான உற்பத்திகளுக்கு வழிசெய்யப்பட வேண்டும்.

### 2.11 காகித ஆலை

தற்போது வைக்கோல் போன்ற எமது உள்ளூர்வளங்களை பயன்படுத்தும் வாழைச்சேனை காகித ஆலையில் 26,5-33 மெற்றிக் தொன் கடதாசியும் (1986), 38,49,000 அப்பியாசப் புத்தகங்களும் (19-88 தரவுகள்) உற்பத்தி செய்யப்படுகின்றன. எமது தேவைகளைப் பூர்த்திசெய்ய இது போதுமானது. ஏற்றுமதி நோக்கில், இத்தொழிற்சாலையை மேம்படுத்துவதோடு வடபகுதியின் வைக்கோலையும், ஏனைய மூலப்பொருட்களையும் பயன்படுத்த, மேலும் ஒரு தொழிற்சாலைக்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

### 2.12 குப்பை கழிவுகளை சேதன உரமாக மாற்றுதல்.

எமது பகுதியில் சேரும் குப்பை, கழிவுகளைப்பெற்று அவற்றை சேதன உரமாக மாற்றும் வசதிகள் தேவை. இது சூழல் பாதுகாப்புக்கு உதவுவதோடு, பெருமளவு வேலை வாய்ப்பையும் ஏற்படுத்தும் - தொழிற்சாலையைச் சார்ந்த இல்லங்களுக்கு மேலதிக வருவாயும் கிடைக்கும். இந்தியாவில் இம்முறை வெற்றிகரமாக கையாளப்படுகின்றது.

### 2.13 இறக்குமதி பொருட்கள் சார்ந்த தேவைகள்.

### 2.13 (1) பெற்றோலிய உற்பத்தி

எமது பகுதிகளில் உடனடியாக எண்ணெய் ஆய்வுகளை மேற்கொள்ளும் சாத்தியம் அரிதாகவே காணப்படுகிறது. எமது பொருண்மியம் ஓரளவு விரிவாக்கம் அடைந்த பின்னரே இது சாத்தியமாகும். எனவே தற்போதைக்கு எண்ணெய் உற்பத்தி நாடுகளிடமிருந்து மசகு எண்ணெயைப் பெற்றுச் சுத்திகரிப்பதற்கான இரண்டு ஆலைகளாவது பாதுகாப்பான இடங்களில் நிறுவப்பட வேண்டும். இதனோடு இணைந்ததாக திரவ பெற்றோலியம் வாயு (LPG) மற்றும் உர உற்பத்திகளை மேற்கொள்ளும் வசதிகளை ஏற்படுத்த வேண்டும். பரீட்சார்த்த அடிப்படையில் கூட்டாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ எண்ணெய் ஆய்வு பெறுவதற்கு வெளிநாடுகளை அழைக்க வேண்டும்.

### 2.13 (02) பிளாஸ்ரிக், இறப்பர் தொழிற்சாலைகள்.

உள்ளூரில் சேகரிக்கக் கூடிய பயன்படுத்திய பிளாஸ்ரிக், இறப்பர் முதலியவற்றுடன் புதியவற்றைச் சேர்த்து மீள்சுற்றுவிக்கும் (RECYCLING) தொழிற்சாலைகள் நிறுவப்படவேண்டும்.

### 2.13 (03) இரும்பு, உருக்கு வார்க்கும் நிலையங்கள்.

முதலில் இங்கு காணப்படும் கழிவு இரும்புகளை உருக்கி வார்க்கக் கூடிய தொழிற்சாலை ஒன்று உருவாக்கவேண்டும், பின்னர் படிப்படியாக இதனை கனரக உருக்குத் தொழிற்சாலையாக வளர்த்தெடுக்க வேண்டும்.

### 2.13 (04) நூல்நூற்றல், ஆடை நெசவு, மின்தறி துணி உற்பத்தி

வெளிநாடுகளிலிருந்து இழைகளாகப் பெற்று நூல்நூற்று, அவற்றை முடிப்புச் செய்து (FINISHING) வழங்குவதன் மூலம் ஏராளமான தொழில்வாய்ப்பை ஏற்படுத்த முடியும். தற்போதுள்ள வசதிகளை மீளச் செயற்படுத்துவதோடு தேவைக்கேற்ப புதிதாக அமைக்கவும் வேண்டும். றேயோன், நைலோன், பொலியெஸ்ரர், கொறுலோன் கயிறுகள் முதலியவற்றையும் உற்பத்திசெய்யலாம்.

### 2.13 (05) மின்னியல் துறைக்கான உற்பத்தி

1. மின்னியல் துறைக்குத் தேவையான கம்பிகள், ஆளிகள், சுற்று பொருட்களையும்,

2. கணனிகள் கணிக்கும் கருவிகள், ஏனைய இலத்திரனியல் கூறுகள் போன்றவற்றையும் உருவாக்கும் அமைப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

### 2.13 (06) கப்பல் கட்டுதல், பழுதுபார்த்தல்

எம்மிடம் இருக்கும் பரந்த கடற்கரைகள் கப்பல் கட்டுதல், கப்பல் பழுதுபார்க்கும் துறைகளுக்கு ஏற்றனவாகும். கப்பல் பழுதுபார்க்கும்துறை வருமானத்தை ஈட்டித் தரக்கூடியதாகும். இதனோடு இணைந்ததாக அல்லது வேறாக, கப்பல் கட்டுமிடங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். உலர்துறைகள், மிதக்கும் துறைகள் முதலியவற்றையும் நிறுவவேண்டும்.

### 2.13 (07) நெருப்புப்பெட்டி உற்பத்தி

### 2.13 (08) வர்ணத் தீந்தைகள்

### 2.13 (09) போக்குவரத்துச் சாதனங்கள்

'ஏழைகளின் நண்பன்' என அறியப்படும் துவிச்சக்கர வண்டிகளை உற்பத்திசெய்ய அல்லது பாகங்களைப்பெற்று இங்கு கோர்த்து முடிக்க ஏற்பாடுசெய்ய வேண்டும். வாகனங்களை பொறுத்தவரை சிறியரக கார்களில் தொடங்கி, படிப்படியாக கனரக வாகனங்களுக்குச் செல்லலாம்.

**"எமது தொழிற்றுறை தனது சொந்தச் சாம்பல் மேட்டிலிருந்து தான் தலைதூக்கப் போகின்றது."**

உழவு இயந்திரங்கள், உதிரிப்பாகங்களையும் உருவாக்கும் வசதிகள் எமது நாட்டுக்கு முக்கியமானவையாகும்.

### 2.13 (10) சூரியவலுப் பிறப்பாக்கிகள் சிலிக்கன் பிசிர்கள் (SILICON CHIPS)

குடத்தனை மணலை பயன்படுத்தி சிலிக்கன் பிசிர்களையும், அதனைவைத்து சூரிய வலுப்பிறப்பாக்கிகளையும் உருவாக்கலாம்.

### 2.13 (11) மருத்துவ உபகரணங்கள், மாத்திரைகள் உற்பத்தி

### 2.13 (12) தொலைத்தொடர்பு சாதனங்கள் உற்பத்தி

### 2.13 (13) இரசாயனப் பொருட்கள் உற்பத்தி

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையைப் போன்று, வேறு தொழிற்சாலைகள் அமைக்கப்படவேண்டும். (இவை ஏற்றுமதித்திறன்கொண்டவை)

### 2.13 (14) மா அரைக்கும் ஆலைகள்

பிறிமா மா அரைக்கும் ஆலையைப் போன்று இன்னுமொரு ஆலையும், அதனோடு இணைந்த கோழித்தீன், கால்நடை தீவன தொழிற்சாலைகளும் ஏற்படுத்தவேண்டும்.

### 2.13 (15) உருக்கிணைப்பு ஒட்சி அசெற்றிலீன் உற்பத்தி.

எமது தொழிற்சாலைகளுக்கு இது மிக அத்தியாவசியமானதாகும். ஒட்சி அசெற்றிலீன் வாயுக்களை சிலிண்டரில் அடைக்கும் தொழிலகம் ஒன்றும், உருக்கிணைப்புக் குச்சிகளை (WELDING RODS) தயாரிக்கும் தொழிலகமும் நிறுவப்பட வேண்டும்.

### 2.13 (16) காலநிலை அவதான நிலையங்கள்.

காலநிலை பற்றிய அவதானிப்பு பல தொழிற்றுறைகளுக்கும் முக்கியமானதாகும். எனவே பரவலான அவதானிப்பு நிலையங்களும், சர்வதேசத் தொடர்பு கொண்ட பகுப்பாய்வு நிலையமும் எமக்கு கட்டாயம் வேண்டியிருக்கும். கடல்சார் தொழில்களிலேயே இதன்தேவை அதிகமதிகமாக உணரப்படலாம்.

### 2.14 மின்வளத் தேவை

ஒவ்வொரு வளர்முக நாட்டுக்கும் மின்சாரத் தேவையென்பது இன்றியமையாததாகும். அதுவும் நீர்வலுக்குறைந்த எமக்கு இது பெரும் பிரச்சினையாக இருக்கப்போகின்றது. வீட்டுத்தேவைகள் தவிர்ந்த, தொழிற்றுறைசார் மின்தேவைகள் அண்ணளவாகப் பின்வருமாறு அமையும்.

1 ஆம் ஆண்டு 44.5 மெகா வாட்ஸ்.
5 ஆம் ஆண்டு 130 மெகா வாட்ஸ்.
9 ஆம் ஆண்டு 260 மெகா வாட்ஸ்
10 ஆம் ஆண்டு 300 மெகா வாட்ஸ்
15 ஆம் ஆண்டு 500 மெகா வாட்ஸ்

1. தொடக்க நடவடிக்கையாக 1 மெகா வாட்ஸ்மின்பிறப்பாக்கிகளை நிறுவவேண்டும்.

2. அடுத்தகட்டமாக காங்கேசன் ஆலை (32 மெ.வா.) போன்ற இடங்களிலுள்ளவற்றைப் பயன்படுத்தலாம்.

3. வடமராட்சி போன்ற கிழக்குப்பகுதிக் கரையோரங்களில் அண்ணளவாக 6 மாதங்களுக்கு வலுவான காற்று நிலவுவதாக ஆய்வுகள் காட்டியுள்ளன. இந்தக் காற்று வலுவைப் பயன்படுத்தி, தேசிய மின்சார உற்பத்தி அளவை அதிகரிக்க, காற்றாலைகள் அமைக்கப்படவேண்டும். (உத்தேச உற்பத்தித்திறன் :-ஒரு காற்றாலைக்கு ஆண்டுதோறும் 7,60,427)

4. கடலிலிருந்து மின்சார உற்பத்தி செய்வதற்கான சாத்தியம் ஆராயப்படவேண்டும்.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# தடைகளைத் தகர்த்தெறிந்து...

**உணவுப் பொருட்கள், மருந்துவகை போன்ற பல பொருட்கள் இந்த மண்ணுக்கு கிடைக்காமல் தடை செய்யப்பட்டன.**

**இவற்றுள் பதனிடப்பட்ட தோலும் ஒன்று.**

**எங்கள் மண்ணில் செயற்படும் தோல் பதனிடும் நிறுவனத்தின் செயற்பாடுகளை உங்கள் முன் கொண்டு வருபவர்கள்.**

அ. திரியம்பதி - பே. ரஜனி

நேரடி அறிக்கை

கைத்தொழில் சிறப்பிதழ்

அது யாழ்ப்பாணத்தின் செம்மணிவீதி, வீதியின் இருபக்கமும் வயல்வெளிகள் அறுவடைமுடிந்து ஓய்ந்திருந்தன. எனினும் பசுமை குறையவில்லை. பசுமை சிந்திய அழகை ரசித்தபடியே, மிதிவண்டிகளில் பயணம் செய்துகொண்டிருந்தோம்.

'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' என்ற வளைவின் கீழ் வந்து, நேரே கிழக்குப்புறமாகக் கண்டிவீதியூடாகப் பயணம் தொடங்கியபோது, எதிர்ப்புறமிருந்து விறகுகளைச் சுமந்தபடி எம்மை நோக்கி வரிசையாய் வந்துகொண்டிருந்த மிதிவண்டிகளுக்கு இடம் விட்டு எங்கள் மிதிவண்டிகள் ஒதுங்கின. வெட்டவெளி என்பதால் இஸ்டம் போல் வீசிக்கொண்டிருந்த காற்று -எங்களை மிதிவண்டிகளுடன் சேர்த்து அங்குமிங்கும் அலைக்கழித்தது. எங்கள் நிலை இப்படியென்றால் விறகு சுமந்து சென்றுகொண்டிருப்பவர்களின் நிலை?... விறகுடன் மிதிவண்டிகளை உருட்டிச் செல்வதற்கே அவர்கள் காற்றுடன் அதிகம் போராடவேண்டியிருந்தது. பெருஞ்சுமை நெஞ்சை அமுத்த எம் பயணத்தைத் தொடர்ந்தோம்.

'அன்றீஸ்' இறால் பதனிடும் தொழிற்சாலைக்கட்டடம், ஓய்ந்துபோய் மௌனப் பெருமூச்சுடன் நிற்பது தெரிந்தது. சிங்களப் பேரினவாதம் எம் மண்ணுக்கு அளித்த பரிசின் சாட்சியாய் இந்த அவலங்கள். ஆனால்...... பேரினவாதச் சூழ்ச்சிகள் என்றும் வெற்றிபெற்றதுண்டா? அல்லது, இனிமேலும் வெற்றிபெறமுடியுமா? நிச்சயமாய் -இல்லை. இப்படி நினைத்துக்கொண்டதும் எமக்குள் ஒரு நிமிர்வு -காரணம் எமது உணர்வுகளை நிமிரச் செய்யக்கூடிய ஒரு இடத்துக்குத்தான் நாம் அப்போது சென்று கொண்டிருந்தோம். 'அன்றீஸ்' கட்டடத்திலிருந்து ஏறக்குறைய 100 யார் தூரத்தில், அதோ... உயரமான மதில் சுவர் தெரிகிறது. உள்ளே போகிறோம். அங்கு இருந்த அலுவலர் மலர்ந்த முகத்தோடு எம்மை வரவேற்றார்.

அது ஒரு தோல் பதனிடும் தொழிற்கூடம். 'நீ நிலமாய் நின்றால் -மண்ணைப் பிளந்து கொண்டு நாங்கள் புல்லாய் முளைப்போம்' என்று கூறி நிமிர்வது போல, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர், இன்று எமது மண்ணில் எதிரி விதித்திருக்கும் பொருண்மியத்தடையை எமது உழைப்பின்மூலம் வெகு சுலபமாக அறுத்தெறியக்கூடிய ஆரோக்கியமான பாதையைத் தமிழ் மக்களுக்குத் திறந்து விட்டிருக்கிறார்கள்.

> **எதிரியின் பொருண்மியத்தடை, எமது நாட்டின் சுய பொருண்மியத்தைக் கட்டியெழுப்புவதற்கான பாதையை அகலத் திறந்து விட்டிருக்கிறது.**

உணவுப்பொருட்கள், மருந்துவகை... போன்ற பல பொருட்கள் இந்த மண்ணுக்குக் கிடைக்காமல் தடை செய்யப்பட்டன. இவற்றுள் பதனிடப்பட்ட தோலும் ஒன்று. இந்தப் பதனிடப்பட்ட தோல் -எமக்குப் பல வழிகளில் பயன்படக்கூடிய ஒரு பொருள். தோற்பை, சிறிய கைப்பை, கண்ணாடிக்கூடு, பாதணிகள் இன்னும் பல பொருட்களும் மிருகங்களின் தோலைப்பதனிட்டே மூலப்பொருளாகப் பாவிப்பர். தோல் பதனிடுதலும் எமது மண்ணில் மேற்கொள்ளப்படுகிறது என்பதை அறிந்ததும், அந்தத் தொழிற்கூடத்தை நேரில் போய்ப்பார்த்துவரும் எண்ணம் மனதில் உதயமாகியது. உடனடிச் செயற்பாட்டில் இறங்கினோம். முடிவு -இந்தப்பயணம்.

"வாங்கோ... என்ன விசயம்?" அந்த அலுவலர் மெதுவாகக்கேட்டார். "தோல் பதனிடுறதை நேரிலை பாத்து அதைப்பற்றி விவரங்கள் அறிஞ்சுகொண்டு போக வந்தனாங்கள்" "வாங்கோ காட்டிறன்" அவரைத் தொடர்ந்து உள்ளே போகிறோம். நீர் நிறைந்த சிறிய சீமெந்துத் தொட்டி ஒன்றுக்கு அருகில் எம்மைக் கூட்டிப்போனார். நீருக்குள் தோல் ஒன்று அமிழ்த்தப்பட்டிருக்கிறது. "இந்தத் தொட்டிக்குள்ள இருக்கிறது, உப்புத்தண்ணி. இதுக்குள்ளதான் தோலை முதல்லை ஊறப்போடுவம்".

"என்னென்ன மிருகங்களின்ரை தோலை நீங்கள் பதனிடுறனீங்கள்?".

"மாட்டுத்தோலும், ஆட்டுத்தோலும் தான் நாங்கள் பதனிடுறம்".

"இப்ப இதுக்குள்ள கிடக்கிறது என்ன தோல்?".

"இது மாட்டின்ரை தோல்".

"உப்பிடி உப்புத்தண்ணிக்குள்ளை ஏன் ஊறவிடுறனீங்கள்"

"தோல் பழுதடையாமல் இருக்கும்... இதைப்பிறகு எடுத்துச் சுண்ணாம்புத் தண்ணியுள்ள இன்னொரு தொட்டிக்கை போடுவம்" கூறியபடியே சுண்ணாம்பு நீர்நிரம்பிய இரண்டு தொட்டிகளுக்கு அருகில் எம்மை அழைத்துச் செல்கிறார். அவையும் சிறிய அளவு கொண்ட தொட்டிகள்தான். கொஞ்ச நாட்கள் சுண்ணாம்புத்தண்ணியிலை ஊறவிட்டால் தோலின் தசைகள், மயிர்கள் என்பவற்றை இலகுவாகப் பிரிக்கலாம். அதோடை -தோலுக்கு அடியில இருக்கிற தசைப்பகுதியும் சுகமாய்ப் பிரிஞ்சு வந்திடும்.

> **"எங்கள் தமிழீழ நாட்டில் உற்பத்திசெய்யப்படும் பாதணிகளும், தோல் உபகரணங்களும் எமது மக்களின் அன்றாட பாவனையில் இரண்டறக் கலந்த விடயங்களாகிவிடும்."**

"அதுக்குப் பிறகு அந்தத் தோலை என்ன செய்வியள்?" நாம் கேட்கிறோம்.

சற்றுத் தள்ளிக் காணப்பட்ட வேறொரு தொட்டிக்கு முன்னால் இப்போது நாம் நின்று கொண்டிருந்தோம். சிவப்பு நிற நீரினால் நிரப்பிக் கிடந்தது. அது தொட்டியின் இரண்டு விளிம்புகளுக்கும் குறுக்காக வைக்கப்பட்டிருந்த நீளமான தடியொன்றில் -கொழுவப்பட்டிருந்த தோல்கள் அந்தச் செந்நிற நீரில் முழுவதும் அமிழ்ந்து கிடந்தன.

"சுண்ணாம்புத்தண்ணியிலை ஊறப்போட்டு ரோமங்களையும், தசையையும் நீக்கிப்போட்டு அந்தத்தோலை இந்தத் தொட்டிக்குள்ளை ஒரு மாதம் வரைக்கும் ஊறவிடுவம்".

"அப்ப இதென்னதண்ணி?" நான் கேட்கிறேன்.

"சில மரப்பட்டையளிலை இருந்து எடுத்த சாறுகளைச் சேர்த்து இந்தச் சாயத்தைச் செய்யிறனாங்கள்".

என்னென்ன மரத்தின் பட்டைகள் உபயோகிப்பார்கள் என்பதைக் கேட்டபோது, புன்சிரிப்போடு கூடிய மௌனம்தான் பதிலாகக் கிடைத்தது.

ஆனால், இங்கே உள்ள மரங்களின் பட்டைதான் எடுப்பதாகச் சொன்னார். ஒரு மாதகாலம் இவ்வாறு சாயத்தில் ஊறிய பின் வெளியே எடுத்தால் வெண்மையாக இருந்த தோல் அழகிய செந்நிறமுடையதாகிவிடும். அதன்பின் எண்ணெய்பூசி காயவைக்கப்பட்ட தோல் -உரிய பருவம் வந்ததும், ஒரு மேசையின் மேல் வைக்கப்பட்டு அங்குமிங்குமாய் அமுத்தித் தேய்க்கப்படும். இப்படி அமுத்தித் தேய்ப்பதற்கு சிறிய -மரக்கட்டை போன்றதொரு பொருளைப் பாவிக்கிறார்கள். மினுமினுப்புடன் கூடிய பதனிடப்பட்ட தோல், இப்போது -உற்பத்திப் பொருட்களை ஆக்குவதற்குத் தயாராய் அழகோடு விளங்கும் இப்படியாக ஒரு மாட்டுத்தோலையோ அல்லது ஆட்டுத்தோலையோ தயார்நிலைக்குக் கொண்டுவர இரண்டு மாதங்கள் பிடிக்கும். எங்கோ -சாக்கடையில் வீசப்பட்டோ, குப்பைத்தொட்டியில் கிடந்தோ, தூர்நாற்றம் வீசிக்கொண்டு சூழலையும் மாசுபடுத்திக் கொண்டிருக்கக்கூடிய, இறந்த மிருகங்களின் தோல்களை பயனுள்ள மூலப்பொருளாக ஆக்கும் அரிய பணியைச் செய்துகொண்டிருக்கும் அந்த தொழிற்கூடம் பற்றிய பெருமித உணர்வு எமது எண்ணங்களில் வியாபித்தது.

உண்மையிலேயே இப்படியான தோல் பதனிடுவதற்கென பயன்படுத்தப்படும் இரசாயனப்பொருட்கள் எதுவுமற்ற இன்றைய காலகட்டத்தில், எமது மண்ணில் கிடைக்கும் பதார்த்தங்களைக் கொண்டே பதனிடுதலைத் திறம்படச் செய்து முடிக்கும் இந்தப் பொருண்மியத் திட்டத்தை வியந்து பாராட்டின எங்கள் இதயங்கள். இரசாயனப் பொருட்கள் சீராகக்கிடைக்கும் பட்சத்தில் இந்த உற்பத்தி இன்னும் பல மடங்கு அதிகரிக்கும் என்பது நிச்சயம். அலுவலரிடம் இதுபற்றிக் கேட்டோம்.

"உண்மைதான்..... ஆனால் எங்கடை மண்ணிலை கிடைக்கிற சாமான்களை வச்சுக்கொண்டு இதைச் செய்யிறம் எண்டதை நினைக்கச் சந்தோசமாயிருக்கு. அதோடை இரசாயனப் பொருள் பாவிக்காமை பழங்கால முறையிலை இப்பிடிப் பதனிடேக்கை தோலின்ரை தரம் கூடுதலாகவே இருக்கு அது நல்லது தானே" என்று பெருமையுடன் கூறினார்.

தோல் விற்பனை செய்யும் நடைமுறைபற்றிக் கேட்டபோது, இங்கேயே விற்பனை செய்வதாகவும் பதனிடப்பட்ட மாட்டுத்தோல் ஒரு சதுர அடி 120 ருபாவுக்கும், ஆட்டுத்தோல் ஒரு சதுர அடி 100 ருபாவுக்கும் விற்பதாகவும் சொன்னார். ஆட்டுத்தோலைவிட, மாட்டுத்தோலின் மதிப்பு சற்று அதிகம் எனத் தெரிந்தது. எதிர்காலத்தில் இத்தொழிலில் பலர் வேலைவாய்ப்புப் பெறவேண்டும். இதன் மூலம் எங்கள் தமிழீழ நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பாதணிகளும் தோல் உபகரணங்களும் எமது மக்களின் அன்றாட பாவனையில் இரண்டறக் கலந்த விடயங்களாக ஆகிவிடும் என்ற நல்ல நாள் பற்றிய எதிர்பார்ப்பு இதயத்தில் கருக்கொண்டது. நிச்சயம் அந்தநாள் வரும். திரும்புகின்றோம்.

வீட்டுத்தோட்டமொன்றில் செழித்து வளர்ந்திருந்த வத்தாளைக் கொடிகள் கண்ணில் தெரிகின்றன. "வத்தாளைக்குத் தொடர்ச்சியாய்த் தண்ணீர் ஊத்தக்கூடாது. நல்லா ஊத்திப் போட்டு ஒரு பருவம் வந்த உடன் தண்ணி ஊத்தாமை வறள விட்டிட வேணும். அதுக்குப்பிறகுதான், நிலத்துக்குக்கீழை மள மள எண்டு கிழங்கு விழும்", என்று சின்னவயதிலை தாத்தா சொன்னதை மீண்டும் ஞாபகப்படுத்திக் கொண்டேன். எதிரியின் பொருண்மியத்தடையும் இதுபோலத்தான் -எமது நாட்டின் சுய பொருண்மியத்தைக் கட்டியெழுப்புவதற்கான பாதையை அகலத்திறந்து விட்டிருக்கிறது என நினைத்தபடியே மிதிவண்டியை மிதித்தேன். புதிய உற்சாகமும், புதிய நம்பிக்கையும் இதயத்தை நிறைத்துக்கொண்டன. ■

> **"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் ஆலைகள் வைப்போம் கல்விச்சாலைகள் வைப்போம் ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம் உண்மைகள் சொல்வோம் பலவண்மைகள் செய்வோம்" -பாரதியார்**

# தமிழீழ பொருண்மிய ஆற்றலை வெளிப்படுத்தும்

தமிழீழப் பொருண்மியத்தை மேம்படுத்தும் நோக்குட
கான மாற்றீட்டைக் கண்டுபிடிக்கவும், தமிழீழ மக்கள்
அவற்றிலிருந்து விடுபடுவதற்குமாக தமிழீழப் பொருள
வருகின்றது.

இந்நிறுவனம் தமது தேடல்களை மக்களுக்கு அறி
பற்றிய மக்களின் அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொ
காட்சியகம் ஒன்றை நிறுவியுள்ளது.


தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின்
அனைவருமே பார்வையிடுவதுடன், அவை ஒவ்வொன்று
கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

இக்கட்டுரையாளர் அக்காட்சியகத்தில் அவதானித்த
நேரில் தரிசிக்கும் வாய்ப்பை இழந்த, எம்மக்களுக்கு
றோம்.




## காடழிந்தால், நாடழியும்

அங்கே நுழைவாயிலின் முன்புறத்தே துவிச்சக்கரவண்டியில் விறகுகளை வெட்டி, கட்டிக்கொண்டுவந்த இருவர் வீதியில் தரித்து நின்று, 'விறகெல்லாம் வெட்டி முடிந்துவிட்டதே; இனி எங்கே விறகிற்குப் போவோம்' எனத் தமக்குள்ளேயே ஆலோசிப்பது போன்ற உருவங்கள் காட்சி தருகின்றன. இதனைப் பலரும் கூடிநின்று பார்த்து ரசிப்பதும் பரிதாபப்படுவதும் வழக்கமாகிவிட்டது.




இந்நிறுவனத்தினர் தமிழீழத்தில் உள்ள மரங்கள் ஒவ்வொன்றையும் உயிருக்கும் மேலாக மதித்துக் காத்துவருவதை உணரமுடிகிறது.

தமிழீழத்தில் வனவளத்தைப் பாதுகாத்து, எதிர்காலத்தில் ஏற்படும் பிணக்குகளுக்குத் தீர்வுகாணும்வகையில் பலவிதமான, பெரியளவிலான 'கட்டவுட்'களும் மக்கள் பார்வைக்கென வைக்கப்பட்டிருந்ததுடன், எளிதில் வளரக்கூடிய பலவிதமான மரங்களையும் காட்சிக்கு வைத்துள்ளனர்.

**''காட்டை வளர்த்து நாட்டைக் காப்போம்''**
**''மரத்தை நட்டு மண்ணைக் காப்போம்''.**

## வளமிக்க தமிழீழம்



உட்கட்டுமானப் பகுதியினர் தமிழீழத்தின் கல்விமான்களையும் தேசாபிமானிகளையும் இணைத்து, எதிர்காலத் தமிழீழத்தினை வரையறுத்துள்ளனர். செல்வோர் அனைவரையும் பிரமிக்க வைக்கிறது, இவ் உட்கட்டுமானப் பகுதி. தமிழீழத்தினை இருபது மாநிலங்களாக வகுத்து, அவ்விருபது மாநிலங்களுக்கும் பிரதான நகரங்களையும் குறிப்பிட்டுள்ளனர். இவை பிரதேசங்களின் பரப்பளவு, சனத்தொகை ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு நிர்வாக வலயங்களாக வகுத்துள்ளனர்.

தமிழீழ வரைபடங்களில், மாநிலங்கள் தோறும் அமையப்போகும் கடற்போக்குவரத்தும் அதன் துறைமுகங்களும், மின் உற்பத்தி நிலையங்கள், தெருக்கள், கரையோரத் தெருக்கள், புகையிரதப் பாதைகள், சர்வதேச மற்றும் உள்ளூர் விமான நிலையங்கள், தொலைத்தொடர்பு நிலையங்கள் போன்றன குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் மாநிலங்கள் ஒவ்வொன்றினதும் இயற்கைவளம், தொழில்நுட்ப அறிவு, தொழிலாளர் வலு ஆகியனவற்றை முழுமையாகப் பயன்படுத்தி, கைத்தொழில் மையங்களும் சந்தைகளும் அமைப்பதற்கான திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன. எதிர்காலத் தமிழீழம் பற்றிய மக்களின் அபிப்பிராயங்களுக்காகவும் மேலதிக ஆலோசனைகளுக்காகவும் இவர்கள் காத்திருக்கின்றனர்.

## துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டம்

இதைவிட, பாரிய அளவிலான நன்னீர்த்திட்டம் ஒன்றையும் வகுத்துள்ளனர். தற்போது தமிழீழம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றுதான் இந்த நன்னீர்ப் பிரச்சினை. இதனை நிவர்த்திசெய்யும் நோக்குடன், **'துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டம்'** ஒன்றினை மேற்கொள்ள உட்கட்டுமானப் பணியினர் உத்தேசித்துள்ளனர். இதன் முதற்கட்டமாக யாழ். நீரேரி அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. இத்திட்டம்











# த.பொ.மே. நிறுவனத்தின் நல்லூர் காட்சியகம்

ு, தமிழீழத்திற்கு அப்பால் பெறப்படும் பொருட்களுக்
்தான பொருண்மியத் தடையை சவாலாக ஏற்றும்
ு மேம்பாட்டு நிறுவனம் ஊக்கத்துடன் உழைத்து

்படுத்துவதற்காகவும், தமது எதிர்காலத் திட்டங்கள்
் நோக்குடனும், நல்லூர் ஆலயப் பின்புறத்தில்

சியகத்தினை பள்ளிச் சிறுவர் முதல் பெரியோர்வரை
்றிய விபரங்களையும் ஆர்வத்துடன் கேட்டு அறிந்து

றையும் அங்கு கேட்டறிந்தவற்றையும், காட்சியகத்தை
ட்டுரை வாயிலாக அறியத்தருவதில் நிறைவடைகின்



நிறைவேற்றப்பட ஐந்து ஆண்டுகள் பிடிக்கும் எனவும் பூர்த்தியானதும் காரைநகர் முதல், நெடுங்கேணி வரையிலான மக்களுக்கு குடிநீரை வழங்கமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தினையும் இவர்கள் மிகவும் அழகாகச் சித்தரித்து, மக்களின் ஆலோசனைக்காக வைத்துள்ளனர். இத்திட்டம் குறித்த அனைத்து விபரங்களும் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் நிறைவேறுவதற்கு இரண்டு பிரச்சினைகளை இவர்கள் எதிர்நோக்குகின்றனர். அதில் ஒன்றுதான் நிதிப் பிரச்சினை. 183 கோடி ரூபா செலவு ஏற்படும் எனத் திட்டமிடப்பட்டுள்ளபோதிலும்,

**சசீகரன்**

அவர்கள் மக்களிடமிருந்து இதற்கான நிதியைக் கோரவில்லை. மாறாக அபிவிருத்திக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் நிதியை மற்றைய தேவைகளுக்குப் பயன்படுத்தாது, இத்திட்டத்திற்கு மட்டுமே செலவிடுவதன் மூலம் ஐந்து ஆண்டுகளில் இலக்கினை அடைந்துவிடலாம் என்கின்றனர். இதற்கு மக்கள் பூரண ஒத்துழைப்பை நல்குவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**"எங்கள் மூலதனம் எங்கள் மண்ணுக்கே"**
**தமிழீழத்தைக் கட்டி எழுப்ப எம்முடன் இணையுங்கள்**
-தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

மற்றையது ஏரிகளை நன்னீராக்கும்போது, கடற்றொழில் பாதிக்கப்படும். இவ்வாறு பாதிக்கப்படுவோர் வேறு இடங்களில் சென்று தொழிலை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், இறால் வளர்ப்பு, நன்னீர் மீன் வளர்ப்பு போன்றவற்றையும் ஊக்குவிக்கக்கூடியதாக இருக்கும்.

இந்நீரேரியை நன்னீராக்குவதன் மூலம், போக்குவரத்து

**கைத்தொழில் சிறப்பிதழ்**

மற்றும் குடியேற்றத் திட்டங்களையும் அப்பகுதியில் மேற்கொள்ளலாம் எனவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டுமானப் பணியினர் சீமெந்திற்குப் பதிலாக சுண்ணாம்பினைப் பயன்படுத்திக் கட்டடங்களை அமைக்கும் முறை குறித்து மக்களுக்கு விளக்கம் கொடுக்கின்றனர். சீமெந்திற்கு மாற்றீடாக பயன்படுத்தப்படும் சுண்ணாம்பால் அமைக்கப்பட்ட பல கட்டடங்களின் மாதிரி அமைப்புக்கள் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.


## உல்லாசபுரியாகும் யாழ்ப்பாணம்


இவற்றைவிட யாழ். நகரப்பகுதியை நவீன வசதிகள்கொண்ட சிறந்த நகரமாக்குவதற்கான திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளது. தற்போது புதிதாக அமைக்கப்பட்டுள்ள யாழ். மத்திய பேருந்து நிலையம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு பஸ்கள், ஆட்டோக்கள், துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றுக்கான தரிப்பிடங்கள் தனித்தனியே அமைக்கப்படவுள்ளன.

ஆரியகுளம் பத்து இலட்சம் செலவில் பொழுதுபோக்கு வலயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்குளம் புனரமைக்கப்பட்டு, சிறுவர்கள் உல்லாசமாகப் பொழுதைக் களிப்பதற்கான படகுச் சேவைகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.


பழைய பஸ் நிலையம் நகரப் பூங்காவாக மாற்றியமைக்கப்படவுள்ளது. இதில் பாரிய மரங்கள் வளர்க்கப்பட்டு, இயற்கைபோன்ற அழகை ஏற்படுத்த இருப்பதுடன், மக்கள் தரிப்பிடமும் அமையவுள்ளது. இவற்றின் மாதிரி அமைப்புக்களும் அங்கே இருந்தன.

**தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...**















கைத்தொழில் சிறப்பிதழ்

சிறு கதை

# சுதந்திர பூமி

இரண்டாயிரம் ஆண்டின் மார்ச் மாதம் பதினேழாம் நாள் -அதிகாலை ஐந்து மணி. கேணல் கிட்டு சர்வ தேச விமான நிலையத்தில் தமிழீழ விமான சேவைக்குச் சொந்தமான ஜெட் விமானம் தரையிறங்கியது.

விமானத்தின் கதவுகள் திறக்கப்படு கின்றன.

இணைந்த இறங்கு பாதையிலிறங்கி, சுதந்திர தமிழீழ மண்ணிலே ஒரு காலை வைக்கிறபோதே எனக்குப் புல்லரித்தது. தலைக்கு மேலே இரைச்சல் கேட்டுத் தலை நிமிர் கின்றேன்.

"பறக்கின்ற விமானங்களுக்கிணை யாக பலவகைப் பறவைகள் ஆரவா ரத்துடன் சொந்தத் தமிழ் வானில் சிறகடித்துப் பறந்தன."

"ஆ... எப்பவோ இழந்துபோன தாயின் அன்பான அரவணைப்புப் போல தென்றலின் தழுவல், தமிழீழத்தின் தென்றலல்லவா, அது கூட ஆனந்தமாய் அசைவது போலிருந்தது. பாடமறந்த குயில்களும் ஒலிக்க மறந்த சேவல்களும் இப்போ கம்பீரமாகக் குரல்கொடுத்துக்கொண்டிருந்தன. தமிழீழம் பிறந்து நாளாகியும், இவைகளுக்கு இன்னும் பெருமிதம் குறையவில்லைப் போலிருக்கின்றது. எண்ணிப் பார்த்தபடி மறுகாலையும் மண்ணில் பதிக்கின்றேன். **என் கால்கள் கூசுகின்றன. இந்த மண்ணை முத்தமிட என்காலுக்கு என்ன அருகதை இருக்கின்றது. அந்நிய பூமியிலே அகதி என்ற போர்வையில் பதினைந்து ஆண்டுகள் அடிபணிந்து வாழ்ந்துவிட்டு வருகின்றேன். ஓ, என் தமிழீழமே நீ என்னை மன்னிப்பாய்.** ஏனென்றால், சுதந்திர தமிழீழம் என்பது வெறும் கனவு என்றெண்ணி அன்று கப்பலேறினேன். குழந்தைத்தனமான என் அறியாமை அது. புலிவீரர் இலட்சியத்தின் புனிதம் அன்றெனக்குப் புரியவில்லை. மன்னிப்பாய் என்ற எதிர்பார்ப்பில்தான் வரவே தீர்மானித்தேன்.

**"வணக்கம், வாருங்கள் தமிழீழம் உங்களை வரவேற்கின்றது"** என்ற அறிவிப்பு என் சிந்தையைக் கலைக்க, நிமிர்ந்து பார்த்த என் கண்கள் விரிகின்றன. தாஜ்மகால் போல் பிரகாசிக்கின்றது, எதிரே உள்ள பிரமாண்டமான விமானநிலையம். உள்ளே அழைக்கப்பட்டேன். இதமான பரிசோதனைகள் முடிந்து வெளியே . வருகின்றேன். அடுக்கடுக்காக பலரக வண்டிகள் பரந்து காணப்பட்டன. திடீரென ஒரு கவர்ச்சிமிகுவண்டி என்னருகே வந்து நின்றது. கதவு தானே திறந்தது.

"வணக்கம் தமிழீழ வாகனம் உங்களைப் பாதுகாப்பாக இதமாக அழைத்துச் செல்லும்" என கம்பியூட்டர் எழுத்துக்கள் உள்ளே தோன்றி மறைந்தன. பிரமிப்புடன் உள்ளே ஏறி அமர்ந்தேன்.

கதவு தானே மூடிக்கொள்ள, "தாங்கள் செல்லவேண்டிய இடம்" பணிவாக வினாவினான் சாரதி."

"காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் என்றேன்." கவர்ச்சிகரமான வளைவில் திரும்பியது வண்டி. மிக அகலமான வீதி. இருமருங்கிலும் பிரமாண்டமான கடைத் தொகுதிகள். தீர்வையற்ற விற்பனை நிலையங்கள், பலவகை விளம்பரப் பலகைகள், நியோன் விளக்குகள் வெளிச்சத்தில் மின்னின.

விமானநிலைய வீதியிலிருந்து எமது வண்டி பலாலி வீதிக்குத் திரும்பியது. என்ன அகலமான தெருக்கள். ஒரே தடவையில் ஆறு வாகனங்கள் அருகருகே வருவதும் போவதுமாக இருந்தன. பல கனரக வாகனங்கள் பெரும் கொள்கலன்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்தன. தும்பு ஏற்றுமதி நிறுவனம் என்று ஒரு வாகனத்தில் எழுதப்பட்டிருந்தது, என் கவனத்தை ஈர்த்தது.

"மெல்ல சாரதியிடம் பேச்சுக் கொடுத்தேன்."

"தம்பி தும்பு இங்கிருந்து ஏற்றுமதியாகிறதா? இதோ, ஒரு வாகனம் போகிறதே" என்றேன்.

"என்ன ஐயா, தமிழீழத்திற்கு இப்போது தான் வருகின்றீர்கள்; பரவாயில்லை. தமிழீழ செய்திகளைக்கூட செய்தித்தாட்களில் படிப்பதில்லையா?"

"அதிகாலை ஐந்து மணி - கேணல் கிட்டு சர்வதேச விமான நிலையத்தில் தமிழீழ விமானச் சேவைக்குச் சொந்தமான ஜெட் விமானம் தரையிறங்கியது."


"மன்னிக்கவேணும் தம்பி நான் இருந்த இடத்தில் செய்தித்தாட்கள் பார்ப்பதற்கு எனக்கு நேரம் கிடைப்பதில்லை."

"அப்படியா பரவாயில்லை; தும்பைப் பற்றியல்லவா கேட்டீர்கள். தும்பு இங்கிருந்து பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இப்போது தமிழீழத்தில் 20 பாரிய தும்பு உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன. இவற்றின் உற்பத்திகள் எமது தன்னிறைவு அளவுடன் மேலும் பல மடங்குகளில் நடைபெறுகின்றன. அந்த மேலதிகமான தும்புதான் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அத்துடன் தும்பு உற்பத்திகளான கயிறு வகைகள், மெத்தை வகைகள் என்பனவும் அனுப்பப்படுகின்றன. பலகோடி ரூபா அந்நிய செலவாணியும் எமக்குக் கிடைக்கின்றது."

"அப்படியா! அப்படியானால், செல்லும் கனரகவாகனங்கள் எல்லாம் தும்பைத்தான் கொண்டு செல்கின்றனவா?"

அட்டகாசமான சிரிப்பொலி எழுந்தது அவனிடமிருந்து.

"ஐயா கனேடிய நாட்டுக் கிணற்றுத் தவளையே இங்கு தும்பு மட்டும் ஏற்றுமதி செய்யப்படவில்லை. சீமெந்து,



பதனிட்ட தோல், பனம் சீனி, உப்பு, பாலுணவுகள், கடலுணவுகள், அரிசி, பதனிட்ட பழவகைகள், புகையிலை, சிறுதானியங்கள் என்பன போன்ற பலதரப்பட்ட எமது வளங்களில் உருவான பொருட்களையும் ஏற்றுமதி செய்கின்றோம். 'இல்மனைற்' போன்ற பெரும் கனியங்களும் இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன."

"எங்கிருந்து இவை அனுப்பப்படுகின்றன தம்பி?"

"காங்கேசன்துறை துறைமுகம், தற்போது தமிழீழத்தின் இரண்டாவது பெரிய துறைமுகம். இதனூடாகத்தான் இவைகள் அனுப்பப்படுகின்றன."

என் மனதில் வியப்பு விரிந்தது.

"என்ன தம்பி சகல விடயங்களையும் கம்பியூட்டர் மாதிரி அறிந்து வைத்திருக்கின்றாயே"

அவன் முகத்தில் ஒரு குறுநகை.

**"ஐயா இங்கு கொம்பியூட்டர்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு தமிழீழ பிரசையும் ஒரு கொம்பியூட்டர் போலத்தான் இருக்கின்றனர். மக்கள் எல்லோரும் தமது நாட்டின் வளங்களை பூரணமாக அறிந்திருப்பதுடன் செயற்பாடுகளையும் நன்கு உணர்ந்துள்ளனர். இங்கு அறியாமை என்பது கிடையாது, இது தான் எங்கள் ஆட்சியின் சிறப்பு."**

"அட, காய்ந்த தமிழீழத்தில் இத்தனை வளர்ச்சியா?"

"முட்டாள் அகதி மனிதா இவை மட்டுமல்ல எத்தனையோ வளர்ச்சி கண்டது தமிழீழம். எமது பொன்னாட்டைக் குறை கூறும் எவரையும் இங்கு மனிதனாகவே நாம் நாம் மதிப்பதில்லை."

உறுமினான் சாரதி.

திடுக்கிட்டேன் நான்.

"மன்னித்துக் கொள் அப்பா, தெரியாமல் சொல்லி விட்டேன்."

"பரவாயில்லை ஐயா."

"பலாலி வீதியிலிருந்து சுண்ணாகம் சந்திக்கு வந்து கே. கே. எஸ். வீதிக்குத் திரும்பியது வண்டி."

"தம்பி இவ்வளவு தூரம் வந்து விட்டோம். ஆனால், குடிசைகள் எதையும் காணவில்லையே? வெறும் நிலங்களைக் கூட காணவில்லை பார்க்கும் தரைகள் எல்லாம் பச்சைப்பசேல் எனக்காட்சி தருகின்றதே?"

**"ஐயா, இங்கு குடிசைகள் எல்லாம் மறைந்துவிட்டன. இங்குள்ள சகல குடும்பத்திற்கும் உணவு, உடை, உறையுள் என்பன கண்டிப்பாக நிறைவுபடுத்தப்பட்டிருக்க வேண்டும். இது எமது தலைவரின் கட்டளை. கைத்தொழில்துறையும், விவசாயத்துறையும் நாட்டின் இரு கண்கள் என அன்றொரு நாள் எம் தலைவர் சொன்னார். அது இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இங்கு தரிசு நிலங்களும் கிடையா; பசிகொண்ட வயிறும் கிடையாது."**

தமிழீழத்திலிருந்து
ப. மனோகரதாஸ்

"ஆச்சரியமாக இருக்கிறது தம்பி, ஆனால் இவை பூரணமாகக் கிடைத்துவிட்டால், மனிதன் உழைப்பானா? சோம்பேறியாகி விடுவானே?"

"சிலர் அப்படியிருந்துவிடலாம்;

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# பெரும் போர் மூளும்...

தீர்வு முனைப்புக்கே அது இட்டுச்செல்லலாம் என்பதால், பெரும் போரொன்று மூளும் அபாயம் ஏற்படலாம்" என ஜோன் கீல்ஸின் பணிப்பாளர் கொழும்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதுபோலவே 'வெரித்தாஸ் வானொலியின்' ஆய்வொன்று, பிரதமர் சந்திரிகா தாம் இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போவதாகக் கூறுவது, சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் தந்திரமா என்ற ஐயத்தையும் எழுப்பியுள்ளது. ஆனால் இதுவரை அதாவது அவர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றதில் இருந்து, பிரதமரின் நடவடிக்கை சற்று முன்னேற்றகரமானதாகவே உள்ளது. இருப்பினும் பிரதமர் சந்திரிகா கூறியிருப்பதுபோன்று, இது இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒரு முன்னுரைபோன்றதே. இவ்விவகாரத்தின் ஏனைய பகுதிகள் யாவும் இனிமேல்தான் எழுதப்படவேண்டும். ஆனால் இவையாவும் சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தலின் பின்பே பெரும்பாலும் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையே வெரித்தாஸ் வானொலி ஆய்வாளர்களுக்கு நியாயமான சந்தேகத்தை ஊட்டியுள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணியினர் ஆட்சி ஏற்றபொழுது, போர் நிறுத்தம் பற்றியும், போக்குவரத்துப் பாதை திறப்பது பற்றியும் பேசத்தவறவில்லை. ஆனால், பின்னர் ஒரேயடியாக போர் நிறுத்தம் பற்றிய எண்ணம் அரசிற்குக் கிடையாது என்றரீதியில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பேசிவருவது அரசின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள கொள்கைமாற்றம் என அவதானிகள் கருதுகின்றனர். அரசின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள இம் மாற்றமானது, 'போர்நிறுத்தம் ஒன்று செய்வதற்கில்லை' என்ற சிறீலங்கா இராணுவத்தினரின் அழுத்தத்திற்கு சிறீலங்கா அரசு பணிந்துபோயுள்ளதன் எதிரொலி என விமர்சிக்கப்பட்டு வருகின்றது. அதாவது முன்னைய அரசு இராணுவத் தீர்வை நாடியதென்றால், இந்த அரசும் இராணுவத்தினரின் வற்புறுத்தலுக்குப் பணிந்து, இராணுவ அணுகுமுறைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது எனலாம். இந்தவகையில் இரு அரசுகளுக்கும் இடையில் கொள்கைகளில் வேறுபாடு இருப்பினும், முடிவு என்ற ரீதியிலேயே இதனை நோக்க வேண்டியுள்ளதெனவும் செய்தித்தாள்கள் கருத்து வெளியிட்டுள்ளன. இதேசமயம் அரசின் இவ்வெற்றிகரமான பின்வாங்கலானது, இனப்பிரச்சினையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை கேள்விக்குரியாக்கிவிடுமோ என்ற அச்சமும் தெரிவிக்கப்பட்டுவருகிறது. இராணுவத்தின் வற்புறுத்தலுக்கு பணிந்து கொடுக்கும் அரசை, பௌத்த அடிப்படைவாதத்தை கிளர்ந்தெழவைப்பதன் மூலம் முற்றாக மாற்றிவிடலாம் என்ற எண்ணம், பௌத்த சிங்கள பேரினவாத செய்தித்தாள்களிடையே தலைதூக்கியுள்ளது. இவற்றின் சித்தாந்தப்படி போர் நிறுத்தம் என்பது விடுதலைப் புலிகள் மீண்டும் பலம் பெறுவதற்கான வழி எனக்கூறிவருகின்றன. 1991 சனவரியில் போர் நிறுத்தம் ஒன்றை விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்தபோதும் இதே பல்லவியையே இச்செய்தித்தாள்கள் பாடின; ஆனால் இரண்டாம்கட்டப் போரில், இவ்வாறானநிலை ஒருபோதும் உருவாகவில்லை என்பதை எவரும் அறிவர். அராலிக் கண்ணி வெடித்தாக்குதலில் இருந்து 'ஓசியன்ரேடர்' தகர்ப்புவரை விடுதலைப் புலிகள் இயக்கம் தனது பலத்தை நிரூபித்துள்ளது. இதில் பூநகரிக் கூட்டுப்படைத்தளம் மீதான தாக்குதல் மூலம் தமது இராணுவ பலத்தை சிறீலங்காவுக்கு மட்டுமல்ல, உலகிற்கே வெளிக்காட்டினர். இந்த நிலையில் பேரினவாதச் செய்தித்தாள்களின் நோக்கு பௌத்த அடிப்படைவாதத்தைத் தட்டி எழுப்பி, மீளவும் போர்ச் சூழலைத் தோற்றுவித்தலே என அவதானிகள் கருதுகின்றனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியை வழங்குவது பற்றி ஆராய்வதற்கு, சிறீலங்காவிற்குச் சென்ற குழுவினர் அரசியல் உறுதியின்மை தொடரும் என்ற கருத்தை வெளியிட்டு, தாம் வழங்க முற்பட்ட 2000 மில்லியன் டொலர் நிதி உதவியை ஒத்திவைத்துள்ளனர். பேச்சுவார்த்தைக்கான சூழலின் தொடக்கத்தில் உலகவங்கி மீண்டும் சிறீலங்காவுக்கு உதவிகளை வழங்கியமை, சர்வதேச சமூகம் பேச்சுவார்த்தைக்கு அளித்த ஆதரவு என அவதானிகள் கருதினர். அமெரிக்கா உட்பட உலகநாடுகளும் புதிய அரசின் போக்கை வரவேற்றன. ஆனால், சிறீலங்கா அரசு காட்டிவரும் காலதாமதம், சமாதானத் தீர்வுக்கான நம்பிக்கையைக் குறைத்துவருகின்றது என உலக அரங்கில் கருதப்படுகின்றது. ■

# போரும் சமாதானமும்...

பெறும்" என குறிப்பிட்ட மக்கோனல், "நான் உங்கள் மண்ணில் பிறந்திருந்தால் ஒரு பெண் புலியாகவே இருந்திருப்பேன்" என்று அவர் கூறிய வரிகள், கூட்டத்திற்கு வந்திருந்தவர்களின் மனங்களை ஊடறுத்துச் சென்று, ஏதோ ஒரு செய்தியை நிச்சயமாகச் சொல்லி இருக்கும். "தமிழீழப் பெண் போராளிகள், எதிர்காலத்தில் உலகின் பெண்களின் சமூக மேம்பாட்டிற்கு முன் மாதிரியாக அமைவார்கள்" என தனது நம்பிக்கையினையும் தெரியப்படுத்தினார்.

இறுதியாக இக்கூட்ட அமர்வில் உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரும், சர்வதேச பொறுப்பாளருமாகிய திரு லோறன்ஸ் திலகர் அவர்கள், புலம் பெயர் வாழ்வின் நிச்சயம் அற்ற தன்மையினை தெளிவுறுத்தியதுடன், தமிழ்த் தேசியத்தின் ஒன்றுபடுதலின் அவசியத் தன்மையினையும் வலியுறுத்தினார். அத்துடன் தற்போதைய போராட்ட சூழ்நிலை, சமாதான முயற்சிகளின் யதார்த்த தன்மை பற்றியும் விரிவான விளக்கம் அளித்தார்.

"அகதிகளாக இங்கு வந்துள்ள நாங்கள், இந்த அரசின் விருந்தாளிகளாக மட்டுமே இங்கு இருக்க முடியும்; எமக்கான தேசியம் எமது மண்ணிலேயே உருவாக்கப்பட்டு வருகிறது; இந்த நாடுகளில் நாம் பெறுகின்ற பிராஜாவுரிமை எமது தேசியத்தை ஒரு போதும் உறுதி செய்யாது; நாம் முழுமையான உரிமையை அனுபவிப்பதற்கு ஒரு தேசியத்திற்குள் முழுமையாக இணைதல் வேண்டும்" என தனது உரையில் திரு லோறன்ஸ் திலகர் குறிப்பிட்டார்.

"எமது தமிழ்த் தேசியத்தின் அங்கத்தவர்களாக இருக்கும் நாம், பொய்மையில் வாழ முடியாது; உண்மையில் வாழவேண்டும்" என்பதனையும் அவர் வலியுறுத்தினார்.

"இன்று 'அரசு நோக்கிய ஒரு அரசு' என்ற நிலையிலேயே நாம் சமாதான முயற்சிகளை

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# இந்தியா அஞ்சவேண்டியதில்லை...

வைத் தேடித்தரவேண்டும் என்பதற்காகவோ அல்லது ஈழத்தமிழர்களுக்குத் தன்னாட்சி - இறைமைமிக்க ஒரு தனியாட்சி அமைத்துத்தரவேண்டும் என்ற நோக்கத்திற்காகவோ இந்தியாவினுடைய தலையீடு இருக்கவில்லை. முற்றுமுழுதாக இந்தியா தன்னுடைய தேசிய நலனையும், தன்னுடைய பூகோள நலனையும் பாதுகாப்பதற்காகவே இந்திய அரசு தமிழீழத் தமிழர்களுடைய பிரச்சினையில் தலையிடத் தொடங்கியது.

இந்த உண்மையை இந்திய அரசியல்வாதிகளும், இந்திய இராணுவத்தினுடைய உயர் அதிகாரிகளும் பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். அண்மையில் இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்த டிக்சிற் அவர்கள் பகிரங்கமாகவே செய்தித்தாள்களில் அறிக்கைவிட்டிருக்கின்றார். 'பிரபாகரன் ஈழத்தமிழினத்தின் ஒரு மாபெரும் வீரன்' என்பதை அவர் ஒப்புக்கொண்டிருக்கின்றார். இது அவர்களுடைய காலம்கடந்த ஞானம். இன்று தமிழீழ விடுதலைப் புலிகளுடைய போராட்டத்தின் உண்மைநிலையை அவர்கள் புரிந்திருக்கின்றார்கள்.

இந்தியாவினுடைய சதியினால், எமது விடுதலைப் போராட்டத்தின் பல ஆற்றல்மிக்க தளபதிகளை நாங்கள் இழந்திருக்கின்றோம். லெப். கேணல் திலீபன், லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் ஜொனி, கேணல் கிட்டு ஆகிய பல தளபதிகளை நாங்கள் இந்திய இராணுவத்தின் சதிவலைக்கு உள்ளாகிப் பறிகொடுத்திருக்கின்றோம்.

தமிழ் மக்கள் எமக்கு ஒரு தீர்வு கிடைத்துவிடும் என்று நம்பிய போது, இந்தியா தனது படையை இந்தத் தமிழீழப் பிரதேசத்திலே குவித்து, பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கொன்று குவித்திருக்கின்றது. இந்தியப்படையினர் பலநூறு கோடிக்கணக்கான சொத்துக்களை அழித்துள்ளனர். இத்தனைக்கும் இந்தியாவினுடைய அடக்குமுறையும், அவர்களுடைய தவறான கணிப்புமே காரணமாக இருந்துள்ளன.

இந்திய இராணுவத்தின் உயர் அதிகாரிகள் இங்கு படை நடாத்தியபோது, அவர்களுக்குப் புரிந்திராத உண்மைகளை அவர்கள் இப்போது வெளியிடுகின்றார்கள். "புலிகளின் ஆயுதபலத்தை வைத்து நாங்கள் அவர்களை ஒழித்துவிடலாம்; புலிகளை அழித்து, ஒரு சமாதான சூழ்நிலையைப் பேணலாம் என்று நாங்கள் நம்பினோம். ஆனால் அந்த விடுதலைப் போராளிகளுடைய மனோபலத்தை நாங்கள் அறியவில்லை; அதை நாங்கள் மிகவும் எளிமையாகக் கருதிவிட்டோம்" என்று பகிரங்கமாகவே பல இராணுவ உயர் அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

தமிழீழ மக்களை ஒரு மிகப்பெரும் இன அழிவிலிருந்து விடுபடவைக்கவேண்டும் என்பதற்காக, சிங்கள இனவாதிகளிடமிருந்து எங்கள் தமிழீழ மக்களைப் பாதுகாக்கவேண்டும் என்பதற்காக நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராடினோம்.

எமது போராட்டத்தை எங்களுடைய தலைவர் தொடங்கி, ஒரு மிகப்பெரிய வளர்ச்சிக்கட்டத்திலே மனோதிடமுள்ள போராளிகளை உருவாக்கினார். எங்களுடைய மக்களைப் பாதுகாக்கவேண்டும் என்பதற்காக, எங்களுக்கு ஒரு நாட்டை மீட்டெடுக்க வேண்டும் என்பதற்காக, தமிழீழ மக்கள் தன்னாட்சி - இறைமையோடு வாழவேண்டும் என்பதற்காக நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராடினோம். எங்களுடைய போராட்டத்தைக் கொச்சைப்படுத்த வேண்டும் என்பதற்காக, இந்தியா இந்தப் போராட்டத்தை முறியடிக்கவேண்டும் என்பதற்காக தன்னுடைய இராணுவ பலத்தைப் பிரயோகித்தது. இந்த உண்மையை இன்று அவர்கள் ஓரளவு புரிந்திருக்கின்றார்கள்.

இந்திய இராணுவம், இந்திய அரசு, இந்த இராணுவத்தில் பங்குபற்றி போராடிய உயர் இராணுவ அதிகாரிகள், எங்களுடைய விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையைப் புரிந்திருக்கின்றார்கள். காலம்கடந்த சிந்தனையாக இருந்தாலும், இன்று இந்தியா தன்னுடைய வெளியுறவுக் கொள்கையிலே தன்னுடைய நிலையினை மாற்றிக்கொள்ள வேண்டும். நாங்கள் ஏன் போராடுகின்றோம்? எங்களுடைய மக்களுக்காகப் போராடுகின்றோம் என்ற உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்தகால நிகழ்வுகள், எங்களுக்கு ஒரு மிகப்பெரும் படிப்பினையாக இருந்தாலும், இந்திய அரசு தன்னுடைய கொள்கையை மாற்றிக்கொண்டு, நாங்கள் போராடுகின்ற இந்த உண்மை நிலையை அறிந்துகொண்டு, எங்களது இந்த விடுதலைப் போராட்டத்தை உலகம் அங்கீகரிப்பதற்கு, அவர்கள் ஆதரவு வழங்கவேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

எங்களுடைய விடுதலைப் போராட்டத்திற்கு அவர்களுடைய தார்மீக ஆதரவை வழங்காமல், இந்திய அரசு ஒரு மிகைப்படுத்திய ஒரு அர்த்தமில்லாத ஒரு அச்ச உணர்வைத் தாங்களாகவே வளர்த்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்தியா, தலைவர் பிரபாகரனைக்கண்டு அஞ்சுகின்றது. அணுகுண்டைக்கண்டு அஞ்சாத இந்தியா, தலைவர் பிரபாகரனுக்கு அஞ்சுகின்றது என்றால், அது எங்களுடைய தன்மான உணர்வை அவர்கள் புரிந்துகொண்டுள்ளார்கள் என்றுதான் அர்த்தப்படுகின்றது.

அதாவது, தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் நாட்டிலே ஒரு பிரிவினையை ஏற்படுத்திவிடுவார்கள்; மற்றைய மாநிலங்களிலுள்ள விடுதலைப் போராட்டத்தை வளர்த்து விடுவார்கள்; அங்கு போராட்டம் உருவாவதற்கு வழிசமைத்துவிடுவார்கள் என்ற அச்ச உணர்வு இந்தியாவுக்கு இருந்து வருகின்றது. இந்தியா எம்மைப்பார்த்து அஞ்சுவதில் எந்தவித அர்த்தமும் இல்லை.

இந்தியா எந்தக்கட்டத்திலும் இடையூறாக இருக்கக்கூடாது என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்" என்றும் கூறினார். ■

# தொடரும் தமிழின... குண்டுவெடிப்பு...

நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவநாளன்று இவர் வாழைச்சேனைக்கு தொழிலுக்காகச் சென்று, திரும்பிவரும் வழியில் கிரான் பாலத்தில் நிலைகொண்டிருந்த சிறீலங்கா இராணுவத்தினர் இவரைக் கைதுசெய்தனர். பின்னர் அடித்துக்கொலை செய்தபின், இவரது உடலைத்தூக்கி ஆற்றில் வீசியுள்ளனர். மறுநாள் இவரது சடலம் ஆற்றில் கிடந்து, மக்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவரது படுகொலையைத் தொடர்ந்து, அப்பகுதியால் செல்ல பொதுமக்கள் அஞ்சுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### திருகோணமலையில்

திருகோணமலை முத்துச்சேனை என்ற கிராமத்தைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர், ஐந்து பிள்ளைகளின் தந்தையான துரையப்பா கனகசூரியம் (வயது 47) என்பரைக் கைதுசெய்து, அவரிடம் தமது ஆயுதத்தைக் கொடுத்து ஓடும்படி கட்டளையிட்டுவிட்டு, அவர் ஓடிய போது, சுட்டு வீழ்த்தினர். இதனால் இப்பொதுமகன் ஸ்தலத்திலேயே துடிதுடித்துப் பலியானார். ■

காமினி திசாநாயக்கா உட்பட பலர் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக, அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையைக் கொண்டுவந்தபோது, பொறுத்தநேரத்தில் அவர்களை ஏமாற்றிய மொகமது, இன்று திசாநாயக்காவின் பேரில் புனைக்கதைகளை பரப்பிவருகின்றார்.

பிரேமதாசா கொலைசெய்யப்பட்ட இடம் சிலமணி நேரத்துக்குள்ளேயே கழுவிச்சுத்தம் செய்யப்பட்டது. நாம் இப்போது அவ்வாறு செய்யவில்லை. கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பு இடம்பெற்ற இடம் மழையினால் கழுவிச் செல்லப்படாமல் இருப்பதற்காக கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது. ரஞ்சன் விஜேரத்தினா கொலை செய்யப்பட்ட இடத்தில் ஏற்பட்டிருந்த பாரியகுழி உடனடியாகவே மூடப்பட்டது. குண்டுவெடிப்பு விசாரணைக்கு வெளிநாட்டு நிபுணர்களை அழைக்க விருப்பமா? என்று காமினி திசாநாயக்காவின் மைத்துனர் கலாநிதி விக்கிரமசூரியாவை நான் கேட்டேன். சிறீலங்கா இரகசியப் பொலிசாரின் விசாரணைகளில் திருப்திகொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். எதுவித குற்றச்சாட்டுக்களும் இன்றி, தடுத்துவைக்கப்பட்டிருந்த நபர்கள் தொடர்பாக ஆராய்ந்த ஆணைக்குழுவின் சிபார்சின்பேரிலேயே நாம் 40 பேர்வரை விடுதலை செய்தோம். ஆணைக்குழுவின் சிபார்சு, பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அவர்களின் அனுமதியுடனேயே அந்த நபர்கள் விடுதலைசெய்யப்பட்டனர். விடுதலை செய்யப்பட்டவர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. நாம் விடுதலை செய்த நபர்களினால்தான் திசாநாயக்கா கொல்லப்பட்டார் என்று கூறுவதில், எதுவித உண்மையும் இல்லை. காமினி திசாநாயக்கா அரசிடம் கேட்டிருந்த அனைத்துப் பாதுகாப்புக்களுமே வழங்கப்பட்டிருந்தன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களுக்கு சமாதானம் அவசியம். இதற்காகவே பேச்சுவார்த்தை நடாத்துகின்றோம். ஐக்கிய தேசியக் கட்சிக்கு கொலைக் கலாச்சாரம் உண்டு. கடந்த காலங்களில் அரசியல் எதிரிகளைக் கொலைசெய்வதில், அக்கட்சி திருப்திகண்டது.

### உட்பூசல்

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தலைமைத்துவப் போட்டிகள் நடைபெறுகின்றன. பல பிரிவுகள், குழுக்கள் இருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை அலுவலகத்தின் முன்னாள் உள்ள கட்டத்திற்குள், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தாக்கப்பட்டுள்ளார்; நாம் உண்மையைக் கண்டுபிடிப்போம்" எனவும் கூறியுள்ளார். ■

# பலாலி இராணுவத்தளத்தில் படையினர் சிறப்புப் பயிற்சி

## போர் ஏற்படின் எதிர்கொள்ளவாம்

மீண்டும் ஒரு போர் ஏற்படும் போது, அதனை எதிர்கொள்ளும் வகையில், பலாலி இராணுவத் தளத்தில்வைத்து படையினருக்கு சிறப்புப் பயிற்சி வழங்கப் பட்டுவருவதாக கொழும்பு செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது .

'தீவிர நடவடிக்கைப் பிரிவு' என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புப் படைப்பிரிவு ஒன்று தற்போது கடும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. பச்சைநிற யமகா மோட்டார்சைக்கிளில் கரடு முரடான நிலப்பரப்பிலும் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டுவருகின்றது எனவும், அங்கு சென்று திரும்பிய செய்தியாளரை மேற்கோள்காட்டி அச்செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது

# சிறந்த கட்டமைப்பை தமிழீழம் கொண்டுள்ளது

## யப்பான் செய்தியாளர் கூறியதாக இளம்பரிதி

"தமிழீழம் சிறந்த ஒரு முகாமைத்துவ அமைப்பைக்கொண்டு இயங்கிக்கொண்டிருக்கின்றது. நாம் இங்குவந்து தாண்டிக்குளத்தை அடையும்போது, இருண்ட ஒரு நாட்டுக்குள் வருவதாகவும் இங்குள்ள மக்கள் எப்படியான நிலையில் இருப்பார்களோ என்று நினைத்துக் கொண்டு வந்தோம். ஆனால் இங்கு வந்து பார்த்தபோதுதான் இந்தத் தமிழீழத்தின் பெருமையும், தனித்துநின்று பெருமையுடன் வாழும் மக்களது சிறப்பும் எமக்குப் புரிந்துள்ளது" என, அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த யப்பானியச் செய்தித்தாளாளர்கள் தெரிவித்ததாக, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி குறிப்பிட்டார்.

தியாகி திலீபன் 7 ஆம் ஆண்டு நினைவாக, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முதன்மைச்செயலகத்தில், 24. 09. 1994 அன்று நடைபெற்ற உண்ணாவிரத நிகழ்வில் நினைவுரையாற்றும்போதே திரு. இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

பெருமளவு நிறுவனப் பணியாளர்களும், போராளிகளும் உணர்வுபூர்வமாகப் பங்குபற்றிய இந்நிகழ்வில் மேலும் அவர் உரைநிகழ்த்துகையில், "எதிரி எவ்வளவு பொருண்மியத்தடையை விதித்தபோதிலும் நாம் புதிய பொருண்மியக் கட்டமைப்பை உருவாக்கினோம். இதனால், பொருண்மியத்திலும் பெரியளவில் தளர்வு அடையவில்லை. அதுமட்டுமன்றி எமது மக்களின் வாழ்வும் புதிய பாதையில் சென்றுள்ளதுடன், நாம் சொந்தமண்ணில் சொந்தப்பலத்துடன், நின்றுகொண்டே எமது விடுதலைப் போராட்டத்தையும் வளர்ச்சியடையச்செய்துள்ளோம். ஆகவே பொருண்மியத்தைக் கட்டியெழுப்பும் வகையில், பணியாளர்கள் தெளிவாக இருக்கவேண்டும்" என்றும் குறிப்பிட்டார். ■

# கைத்தொழிற்துறை ...

5. கணனித்துறைக்கான மென்பாண்டங்கள் (SOFTWARE), வன்பாண்டங்கள் (HARDWARE) உருவாக்கும் வசதிகள் எமக்கு நிச்சயமாகத்தேவை.

**2. 15 மரம் சார்ந்த தொழில், மரப்பொருட்கள், கட்டடக் கட்டுமானக் கூறுகள் என்பவற்றின் உற்பத்தி**

**3.0 தொழில் வளம் சார்ந்த தேவைகள்**

3. 1. முன்னர் சொல்லப்பட்ட தொழில்களை ஏற்படுத்துவதற்கான தொழில்நுட்பங்கள், தொழில்நுட்ப ஆலோசனைகள் பொறித்தொகுதிகள் முதலியன வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். இதற்காக வளர்ந்த நாடுகளின் குப்பைக்கூடையாக, பயனற்ற தொழில்நுட்பங்களைத் திணிக்கும் இடமாக, எமது நாட்டை மாற்ற அனுமதிக்கக்கூடாது. தொழில்நுட்ப ஆராய்ச்சி மையங்களும் அமைக்கப்படவேண்டும்.

3. 2 ஒவ்வொரு தொழிற்றுறைக்குமான ஐந்தாண்டு, பத்தாண்டு திட்டவரைவுகள் இப்போதிருந்தே தயாரிக்கப்படவேண்டும்.

3. 3 சந்தை ஆய்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவேண்டும்.

3. 4 தொழில்களை தொடங்குதல், நிதி பெறுதல், நடத்துதல், தரம் பேணுதல், சந்தைப்படுத்துதல் முதலியவற்றுக்கான ஆலோசனைகள் ஒத்தாசைகள் வழங்க, தற்போதுள்ள 'தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்' விரிவுபடுத்தப்படவேண்டும்.

3. 5 வளர்ந்த, வளர்முக நாடுகளின், வெற்றிகரமான தொழிற்றுறைகளில் கையாளப்படும் நடைமுறைகளை ஆராய்ந்து இங்கும் கடைப்பிடிக்கலாம். (எடுத்துக்காட்டாக சீனா. ) தொழில் முயற்சிகளில் தோல்வியடைந்த நாடுகளின் முயற்சிகள் ஏன் தோல்வியடைந்தன என்று ஆராய்ந்து, அதேதவறுகளை நாமும் விடாதிருக்க உறுதி செய்துகொள்ளவேண்டும்.

**4. பொருள்வளம் சார்ந்தவை**

எமது தொழிற்றுறை தனது சொந்தச் சாம்பல் மேட்டிலிருந்து தான் தலைதூக்கப்போகின்றது. எம்மிடம் தொழிற்றுறைக்கு வேண்டிய நிதி வளம் அறவே இருக்காது என்ற அடிப்படையே கைக்கொள்ளப்பட வேண்டும். இந்த வகையில் எமது தொழிற்றுறைக்கு நிதி பெறுவது எவ்வாறு என்ற கேள்வி எழுகின்றது.

4. 01. சிறீலங்காவுக்கு 2 - ஆவது பெரிய வெளிநாட்டுச் செலவாணித் தொகையைப் பெற்றுக் கொடுக்கும் மூலமாக வெளிநாட்டில் வதிவோர் அனுப்பும் பணம் இருக்கின்றது. இவர்களில் 65% இற்கு அதிகமானோர் தமிழீழக் குடிகளே. இவர்களிடையே பிரச்சாரத்தை மேற்கொள்வதன்மூலம் பெருமளவு நிதியை பெற்றுக் கொள்ளவேண்டும்.

4. 02 எமது ஏற்றுமதிப் பொருட்கள் மூலமான வருவாயை அதிகரிக்கச்செய்து, அதன் மூலம் நிதி பெறவேண்டும்.

4. 03 வெளிநாடுகளிடமிருந்து நீண்ட கடன் அடிப்படையில் அல்லது அன்பளிப்பாக, தொழில் நுட்பங்களையும் பொறித்தொகுதிகளையும் பெறமுயற்சி செய்ய வேண்டும்.

4. 04 வெளிநாட்டுக் கூட்டுறவோடு தொழில்களை உருவாக்கலாம்.

4. 05 வெளிநாடுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் காலவரையறையுடன் தொழிற்றுறைகளை வழங்குதல். உதாரணம்:-பெற்றோலிய ஆராய்ச்சி, ஏனைய மூளவளங்களுக்கான ஆராய்ச்சி முதலியவை.

4. 06 சுதந்திர வர்த்தகவலய வருவாய் பெறவேண்டும்.

4. 07 தொழிற் பூங்காக்களிலிருந்து வருவாய்பெற முயற்சிக்கப் பட வேண்டும்.

**5. முடிவுரை**

**எமது தேவைகளை மேற்கூறியவற்றோடு மட்டும் மட்டுப்படுத்தாது, கால ஓட்டத்துக் கேற்ற உலகளாவிய தொழில் நுட்பத்துக்கிணையாக, எமது தொழில்நுட்பமும் விரிவுபடவேண்டும். குறிப்பிட்ட காலத்துக் கொருமுறை எமது கைத்தொழில்சார் கொள்கைகள் மீளாய்வுசெய்யப்படவேண்டும். எமது எதிர்காலத் தேவைகளுக்கு இன்று பலமான அத்திவாரமிடப்படுகின்றது. அனைத்துத்தரப்பினரதும் ஒன்றுபட்ட இணைப்பும், ஒட்டுமொத்தமான உழைப்பும் இந்தத் தேவைகளின் பூர்த்திநிலையை நோக்கி வேகமாகச் செல்லவழிவகுக்கும். ■**

# சுதந்திர பூமி...

"சிலர் அப்படியிருந்துவிடலாம்; ஆனால், எமது நாட்டு மக்கள் நாட்டுப்பற்றும் தொழில் திறனும் உள்ளவர்கள். இரத்தம் சிந்திப் பெற்ற சுதந்திரத்தைத் தூர எறிய மாட்டார்கள். இங்கு உழைப்பே மூலதனம்; தொழிலின்றி இங்கு யாரும் சோம்பிக்கிடப்பது கிடையாது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்".

"கொஞ்சம் வாகனத்தை நிறுத்து தம்பி".

சத்தமின்றி வாகனம் நின்றது.

"இது என்ன தம்பி? மிகப்பெரிய கட்டிடத் தொகுதி, எமது பழைய பண்பாட்டுப் பிரதிபலிப்பை உள்ளடக்கி உள்ளது போலிருக்கிறதே?"

"ஆமாம். ஐயா! இதுதான் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம். தமிழீழம் பற்றிய முழுவிபரங்களையும் சில வினாடிகளில் கணனிகள் மூலம் இங்குபெறலாம். அத்தோடு அனைத்து விடயங்களிலும் ஆலோசனையையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்".

"அப்படியா தம்பி, மிகச்சிறந்த வளர்ச்சிதான்; போகலாம்" என்றேன்.

எவ்வித ஒலியுமின்றி மீண்டும் புறப்பட்டது வண்டி.

சிறிது நேரம் போயிருக்கும்; மீண்டுமொரு பாரிய கட்டிடம் பைசா கோபுரம் போல நின்றது.

"இது என்ன தம்பி. "

"இப்போ நீங்கள் காண்பது தமிழீழ வைப்பகத்தின் கிளையொன்று. தேசநிர்மாணிகளால் உருவாக்கப்பட்ட இக்கட்டிடம், தமிழீழ கட்டிடக்கலைக்கு ஒரு உதாரணமாக உள்ளது. "

"அபாரம் தம்பி. இவைகளைப் பார்க்கும்போது, எனது உடம்பு புல்லரிக்கின்றது. மிக குறுகிய காலத்தில் தமிழீழத்தின் வளர்ச்சி என்னைத் தலை நிமிர வைக்கின்றது. எந்நாட்டை மறந்திருந்த என்னை, என் மனச்சாட்சியே கொல்லுகின்றது. "

"தமிழீழத்தின் தலைநகர் யாழ்ப்பாணம் தான் எத்தனை அழகாக உள்ளது. மிகப்பிரமாண்டமான வளர்ச்சி தெரிகின்றதே?", "இப்படித்தான் பண்டைய தமிழரின் நகர்களான காவரிப்பூம் பட்டினம், பூம்புகார் போன்றன இருந்திருக்கும்"

மீண்டும் பெரிய சிரிப்பொலி

**"ஐயா! தமிழரே தமிழீழத்தின் தலைநகர் யாழ்ப்பாணம் அல்ல; திருகோணமலைதான் எமது தலைநகர். அதைப் பார்த்துவிட்டால், மயக்கமடைந்து விடுவீர்போல இருக்கிறதே; துறைமுகம், விமானநிலையம், கைத்தொழில் நிலையங்கள், கைத்தொழில் பேட்டைகள், பெரும் தொழிற்சாலைகள்கொண்ட பொன்விளையும் பூமி ஐயா அது. "**

"அப்படியா, விரைவில் நான் அங்கு செல்லவேண்டும் தம்பி சந்தியால் திரும்பு. "

இதமான வீதியில் பதமாகத் திரும்பியது வண்டி, திரும்பியவுடன் மீண்டுமொரு உயர்ந்த கட்டிடம் தென்படுகின்றது. அதன் உச்சியில் சிறிய உருவத்தைக் கண்டு திகைத்தேன்.

"என்ன தம்பி, மனிதனொருவன் அந்தரத்தில் நின்று பெயின்ற் அடிக்கின்றான். "

கணீர் என்ற சிரிப்புடன் சொன்னான்.

"அது மனிதனல்ல தமிழீழ கைத்தொழில் நிலையத்தில் உருவாக்கப்பட்ட இயந்திர மனிதன். இவ்வாறு பல வேலைகள் இங்கே இயந்திர மனிதர்கள் செய்கின்றனர். "

புன்னகையொன்று அவன் முகத்தில் அரும்பி மறைந்தது.

"இதோ வீடு வந்து விட்டது. வண்டியை நிறுத்து. "

"வண்டி நின்றது. "

"தம்பி உம்மை எனக்கு நன்றாகப் பிடித்துவிட்டது. வீட்டினுள் வாரும் தேநீர் அருந்திவிட்டுச் செல்லலாம். "

"நன்றி ஐயா. ஆனால் எனக்கு இறங்கும்படி உத்தரவில்லை. "

திகைத்தேன் நான். . . . .
"உத்தரவில்லையா?"

விரிந்த புன்னகை அவன் முகத்தில் இன்னும் பெரிதாகியது.

"ஆம் எனது தலைமை நிலையப் பணிப்பின்றி, நான் எதுவும் செய்யமுடியாது. "

"தலைமை நிலையமா?"

பெரிதாகச்சிரித்தான் அவன்.

"ஐயா நானும் ஒரு இயந்திர மனிதன் தான். உங்களைப் பத்திரமாக இறக்கும்படி எனக்குப் பணிக்கப்பட்டதே தவிர, இறங்கும்படி பணிக்கப் படவில்லை வருகிறேன்" என்றபடி புறப்பட்டான் அவன்.

தலை சுற்றியது எனக்கு.

"இத்தனை நிஜமான படைப்பா! மேலை நாடுகள் கூட தமிழீழத்திற்கு அடுத்த படிதான். பெருமிதமடைகின்றது நெஞ்சம். இயந்திர மனிதனுக்கே இத்தனை ஊட்டப்பட்டுள்ளதென்றால் நிஜமனிதனுக்கு?". . .

என்தலை கம்பீரமாக தமிழீழத் தாயை நோக்கி நிமிர்கின்றது. நானும் தமிழன் என்ற உணர்வு இனிக்கிறது. மகிழ்வோடு உள்ளே நுழைகின்றேன். ■

# போரும் சமாதானமும்...

எதிர்கொள்கிறோம். தமிழீழத்துக்கு மாற்றுத் தீர்வொன்றை பரிசீலிக்கத் தயாராக இருக்கும் விடுதலைப் புலிகள், ஏற்றுக் கொள்ளப்படும் எந்தவொரு தீர்வுத்திட்டத்தையும் தமிழீழ மக்களின் பூரண சம்மதத்துடன்தான் நிறைவேற்றுவார்கள்" என்பதனையும் தெரியப்படுத்தினார்.

அதேவேளை, சமாதானத்தின் மூலம் ஒரு தீர்வு எட்டுவதில் உள்ள பல்வேறு பிரச்சினைகளையும் அவர் சுட்டிக் காட்டினார்.

'போரும் சமாதானமும்' என்ற உள்ளடக்கத்தோடு ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கூட்ட அமர்வானது, பிரான்ஸ் வாழ் தமிழ்மக்களைப் பொறுத்தவரை, ஒரு வித்தியாசமான புதிய அனுபவத்தினைக் கொடுத்திருக்கும் என்றே நம்பலாம். அத்துடன் வெளிநாட்டவர் எமது போராட்டம் பற்றி எவ்வளவு தூரம் அக்கறையோடு உள்ளார்கள் என்பது, இங்கு வந்திருந்தவர்களுக்கு ஒரு அதிர்ச்சியான அனுபவமாகவே அமைந்ததெனலாம். எமது தாயக மண்ணின் விடுதலைப் போராட்ட, தியாக வரலாற்றின் கண்கண்ட சாட்சிப் பதிவாகி வருகை தந்திருந்த, அருட்தந்தை இமானுவேல் அவர்களின் கருத்து வெளிப்பாடும் மிகப் பயன்பாடுடையதாகவே இருந்ததமை குறிப்பிடத்தக்கது. ■

- நிலவன் -

# மக்கள் எதிர்பார்ப்பிற்கேற்ற தீர்வினை அரசு முன்வைப்பின் வரவேற்போம்

## □ போராளி கலைஞன் அரங்கேற்றத்தில் தமிழ்செல்வன்

"உங்களுக்குத் தீர்வைத் தருகின்றோம்; சுதந்திரத்தைத் தருகின்றோம் என்பவர்களுக்கு நாங்கள் சந்தர்ப்பமளிக்கின்றோம். வாருங்கள் நீங்கள் எதைதருகின்றீர்கள் எனப்பார்ப்போம். எமது மக்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ற மாதிரித் தீர்வு இருந்தால், நாங்கள் வரவேற்போம்".



இவ்வாறு அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்செல்வன், நல்லூர் இளங்கலைஞர் கலாமண்டபத்தில் நடைபெற்ற போராளிக் கலைஞன் நிதர்சனின் மிருதங்க அரங்கேற்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார். அவர் அங்கு உரையாற்றுகையில்,

நாம் எமது உரிமைகளுக்காகப் போராடிய வரலாறு நீண்டது. இன்று இருக்கின்ற சூழ்நிலை என்னவாக அமையப்போகின்றதோ எனநாம் இங்கே சொல்லமுடியாது; என்றாலும் எமது மக்களைப் பொறுத்தவரையில் - எம்மைப் பொறுத்தவரையில் எமது போராட்டத்தின் வளர்ச்சி -நாம் பெற்றிருக்கின்ற உயர்ச்சி சாதாரணமானதல்ல .

ஆயிரக்கணக்கான போராளிகள், பல்லாயிரக்கணக்கான மக்களின் குருதியாலும், உயிர்களாலும் கிடைக்கப்பெற்ற இந்தவளர்ச்சியை, இந்த உரிமைகளை எந்தநிலையிலும் நாம் விட்டுக் கொடுக்கமாட்டோம் எமது மக்களும் இதில் உறுதிப்பாடாக இருக்கின்றார்கள் .

உங்களுக்குத் தீர்வைத் தருகின்றோம். சுதந்திரத்தை தருகின்றோம். என்பவர்களுக்கு நாங்கள் வரவேற்பளிக்கின்றோம் . வாருங்கள்; நீங்கள் எதைத் தருகின்றீர்கள் எனப்பார்ப்போம். எமது மக்களுடைய எதிர்பார்ப்பிற்கு ஏற்றமாதிரி தீர்வு இருந்தால், அதற்கு நாங்கள் சந்தர்ப்பம் அளிப்போம்.

ஆனால் நாங்கள் மிகவும் உறுதியாக இருக்கின்றோம் . எமது தேசிய விடுதலையை, எமது உரிமைகளைப் பெற்றெடுப்பதில் எமது மக்களும், போராளிகளாகிய நாமும், எமது தலைவரும் மிகவும் உறுதியாக இருக்கின்றோம் .

இங்கு முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களை எல்லாம் நாங்கள் பார்த்துக்களைத்தவர்கள் - ஆகவே எதையும் பொறுமையாக எதிர்பார்ப்போமே ஒழிய, தீர்வு கிடைக்கும் என்பதை நாம் உறுதியாகச் சொல்லமுடியாது.

தேசியப்பற்று மிகவும் உறுதியாக வளர்ந்துகொண்டு போகவேண்டும் என்பதுதான் எல்லோருடைய விருப்பமும் ஆகும். தற்காலிகமான சலுகைகளையும், தற்காலிகமான அறிக்கைகளையும் செய்தித்தாள் செய்திகளையும் பார்த்து திருப்தியடைபவர்களாக இல்லாமல், எமது சுதந்திரத்தை -எமது உரிமைகளைப் பெறுவதற்கு நாம் போராடிவருகின்றோம் . சலுகைகளை, அறிக்கைகளை நம்பி நாம் ஏமாறமாட்டோம்; இதில் எமது மக்களும் நாமும் உறுதியாக இருக்கின்றோம் .

### தலைவரின் எண்ணம் நிறைவேறுகின்றது

இன்றைய இந்த விழாவை பார்க்கின்றபோது, மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. எமது தலைவரின் எதிர்பார்ப்பு அவருடைய எண்ணம், அவருடைய வேண்டுகோள் இன்று படிப்படியாக நிறைவேறிவருவதைப் பார்க்கின்றபோது, என்னைவிட மிகவும் மகிழ்ச்சியடைவது அவராகத்தான் இருக்கும் எனநினைக்கின்றேன்.

போர் வளர்ச்சியைப்போல் அறிவியல் வளர்ச்சியையும், பண்பாட்டு வளர்ச்சியையும் ஏற்படுத்தவேண்டும் என்கின்ற அவருடைய அவா, அவருடைய விருப்பம், அவருடைய முயற்சி இங்கே நிறைவேறிவருகின்றது.

### தலைவர்

#### போராளிக் கலைஞர்களை வளர்க்க முடிவெடுத்தார்

போராளிகளாகிய நாங்கள் எமது மக்களிடையே வைத்துள்ள அளப்பரிய பாசம், பற்று ஆகியவை எம்மை ஆயுதம் ஏந்த வைத்தது.

குறுகிய எண்ணிக்கைகொண்ட போராளிகள் இருந்த சமயத்தில், அவர்களுடைய கலை ஆர்வங்கள், அவர்களுடைய விருப்பங்கள் அங்கே வெளிப்பட்டதை அவர்களின்கூட இருந்த தலைவர் அவதானித்தார். முகாம்களில் இருந்த கலை ஆர்வம் உடையவர்களுக்கு அங்குள்ள எல்லாமே இசைவாத்தியங்களாக இருந்தன. இதனால் எமது போராளிக் கலைஞர்களுக்கும் கலைசார்ந்த வளர்ச்சியை ஏற்படுத்தவேண்டுமென தலைவர் முடிவெடுத்தார்.

தலைவர் அடிக்கடி சொல்வார், எந்தக் கலையைக் கற்கின்றபோதும் அதை முறையாகக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று.

### கடற்கரும்புலிகளும் கலைஞர்களே

அண்மையில் கடற்கரும்புலிகளாகச்சென்ற நான்கு கரும்புலி வீரர்கள் சென்றதற்கு முன்னர், அங்கு அவர்கள் முகாமிலே இப்படியொரு கலை நிகழ்ச்சி நடைபெற்றது. அங்கு நாட்டிய நாடகம், பரதநாட்டியம், வில்லுப்பாட்டு இப்படிப் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவற்றில் ஈடுபட்டுக்கொண்டுதான் அவர்கள் தமது உயிரை அர்ப்பணிக்கச் செல்கின்றார்கள்.

புதுவை அண்ணர் அடிக்கடி சொல்வார் -போராட்ட ஆக்கங்களைப் படைப்பதற்கு முன்னர், தலைவரைப் பார்க்கவேணடும் என்று.

தலைவரைப் பார்த்துவிட்டால், தனக்கு படைப்பு தன்னிச்சையாகவரும் என்று. அந்தளவிற்கு கலை ஆர்வம் தலைவரிடம் கொண்டுள்ளதைக் காணலாம்.

எம்மைப் பொறுத்தவரையில், எமது போராளிகள் மத்தியில், ஒரு தேசியப்பற்றை -தேசிய உணர்வைக்கொண்டுவரவேண்டும் என்கின்ற அடிப்படையை வைத்துக்கொண்டுதான் போராளிகளுக்கும் வளர்த்துக்கொண்டு இருக்கின்றோம்.

கலை, பண்பாட்டுக் கழகம் முன்வந்து, பல போராட்ட நிகழ்வுகளை ஆவணப்படுத்திவருகின்றது. இதற்காக இந்த நிகழ்விலே எமது மகிழ்ச்சியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்" என்றார். ■

# தமிழீழப் பொருண்மிய...

விவசாயப் பகுதியில், தமிழீழ மண்ணின் வகைகளும், பயிரிடக் கூடிய பயிர்கள், பெற்ற பலாபலன்கள் போன்றனவும் மரக்கறிவகைகளின் உற்பத்தி, அவற்றால் பெறப்பட்ட மேலதிக நன்மைகள் போன்றன காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கடல்வளம் குறித்தும் விளக்கம் கொடுக்கப்படுகிறது. தமிழீழத்தின் முக்கிய வளங்களில் ஒன்றான கடல்வளத்தை முழுமையாகப் பயன்படுத்துவோமாயின், பெருமளவு அன்னியச் செலாவணியை எதிர்காலத்தில் ஈட்டிக் கொள்ளலாம் என்பதனை உணர முடிகின்றது. அலங்காரப் பொருட்கள் முதல், அன்னியச் செலாவணிவரை இக்கடல்வளம் எம்மை வளப்படுத்துகின்றது என்பதை அங்கே காணமுடிகின்றது.

ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையின் மாதிரி அமைப்பு அனைவரையும் கவர்ந்து நிற்கின்றது. ஓடு உற்பத்தி குறித்தும், அதன் செயற்பாடுகள் குறித்தும் பூரண விளக்கம் கொடுக்கப்படுகின்றது. உற்பத்தி அதிகம் இருந்தும் போக்குவரத்து வசதியின்மையால், அவற்றை இங்கு சந்தைப்படுத்த முடியாது இருப்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது. இதற்கென பாரியளவிலான படகு ஒன்று உற்பத்தி செய்யப்படுவதாகவும், விரைவில் அதன்மூலம் குடாநாட்டுக்கு ஓட்டினைத் தருவிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### கைத்தொழில் சந்தை 1994

தியாகி திலீபன் நினைவுத்தூபியை அண்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால், இச்சந்தை அமைக்கப்பட்டுள்ளது. நுழைவாயிலில், தமிழீழம் வரையப்பட்டுள்ளது. இதில் இருபது மாநிலங்களாக வகுக்கப்பட்டு, நாற்பது கைத்தொழில்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் சில மட்டுமே செயற்பட்டுக்கொண்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. இச்சந்தைப் பகுதியில் தென்பகுதி உற்பத்திக்கு ஈடாகத் தமிழீழத்தில் உற்பத்திசெய்யப்பட்ட பல்வேறுபட்ட உற்பத்திப் பொருட்களும் கண்காட்சிக்கும் விற்பனைக்குமாக வைக்கப்பட்டுள்ளன. குளிர்பானம் முதல், இரும்பு உருக்கு உற்பத்திவரை இதில் அடங்கியுள்ளன.

### உப்பில் தன்னிறைவு

ஆனையிறவு உப்பளம் இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உள்ளானதைத் தொடர்ந்து, குடாநாட்டில் உப்பிற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனையடுத்து குடாநாட்டில் உப்பு உற்பத்திசெய்யும் முயற்சி தீவிரமாகியது. 1992 இல், 28, 850 கிலோகிராம் உற்பத்திசெய்யப்பட்டது. தற்போது 1994 ஆனிவரை மட்டும் 13, 14, - 627 கிலோ உற்பத்திசெய்யப்பட்டுள்ளது. இது வடபகுதிக்கான உப்பின் தேவையைவிட ஆறு மாதங்களுக்கு மேலதிகமானதாகும். இதனால் இரண்டு ஆண்டுகளில், உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதுடன், சிறீலங்காவிலிருந்து உப்பின் இறக்குமதியும் தடைசெய்யப்பட்டுள்ளமை பெருமைக்குரியதே.

### தும்பு உற்பத்தி

வடதமிழீழத்தில் தும்பு உற்பத்தி தற்போதைய தேவையில் 15 வீதத்தினை மட்டுமே பூர்த்தி செய்கின்றது. இதற்கான மூலப் பொருளை பெற்றுக்கொள்வதில், சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதே காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இருப்பினும், தும்பின் மூலம் துடைப்பம் முதல் கயிறுவரை உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப் பட்டுவருகின்றது.

### விலங்கு வேளாண்மை

விலங்கு வேளாண்மை குறித்த முழுமையான விளக்கங்களும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. வன்னி மண்ணில், விலங்கு வேளாண்மையில் தன்னிறைவு காணப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்களுடன் விளக்குகிறார் இப்பிரிவின் பொறுப்பாளர்.

இவர் இதுபற்றி விபரிக்கையில், **"வன்னி மண்ணிலே மனிதத் தேவையிலும் பார்க்கக்கூடியளவு வளங்கள் பயனற்றுக்கிடக்கின்றன. இங்கே வரண்ட பிரதேசத்தில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் உடலைவருத்தி உழைத்தும், போதிய பலனைப் பெறமுடியாதுள்ளது. இங்குள்ள உழைப்பாளிகள் தமது இத்தகைய முயற்சிகளை வன்னி மண்ணிலே வந்து பிரயோகிப்பார்களேயானால், தாராளமாக வருவாயைப் பெற்றிட முடியும். சகலதும் மலிவாகக் கிடைக்கிறது. நிலவளம் உண்டு. நீர் வளம் உண்டு. இதற்குமேல் உற்பத்திக்கு என்ன வேண்டும்? எமது மக்கள் கூட்டுவாழ்க்கையை உதறிவிட்டு வளங்கள் உள்ள பிரதேசங்களைநாடி, அங்கு குடியேறி உழைப்பதன் மூலம் தமிழீழம் தன்னிறைவடையும்"** என்றார் பெருமிதத்துடன்.

### பொருண்மியத் தடையை உடைத்திடும் சக்திப் பகுதி

**காற்றாலே நீரிறைப்போம்**
**கடலலையால் மின் எடுப்போம்**
**தோற்காத போராட்டம் தொடர்ந்து**

**ஒரு நாளில் தாயக வளங்களால் தாயகம் மீளும்.**

என்ற இறுமாப்புடன், நிமிர்ந்து நிற்கிறது, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப் பகுதி. சிறீலங்கா அரசு விதித்துள்ள பொருண்மியத் தடையால், செயலிழந்துள்ள தமிழீழ மண்ணுக்கு உரம்சேர்த்து நிற்கிறது. ஆக்கிவாயு மூலம் மோட்டார் வாகனங்களை இயங்கச் செய்யவும், பெற்றோமக்ஸ் ஒளிரச்செய்யவும், நீர் இறைக்கும் பொறிகளை இயக்கவும் முடியும் என்பதை நிருபித்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில், 1940 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் போர்மேகம் சூழ்ந்திருந்த வேளை, உயிர்ச்சுவட்டு எரிபொருள் (பெற்றோல்) மத்தியகிழக்கு நாடுகளிலிருந்து எடுத்து வரமுடியா நிலையேற்பட்டபோது, இதற்குப் பதிலாக இவை கண்டுபிடிக்கப்பட்டன.

இவற்றின் மூலம் அங்கே வாகனங்கள், புகையிரதங்கள் மீன்பிடிப்படகுகள், மரம் அரியும் ஆலைகள், மா அரைக்கும் ஆலைகள் ஆகியன இயக்கப்பட்டன என்பதை இங்கே சுட்டிக் காட்டப்படுவது பொருத்தப்பாடுடையதாகும். காற்றாலை அமைப்பதன் மூலம் எதிர்காலத்தில், யாழ். மாவட்டத்திற்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான காற்றுப் பண்ணையின் மாதிரி அமைப்பும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

இவற்றுக்கும் மேலாக இன்றைய சிறார்கள் மின்சாரம் இன்மையால், பெரும் உளரீதியான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். இதனைத் தவிர்த்து சிறார்களை மகிழ்விக்கப் பொறிமுறைகளையும், மனித சக்தியையும் ஒன்றிணைத்து இராட்டினங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

சிறுவர் முதல் வயோதிபர்வரை இவற்றில் ஏறி, உல்லாசமாகச் சுற்றிவருவதைப் பெருமளவு மக்கள் குழுமிநின்று பார்த்து மகிழ்வதைக் காணக்கூடியதாக இருந்தது. இவை இயந்திரசாதனமின்றி மனித சக்தியை இலகுவாகப் பயன்படுத்துவதன் மூலம் இயக்கப்படுவதை அவதானிக்க முடிந்தது.

**மொத்தத்தில் இவற்றை எல்லாம் சுற்றிப் பார்க்குமிடத்து, எம் தமிழீழம் அனைத்து வளங்களும் நிறைந்த ஒரு சொர்க்க பூமி என்பதில் ஐயமில்லை.** ■

# உயிரோடு புதைக்கப்பட்ட உடல்கள் நான்காம் ஆண்டில் கொடூர நினைவுகள்

**1990** ஆகஸ்ட் 25; தீவக மக்களால் மறக்கமுடியாத நாள். தனித்துவமான அம்மண்ணில் சிறீலங்கா இராணுவம் கால்பதித்துக்கொண்டது. அன்றுதான், இயற்கைத் தாலாட்டின் இனிமையில் வாழ்ந்த மக்களின் வாழ்வு, ஒரு கணப்பொழுதில் சின்னாபின்னமாகியதும். அன்றுதான் உயிர், உடைமை இப்படி எண்ணரிய இழப்புக்கள். உதிக்கும் கதிரவன் ஒளியில், உலங்குவானூர்திகளின் உறுமல்கள், குண்டுவீச்சு விமானங்கள், பீரங்கிப்படகுகள் ஆகியவற்றின் அலறல்கள் தீவக மண்ணையே திணறவைக்கின்றது. சொந்த மண்ணிலே துவண்டுபோன அந்த நிஜமான நிகழ்வின் நினைவில், நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன. எனினும், அந்தத் துன்பத்தின் மனவடு, அடிமனத்திலிருந்து இன்றும் அகலவில்லை; மாறாக அகன்றுதான் இருக்கின்றது.

கோட்டையைக் கைப்பற்ற வேண்டுமென்ற பேராசையுடன், காரைநகர் கடற்பரப்பினூடாக ஊர்காவற்றுறையினுள் நுழைந்த இராணுவம் கரம்பொன், நாரந்தனை, சரவணை, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி ஊடாக ஆகஸ்ட் 25 ஆம் நாள் மாலைப்பொழுதில், மண்டைதீவை முற்றுகையிட்டது. சண்டப்பிரசண்டமாக வந்த இராணுவத்தின் குண்டுகளுக்கு சிறுவர் முதல் முதியவர்வரை பலர் இரையாகினர். இராணுவ முற்றுகையின்போது, தீவக மண்ணைவிட்டு வெளியேற முடியாத சூழ்நிலை. தீவுப்பகுதியையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் பண்ணைப்பாலம், கோட்டையில் இருந்த இராணுவத்தால் குறிபார்த்தவண்ணம் இருந்தது. இதுதவிர அராலி, நாவாந்துறை, குருநகர் ஊடான கடல் வழிப்பாதை உலங்குவானூர்திகளின் ஆக்கிரமிப்பிற்கு ஆளாகியது. இந்நிலையில் மக்கள் கோவில்களில் தஞ்சம்புகுந்து அந்நியனின் பிடியில் சிக்கிக்கொண்டனர்.

## மண்டைதீவில் மீட்ட எலும்புக்கூடுகளும் நிச்சயம் எம்மண்ணின் விடுதலைக்கு உரமூட்டும்

### அப்பாவிகள் சுட்டுக்கொலை

மண்டைதீவு புனித சம்பேதுருவானவர் கோவிலில் புகுந்த, அப்பாவிப் பொதுமக்கள் சிலரை, இராணுவம் அதே இடத்தில் சுட்டுக்கொன்றது.

பாதுகாப்புத்தேடி பதுங்குகுழிக்குள் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேருக்கு, பதுங்குகுழியே சவக்கிடங்காகியது. இதுதவிர, கோவில்களில் தஞ்சமடைய ஓடிச்சென்றவர்கள், எழுந்து நடக்கமுடியாத வயோதிபர்கள் என்று நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த உயிர் கொல்லும்படலத்தில், உலங்குவானூர்திகளும் பீரங்கிப் படகுகளும் கணிசமான பங்கை ஆற்றின. இந்நிகழ்வுகள் மண்டைதீவில் மட்டுமன்றி, அல்லைப்பிட்டி, மண்கும்பான், ஊர்காவற்றுறைப் பகுதியிலும் ஏராளமாக நடந்தேறின.

### இளைஞர்கள் கைது

அல்லைப்பிட்டி, மண்டைதீவினுள் புகுந்த இராணுவம் அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுக்கொன்றது மட்டுமல்ல, கோவில்களில் அடைக்கலம் புகுந்த அப்பாவி இளைஞர்களையும் தனது விருப்பத்திற்கேற்ப அழைத்துச் சென்றது. இவ்விதம் இராணுவம் கூட்டிச்சென்ற இளைஞர்களில், 71 பேரின் நிலை, அவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்றுவரை புரியாத புதிராகவேயுள்ளது. இராணுவத்தால் கூட்டிச் செல்லப்பட்ட தனது மகனின் நிலைமைகேட்டு, மண்டைதீவைச் சேர்ந்த தாய் ஒருவர் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தார். ஆனால், சிங்களவர் மன்றில் நீதி ஏது? இன்றுவரை, அந்த 71 இளைஞர்களும் உயிரோடு இருக்கின்றார்கள் என்ற நினைவே அவர்களின் பெற்றோரிடம் குடிகொண்டுள்ளது.

### மண்ணின் மைந்தர்கள்

தம் இறுதி மூச்சு உள்ளவரை, எம்மண்ணில் அந்நியன் காலடிவைக்க அனுமதியோம் என்று உறுதியுடன் போராடி, 49 வீர வேங்கைகள் மண்டைதீவு மண்ணில், தம்முயிரைத் தியாகம் செய்தனர். இந்த வரலாற்று நிகழ்வு, தமிழ் நெஞ்சங்களை நெருடியது. கடல்வெளி, சமவெளி ஆன அமைப்பைக் கொண்ட தீவகத்தில் இறுதிவரை போராடி, உயிர்நீத்த 49 வீரவேங்கைகளின் வித்துடல்களும், இராணுவத்தின் கட்டளைப்படி, அவர்களினால் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களே ஒரு தோட்டக் கிணற்றினுள் போட்டு மூடிவிட்டார்கள்.

### நெஞ்சை நெகிழவைக்கும் நினைவாலயம்

மக்களைக் காப்பாற்றத் தம்முயிரைத் தியாகம்செய்த, 49 வீர வேங்கைகளும் துயிலுகின்ற அந்த நீர்த்தடாகத்தின் மேல், நினைவாலயக் கோபுரம் நிமிர்ந்துள்ளது. அக்கோபுரத்தின் காட்சி நெஞ்சை நெகிழவைப்பது மட்டுமல்ல, நின்று வணங்கிச் செல்லவும் வழிசமைக்கின்றது.

### புலிகளிடம் கோட்டை

இராணுவத்தின் பிடியில் அகப்பட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி மக்கள் ஆகஸ்ட் 27 ஆம் நாள் காலையில், அப்பகுதியில் இருந்து வெளியேற இராணுவத்தால் அனுமதிக்கப்பட்டார்கள். இவ்வாறு வெளியேறிய மக்கள், இராணுவம் இல்லாத மண்கும்பான் பள்ளிவாசலில் தஞ்சம்புகுந்தனர். சிலர் தமது வசதிகேற்ப வேறு இடங்களுக்கும் சென்றனர். கோட்டையைக் கைப்பற்றவந்த இராணுவத்தை மண்டைத்தீவுச் சந்திக்கப்பால் முன்னேறப் புலிகள் அனுமதிக்கவில்லை. ஆனாலும், பயந்த இராணுவத்திற்குப் புலிகள் பெரும் உதவி செய்தார்கள்; கோட்டையைத் தாங்களே கைப்பற்றிக்கொண்டார்கள். புலிக்கு யார் பலியாவமோ என்று ஏங்கிக் கொண்டிருந்த இராணுவம் நிம்மதிப் பெருமூச்சுடன் மண்டைதீவு, அல்லைப்பிட்டிப் பகுதியைவிட்டு, மீண்டும் ஊர்காவற்றுறையில் குடிகொண்டது.

### மீண்டும் சொந்த மண்ணில்...

28. 09. 1990 இல் இராணுவம் வெளியேறியதைத் தொடர்ந்து, அல்லைப்பிட்டி, மண்டைதீவு மக்கள் மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பினார்கள். மனித சடலங்கள், எரிந்த வீட்டின் கருகிய தூண்கள், இடிந்த கட்டடங்கள், தரைமட்டமான பாடசாலைகள், தரையில் தலைவைத்துக்கிடக்கும் கற்பகதருக்கள், இவை எல்லாம் அங்கு கண்ட காட்சிகள்தான். பேய்களும், பிசாசுகளும் அங்கு ஆட்சிசெய்ததை சாட்சியாக்கும் காட்சிகளும்கூட.

> இராணுவ அணிக்கு முன்னின்று, அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுக்கொன்று, உடைமைகளைச் சூறையாடிய இராணுவத் தளபதி கொப்பேகடுவவும் விஜய விமலரட்ணாவும் அவரது சகாக்களும் அதே தீவகமண்ணின், அராலித்துறையில் கூண்டோடு இயமலோகம் போனதும் நான்கு ஆண்டுக்குள் நடந்துமுடிந்த நிகழ்வுகள்.

ந.விஜயசுந்தரம்

### மூடிய கிணற்றுக்குள் எலும்புக்கூடுகள்

மண்டைதீவின் தோட்டப் பகுதியில் உள்ள பல கிணறுகள், இராணுவத்தால் புள்டோசர் மூலம் மூடப்பட்டிருந்தன. எனினும், என்ன காரணத்திற்காக இவ்வாறு கிணறுகள் மூடப்பட்டன, என்பதை மக்கள் உடன் உணர்ந்துகொள்ளவில்லை.

வேதனையின் விளிம்பில் அவர்கள் சிக்கித் தவித்ததே அதற்குக் காரணமாகும். எனினும் ஓராண்டின் பின்பு, வேலணை உதவி அரச அதிபர், யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறையினர், ஊர்மக்கள் இணைந்து மூடப்பட்ட கிணறுகளைத் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டனர். இதன்போது அங்கு கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் எலும்புக்கூடுகள், இரத்தக் கறைபடிந்த மண் உக்கிப்போன உடைகள் ஏராளமாக மீட்கப்பட்டன.

சூட்டுக்காயங்களும், மண்ணில் புதையுண்டதனால் ஏற்பட்ட மூச்சுத் திணறலுமே மரணத்தை ஏற்படுத்தியுள்ளது என, மருத்துவத் துறையினர் தெரிவித்தனர். இதன்படி, உயிரோடு எம்மவர்கள் புதைக்கப்பட்ட கொடியசெயல் நடந்துள்ளமை என்பது தெளிவு. காணாமற்போன இளைஞர்களின் தொகையை இராணுவம்சென்றபின்பு பதுங்குகுழிகள், வீடுகளில் கிடந்த சடலங்களினதும் ஓராண்டின் பின், கிணறுகளிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளினதும் தொகையுடன் ஒப்பிடும்போது, எல்லாம் அன்றே முடிந்த செயல்தான் என்ற ஐயம் நமது உள்ளத்தில் எழத்தான் செய்கின்றது.

எப்படியாயினும், மூடப்பட்ட கிணறுகள் உடனடியாகத் தோண்டப்பட்டிருந்தால், நிச்சயம் சடலங்களை இனங்கண்டிருக்கலாம் என்பது தவறுக்குப் பின் உணர்ந்த உண்மை.

தமிழரின் எலும்புக்கூடு என்றபடியால், இச்சமாச்சாரம் அப்படியே அடங்கிப்போயிற்று. சூரியகந்தப் பகுதியில் மீட்கப்பட்ட சிங்கள எலும்புக்கூடுகள், தென்னிலங்கையில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி, அன்றைய ஆட்சியாளர்களையே அரச கட்டிலிருந்து தூக்கி எறிந்து விடுமளவிற்குப்போயிற்று. மண்டைதீவில் மீட்ட எலும்புக்கூடுகளும், நிச்சயம் இம்மண்ணின் விடுதலைக்கு உரமூட்டும் என்பதைக் காலத்தின் அசைவு காட்டியேநிற்கும்.

### மாண்டுபோயினார்

1990 ஆகஸ்ட் மாதம், தீவக மண்ணில் இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்புக்குக் காரணமாக இருந்த, அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா, தமிழன்னைவிட்ட கண்ணீருக்கு இரையாகிப் போனான். இராணுவ அணிக்கு முன்னின்று, அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுக்கொன்று, உடைமைகளைச் சூறையாடிய இராணுவத்தளபதி கொப்பேகடுவவும், விஜய விமலரட்ணாவும், அவனது சகாக்களும் அதே தீவகமண்ணின், அராலித்துறையில் கூண்டோடு இயமலோகம் போனதும் நான்கு ஆண்டுக்குள் நடந்துமுடிந்த நிகழ்வுகள்.

### 1994 ஆகஸ்ட் 25

கடந்த நான்கு ஆண்டுகளில் நடந்து முடிந்த சம்பவங்கள், அநேகமாயினும், நாலாவது ஆண்டின் நிறைவுநாளில், சிறீலங்காவின் புதிய ஆட்சியாளர்களின், புதிய பாராளுமன்றம் கூடும்நிகழ்வானது குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், மீண்டும் சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழ்வோம் என்ற உறுதியோடு தீவகமக்கள். ■

## கண்ணீர் அஞ்சலி


**வேலாயுதம் தயாவரன் (வரன்)**

**பிறப்பு: 24.01.1970** **இறப்பு: 28.10.1994**

(தமிழீழ விடுதலைப் புலிகள் - சுவிஸ் கிளை உறுப்பினர் -Lausanne மாநிலம்)

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

இன்னமும்... இன்னமும்
இவ்வாறுதான் மரணங்கள்
தேசத்தை நேசித்தவர்கள் -
பிஞ்சுகள் - சிறுசுகளென
அந்நிய தேசத்திலும்கூட...
விடுதலையுணர்வும்
இந்த இளவயசு மரணங்களும்
பிரிக்க முடியாதன...
எங்கள் மண்ணை நேசித்த
அன்புத் தோழனே
நீயும் ஒரு நட்சத்திரமாய்
வானெழுந்தாய்...
காந்தியின் புதல்வர்கள்
அசோகச் சக்கரத்தால் - உன்
முன்னோரைக் கொன்றனர்
அம்மா... அம்மம்மா... தங்கச்சி
இன்னும் எத்தனை?
நீ புலியானாய்
அந்நிய தேசத்தில் முகமிழந்த
மனிதர் நடுவே
நீ ஓர் அக்கினிக் குஞ்செனவே...



**தமிழீழ விடுதலைப் புலிகள் (சுவிஸ் கிளை)**
**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

# 'படை இல்லாத படையெடுப்பு' இந்திய சமூகத்தின் உயிர்நாடி மீது தாக்குதல்

**இந்திய பொருண்மிய அமைப்பின் மறு சீரமைப்புப்படி, இன்று இந்திய செய்தித்தாபனத்துறையும் சருவதேசப் போட்டிக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது. இதனால் இந்திய உள்நாட்டுச் செய்தி நிறுவனங்கள், முதலாளியத்தின் குறியீடுகளாகவுள்ள அமெரிக்காவின்,"ரைம்" போன்ற செய்தித்தாள் நிறுவனங்களோடும் கவர்ச்சிமிகு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை வாரி வழங்கிவரும் உலகப் புகழ்பெற்ற மேடொக்,வார்னர் சகோதரர் போன்றவர்களின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளோடும் போட்டியிடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதனால் உள்ளூர் செய்திநிறுவனங்கள் பல இருந்த இடம் தெரியாமல் மறையவேண்டியதோடு, பெரும் சமூகச் சிக்கலும் ஏற்படுமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் ரீதியாகவும், இந்தியாவுக்கு பெரும் ஆபத்து ஏற்படலாம். இறுக்கமான கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்த சோவியத் சாம்ராச்சியத்தையே விழ்த்தியவர்களுக்கு, இந்திய குட்டி சாம்ராச்சியத்தை விழ்த்துவது கஸ்டமான காரியமாக இருக்காது என்பதையே இக்கட்டுரை விளக்குகின்றது.**

கயிற்றைவிட்டு வாலைப்பிடித்த கதை போலாகிவிட்டது, இன்றைய இந்திய செய்தித் தாளாளர் நிலை, இன்று இந்திய அரசு மிகப் பிரபலமான வெளிநாட்டு வணிக நிறுவனங்கள் உள்நாட்டில் செய்தியேடுகள், சஞ்சிகைகளை வெளியிட அல்லது உள்நாட்டில் கூட்டு முயற்சிகளின் அடிப்படையில் தொடர்பு சாதனத்துறையினை ஆக்கிரமிக்க வழிவகுக்கத் தயாராகிவிட்டது. இது தொடர்பாக நரசிம்மராவ் நியமித்த ஐந்து அமைச்சர்களைக் கொண்ட குழுவில் பெரும்பான்மையாளர், வெளிநாட்டு நிறுவனங்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என

**இந்திய அரசு, மிகப்பிரபலமான வெளிநாட்டு வணிக நிறுவனங்கள் உள்நாட்டில் செய்தி ஏடுகள், சஞ்சிகைகள் வெளியிட அல்லது கூட்டுமுயற்சிகளின் அடிப்படையில் தொடர்புசாதனத்துறையினை ஆக்கிரமிக்க வழிவகுக்கத் தயாராகிவிட்டது.**

அறிக்கை சமர்ப்பித்ததாக இப்போது தெரியவந்துள்ளது. இப்பரிந்துரைக்கு மிகப்பெரிய எதிர்ப்பினை, இன்று இந்தியாவின் புகழ்பெற்ற மூத்த செய்தி இதழ் நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் இறைமையே தாரை வார்க்கப்படுவதாக பெரும் எதிர்ப்புக்குரல் எழுப்பப்படுகின்றது. இது ஒரு வகை **'புதிய குடியேற்றவாதம்'** என்றும் இந்தியாவின் தேசிய அடையாளமே இதனால் சிதைக்கப்படப் போவதாகவும் என். ராம் உட்பட கே. கிருஸ்ணஐயர் போன்றோர் பெரும் கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றனர். ஆனால் இந்திய அரசோ வழமைபோல, சருவதேச போட்டிக்கு இந்திய தொடர்பு சாதனத்துறையும் திறந்துவிடப்படவே வேண்டும்; அப்போதுதான் தரம் கூடுமென்றும் அத்தோடு இந்திய பொருண்மியத்தின் சகல துறைகளுமே கட்டுப்பாடுகளற்ற தாராளவாத நிலைக்கு உட்படுத்தப்படும் போது இத்துறை மட்டும் எவ்வாறு விதிவிலக்காக இருக்க முடியும் எனவும் வாதாடுகின்றது. அத்தோடு சருவதேச போட்டியாளர்களை சந்திக்க முடியாத அளவிற்கு இந்திய செய்தித்தாள் துறை , என்ன அவ்வளவு பலவீனமான நிலையில் இருக்கின்றதா? எனக் கேள்வியும் எழுப்புகின்றது.

## மேடொக் வருகிறார்

இந்திய பொருண்மிய அமைப்பில் மறுசீரமைப்பின் நாயகனான நிதியமைச்சர் மன்மோகன்சிங், நிச்சயம் அனுமதி பெற்றுத் தருவார் என்கிற நம்பிக்கையில் பல வெளிநாட்டு தொடர்புசாதன நிறுவனங்கள், இந்தியாவில் கூட்டு முயற்சிகளை ஆரம்பிக்க சகல முன்னேற்பாடுகளையும் செய்யத் தொடங்கிவிட்டதாகத் தெரிகின்றது. இலண்டனின் புகழ்மிக்க, **'பினான்சியல் ரைம்ஸ்'** (The Financial Times) அமெரிக்காவின் பாரிய **'ரைம்'** (Time) இதழ் நிறுவனம் போன்றவை இதனுள் அடங்கும்.

அதிலும் குறிப்பாக அமெரிக்க முதலாளியத்தின் குறியீடான ரைம், இந்திய முதலாளியத்தின் வெளியீடான **'இந்தியாடுடே'** நிறுவனத்தோடு கூட்டுச் சேர்ந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் **இவை எல்லாவற்றையும் விட, இந்திய உள்ளூர் செய்தித்தாளாளர்களை தொடர்புசாதன துறையாளர்களை அதிகம் அலைக்கழிப்பது செய்தி உலக சாம்ராச்சியத்தின் ஏக அதிபதியாக வருணிக்கப்படும் றூபேர்ட் மேடொக்கின் (Rupert Murdoch) இந்திய வருகைதான்.** கடந்த மார்ச் மாதம் இந்தியா வந்திருந்த மேடொக்கின் வருகை ஒரு பிரபல நாட்டின் அரசியல் தலைவர் ஒருவரின் வருகை போலமைந்தது. பலத்த வரவேற்பு, பெருத்த விளம்பரங்கட்கு மத்தியில் அவர் பிரதமர் ராவ் உட்பட, தேவையான சகல தலைவர்களையும் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தினார். பிரதமர் நரசிம்மராவ், இந்தியா தொன்மையான பலவகை பண்பாடுகளைக் கொண்ட பாரம்பரிய நாடல்ல என்றும், மேடொக்கோ மேற்குலகின் தொடர்புசாதனங்கள் இந்தியாவை தகுந்த முறையில் பிரதிபலிக்கவில்லையென்றும் தான் அதை சரி செய்யப் போவதாகக் கூறியதும் இந்திய செய்தித்தாளாளர், செய்தித் தொடர்பாளர் மத்தியில் பெரும் எரிச்சலைக் கூட்டியது. பெரும் விபரீதமொன்றின் தொடக்கமாக மேடொக்கின் வருகை இவர்களால் கணிக்கப்படுகின்றது.

எனவே **யாரிந்த மேடொக்?** ஒரு தனிமனிதன் தொடர்பாக இவ்வளவு பரபரப்பா? எனக் கேள்விகள் எழுகின்றன. மேடொக் என்றாலே பலருக்கு, **'பீங்கான் கடைக்குள் புகுந்த எருமை'**யின் ஞாபகம்தான் வரும். அவரது திகைப்பூட்டும் விசித்திரமான ஆனால் திமிர்த் தன்மையான வணிக நடவடிக்கைகள் பணத்தை வாரியிறைத்து உலகெங்கும் பிரபல செய்தி நிறுவனங்களை, செய்தி இதழ்களை, ஒளிபரப்பு அமைப்புக்களை வாங்கிக் குவித்தல், மாக்கிரட் தாட்சர், றீகன் போன்றோரை தனது அரசியல் வழிகாட்டியாகக் கொள்ளும் அவரது பிற்போக்கான அரசியல் பாங்கு, அவ்வந் நாடுகளின் அரசியலில் சொந்த நலனுக்காகத் தலையிடல் போன்றவை பெரும் சந்தேகத்தை எவர்க்கும் ஏற்படுத்தத் தக்கவை. இப்போது ஐரோப்பாவை, அமெரிக்காவை விட்டு அதிக கவனம் அவர் ஆசியாவில் செலுத்துகின்றார். குறிப்பாக தென்னாசியப் பிராந்தியத்திலும் விசேட கவனம் கொள்கின்றார். இன்று ஆசிய மக்களைக் காந்தம் போல கவர்ந்திழுக்கும் கவர்ச்சி மிகு பொழுது போக்கு நிகழ்ச்சிகளை வாரி வழங்கும், ஸ்டார் தொலைக்காட்சியை (STAR T. V Satellite Television Asia Region) மிகப்பரபரப்பான வணிக நடவடிக்கையொன்றின் மூலம் இவர் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விட்டார். அது போலவே Zee தொலைக்காட்சி எனப்பல. இந்தி மொழி தொலைக்காட்சி அமைப்பை இப்போது அவர் விலைக்கு வாங்க முயல்வது, இந்தியாவில் பலருக்கு வயிற்றில் புளியைக் கரைக்கின்றது.

## மேடொக்கின் கழுத்தறுப்புக்கள்

இன்று மேற்குலக தொடர்பு சாதன செய்தித்தாள் உலகம் **கொனார்ட் பிளேக்** (Conard Black), **றெயானார்ட் மோன்ஸ்** (Reinhard Mohns), **றொபேர்ட் மக்ஸ்வெல்** போன்ற ஒருசிலரின் கட்டுப்பாட்டிலிருந்தாலும் மேடோக்கின் ஆதிக்கமோ எல்லை கடந்தவை. இவரின் வரலாறு 1970 இன் பிற்பகுதியிலேயே உச்சம்பெறத் தொடங்கியது. அதற்குமுன் இவர் அவுத்திரேலியாவின் மாநிலமொன்றில் சிறிய நாளேடு ஒன்றினை நடாத்திவந்தார். இவரது பிரவேசம் பிரித்தானியாவின் **'த சண்'** (The Sun), **'த ரைம்ஸ்', 'சண்டே ரைம்ஸ்'** போன்ற செய்தித்தாள்களின் கொள்வனயோடு தொடங்

தமிழீழத்திலிருந்து
**பாலகுமாரன்**

கியது. இக்கதை இன்னமும் முடியவில்லை. ஆயினும் இவர் இப்போது **அச்சு ஊடகத்தை விட** (Print Media), **மின்னியல் ஊடகங்களிலேயே** (Electronic Media) அதிக கவனம் செலுத்துகின்றார். பி. பி. சி. ஒளிபரப்பை அழிப்பதே நோக்கமெனக் கூறி, பிரித்தானியாவில் **ஸ்கை தொலைக்காட்சி** (Sky T. V.) என்றும், அமெரிக்காவில் **பொக்ஸ் தொலைக்காட்சி** (Fox T. V.) என்றும் பல செய்மதி ஒளிபரப்புக்களை இவர் கொண்டிருக்கின்றார். அத்துடன் இவரது தொடர்பாடல் சாதனங்கள் பரப்பும் கருத்துக்கள், காட்டும் மிகமோசமான பாலியல் வன்முறைக்காட்சிகள் விசித்திரமான நிலைக்கு எவரையும் இட்டுச் செல்லும். விபரீதமான தோற்றப்பாடுகள் எல்லாமே மேற்குலகின் அறிஞர்களாலேயே நஞ்சென வெறுக்கப்படுபவை. அதுமட்டுமன்றி இவரது கழுத்தறுப்பு வணிகநடவடிக்கைகளோ மிக்கஅபாயமானவை.

இன்று பிரித்தானியாவிலே செய்தித்தாள் உலகப்போரொன்றையே இவர் நடாத்திவருகின்றார். அவர் அதிகம் விற்பனையாகும் **'த டெய்லி ரெலிகிராப்'** நாளேட்டின் விற்பனையைக் குறைப்பதற்காக, தனது **'த ரைம்ஸ்'** நாளேட்டின் விலையை 45 பென்சிலிருந்து 30 ஆகக்குறைத்தார். தனது விற்பனை சரிவதைக்கண்ட ரெலிகிராப் உரிமையாளர் கொனார்ட் பிளாக் தனது விலையை, 48 இலிருந்து 30 பென்சாக்கத் தள்ளப்பட்டார். இப்போதே மேடொக் 'ரைம்சின்' விலையை 20 பென்சாகக் குறைத்து, பிரித்தானியச் செய்தித்தாள் உலகிற்கே சாவுமணி அடிக்கின்றார். பணமுதலைகளின் இவ்விலைக்குறைப்பு போட்டியால், **'த இன்டிபென்டன்ற்'** என்கின்ற நாளேடு மூடப்படும் நிலையை அடைந்துவிட்டது.



**'கார்டியன்', 'பினான்சியல் ரைம்ஸ்'** போன்றவையே பெருத்த நெருக்கடிக்குள்ளாவுதாகத் தெரிகின்றது. தொடக்கத்தில் பாரிய நட்டம் ஏற்பட்டாலும், பின்முழு இலாபமும் தனக்கே என்பது மேடொக்கின் சித்தாந்தம். எனவேதான், மேடொக்கின் இந்தியப் பிரவேசம் கடுமையாக அங்கு எதிர்க்கப்படுகின்றது. ஆனால் மேடொக் மட்டும்தான் இந்தியக் கருத்து உலகை ஆக்கிரமிப்புச் செய்ய முனைகின்றார் என்றில்லை.

## மக்டொனால்சும் கென்ரக்கியும்

இப்போது இன்னொரு முனையிலே, பாரிய **கலாச்சாரப் படையெடுப்பு** நடக்க எல்லாம் ஆயத்தமாகிவிட்டது. இக்கலாச்சாரப் படையெடுப்பினை நிகழ்த்தப்போகும் நிறுவனத்திற்கு,

**தொடர்புசாதனங்களைக் கருவியாக்கி தொடர்பாடல் மூலம், இந்தியாவில் புகுத்தப்படப்போகும் மேற்கத்தைய முதலாளிய நுகர்வுப்பாங்கிலான இழிவுக் கலாச்சாரம் ஒருபுறம்,மேற்கத்தைய ஆதிக்க அரசியற் கருத்துக்கள் புகுத்தப்படல் இன்னொருபுறம் - இறுதியில் இவை அமெரிக்கா போன்ற முதலாளிய நாடுகளை, இந்திய அரசியலில் தலையிட வழி வகுக்கும்.**

இந்திய அரசே **'வெற்றிலை வைத்து வரவேற்பது'**தான் இங்கு குறிப்பிடவேண்டிய செய்தி. இதனையே, **அழைப்பு வைத்தழைக்கப்படும் குடியேற்றவாதம்** (Colonisation by Invitation) என இந்திய அரசியல் விமர்சகர் ஒருவர் அழைக்கின்றார். **அமெரிக்காவின் மிகப்பெரிய கூட்டு வணிகநிறுவனமான 'ரைம்வார்னர்' (Time - Warner Group) குழுமத்தின் துணையமைப்பான 'வார்னர் சகோதரர்' திரைப்பட நிறுவனம் இந்தியாவில் 200 இற்கு மேற்பட்ட -ஒரே இடத்தில் சகலவித களியாட்ட வசதிகளைக்கொண்ட -கட்டிடத் தொகுதிகளை நிருமாணிக்க முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு கட்டிடத்தொகுதியிலும் 10 திரையரங்குகள், விரைவு உணவு விற்பனைக்கூடங்கள், மிகநவீன வீடியோ விளையாட்டுக்கள், களியாட்ட நடனவிடுதிகள் எனப்பலவித பொழுதுபோக்கு வசதிகளைக்கொண்டதாக இவை அமையும். ஒவ்வொரு தொகுதிக்கும் 15 -20 கோடிவரை செலவாகும் என மதிப்பிடப்படுகின்றது. அமெரிக்க நுகர்வு, பண்பாட்டு முதலாளியத்துவத்தின் குறியீடாக விளங்கும் 'மக்டொனால்ட்' (Mc Donalds), 'கென்ரக்கி' (Kentucky Fried Chicken) போன்ற சருவதேச விரைவுணவுக் குழுமங்களையும் இவற்றோடு இணைக்க முயலப்படுகின்றது. தனது நோக்கம் நலிந்துபோகும் இந்தியத் திரைப்படத் தொழிலை உயர்த்துவதும், 4 -6 மணித்தியாலங்களுக்கு இடைப்பட்ட பொழுதுபோக்குமகிழ் நேரமொன்றை இந்தியக் குடும்பங்களுக்கு வழங்குவதும்தான் என்கின்றனர் வார்னர் சகோதரர்.** ஆனால் கடந்த ஆண்டு 500 திரையரங்குகளுக்குமேல் மூடப்பட்ட நிலையில், வீழ்ச்சியை நோக்கிச்சரியும் இந்தியத் திரைப்படத்துறை எவ்வாறு காப்பாற்றப்படபோகின்றது என்பது ஒன்றும் இரகசியமல்ல. இந்தியத் திரைப்படத் தயாரிப்பு, விநியோகத்துறையிலும் வெளிநாட்டுத் தலையீடு ஆக்கிரமிப்பாக மாறப்போகின்றது என்பதே உண்மைநிலை. (யுராசிக்பாக் ஆங்கிலமொழிபேசும் படத்தை விட, இந்தியில் மொழிமாற்றம் செய்யப்பட்ட இப்படம் ஆகக்கூடிய வருமானத்தை அள்ளிக் கொடுத்துள்ளது).

இங்கு இந்திய உள்ளூர் தொடர்புச்சாதன உரிமையாளர்களைப் பெரிதும் வாட்டுவது என்னவென்றால், இந்திய மாநில அரசுகள் பல இத்தகைய முயற்சிகளுக்கு முக்கிய நகரமையங்களில் நிலங்களும், வட்டியில்லாக் கடன்களும், 7 ஆண்டுகளுக்கு களியாட்ட வரியிலிருந்து விலக்கும் அளிக்க முன்வந்திருப்பதுதான்.

## நியாயமான அச்சம்

எனவேதான் இன்று இந்தியத்தரப்பில் அறிவாளர், செய்தித்தாளாளர், நாட்டு நலன்காப்போர் என்போர் மத்தியிலிருந்து பெரும் அச்சம் கிளப்பப்படுகின்றது. தொடர்புசாதனங்களைக் கருவி

**தொடர்ச்சி 3 ஆம் பக்கம்...**

# புலம்பெயர்ந்த நாடுகளில் மாவீரர் நாள் 94 நிகழ்ச்சிகள்

மரணத்தை வென்ற மாவீரர்களே வீரவணக்கம்

இத்தாலியில்

## மாவீரர் நாள் விழா

1994 கார்த்திகை 27

உடல், உயிர் தந்த மறவர்களின் முத்தமிழ் வீரவணக்கவிழா

காலம்: 27.11.1994

நேரம்: மாலை 6 மணி

இடம்: டாந்தே அரங்கம் (Teatro Dante)

### நிகழ்ச்சி நிரல்

மாவீரர் சிலைக்கு விளக்கேற்றல் (அஞ்சலிப்பாடல்)

அஞ்சலி நடனம்

வரவேற்புரை

மாவீரர் அஞ்சலி கானம் (கலை, பண்பாட்டுக் கழகம்)

மாவீரரே எங்கள் மாதவ வேங்கைகளே (அபிநய நடனம்)

தெருவெங்கும் தமிழோசை (அபிநய நடனம்)

மாவீரர் நாள் உரை (சிறுவன்)

கரும்புலிகள் என நாங்கள் (அபிநய நடனம்)

மாவீரர் சிறப்புரை

காடுகளே காடுகளே (அபிநய நடனம்)

மாவீரர் சிறப்புச்செய்தி (தமிழீழம்)

ரத்தத்திலே சிவந்த மண் (அபிநய நடனம்)

மாவீரர் நாள் புகழ்பாடும் கும்மி

வேள்வித் தீயினிலே வெண்புறாக்கள் (நாடகம் - கலை, பண்பாட்டுக் கழகம்)

அதியுன்னதமான தியாகங்கள் மூலம் தமிழீழம் என்ற எமது தாய் நிலத்தை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்க, உயிர்த்தியாகம் செய்த மறவர்களை இதயத்தில் பூசிக்க இத்தாலிவாழ் தமிழீழ மக்களே திரண்டுவாருங்கள்.

கலை, பண்பாட்டுக் கழகம் - இத்தாலி.

---

நெதர்லாந்தில்

## மாவீரர்நாள்

27.11.1994

கலை நிகழ்ச்சிகள் - கலை பண்பாட்டுக் கழகம் (நெதர்லாந்து)



- பிறந்த பொன்னாடு (நாடகம்)
- விடியலைத்தேடி (நாட்டுக்கூத்து)
- மண்ணில் ஒரு பிடி (நாடகம்)
- நாட்டிய நடனங்கள்
- சிறுவர் நடனங்கள்
- எழுச்சி இசை
- மற்றும் பல நிகழ்ச்சிகள்

காலம்: 27.11.1994 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் : மாலை 3.30 மணி.

இடம் : Aula Van Het Internaart (அஞ்சல் அலுவலகத்திற்குப் பின்புறம்). Ouden Bosch.

எமது மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் தமது மண்ணில் வாழ்வதற்காகத் தமது இன்னுயிரைத் தற்கொடைசெய்த மாவீரர்களை கௌரவிப்பதற்காக நடாத்தப்படும் இவ்வைபவத்தில், அனைத்துத் தமிழ் மக்களையும் (வேறு நிகழ்ச்சிகளைத் தவிர்த்து), கலந்துகொள்ளும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - நெதர்லாந்து.

---

சுவீடனில்

## மாவீரர் நாள் எழுச்சி விழா

காலம்: 26.11.94 சனிக்கிழமை மாலை 5.30 மணி.

இடம்: TENSTA TRAFF Ⓣ TENSTA

நிகழ்ச்சிகள்



- ☆ விளக்கேற்றல்
- ☆ மௌன அஞ்சலி
- ☆ நடனம்
- ☆ பேச்சு
- ☆ கவிதை
- ☆ நாடகம்

விளக்கேற்றல் வைபவத்துடன் குறித்த நேரத்தில் விழா ஆரம்பிக்கப்படும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் - சுவீடன் கிளை

---

டென்மார்க்கில்

## மாவீரர் நாள்

HERNING இல்

காலம்: 26.11.94 சனிக்கிழமை, மாலை 6.00 மணி

இடம்: SONDERAGERSKOLE. HERNING.

நிகழ்ச்சிகள்

குத்துவிளக்கேற்றல்

மௌன அஞ்சலி

தமிழீழத் தேசிய கீதம் இசைத்தல்

வரவேற்புரை

சிறுவர் பேச்சுக்கள்

மாவீரர் நடனம் (திருமதி சுமித்திரா சுகேந்திரராவின் மாணவியர்)

சிறுவர் தாளலய நாடகம்

மாவீரர் நாட்டிய நாடகம் (திருமதி சசிதேவி சந்ரபாலனின் மாணவியர்)

'தர்மயுத்தம்' - களத்துக் காவியம் ( கலை பண்பாட்டுக் கழகம் - டென்மார்க் கிளை)

மாவீரர்களை அஞ்சலித்து விளக்கேற்றல்


'மாவீரர் தோரணங்கள்' (விடுதலைப் பாடல்கள் - கலை பண்பாட்டுக் கழக இசைக்குழு)

COPENHAGEN இல்

காலம் :- 26.11.1994 மாலை 4.00 மணி

இடம் :- STENMAGLE FORSAMLING HUS SORO VEJ - 31. 4295 STENLILLE.

நிகழ்ச்சிகள்



விளக்கேற்றல்

மௌன அஞ்சலி

வரவேற்புரை

மாவீரர் வணக்க நடனம்

சிறுவர் உரை

சிறுவர் கவிதை

கவிதை :'விடை கொடு அம்மா'

உரை : 'பொருளாதாரத்தடையும் யாழ். போதனா வைத்தியசாலையும்'

நாடகம் : 'சாவினைத் தாண்டி'

கும்மி நடனம்

உரை : 'சுதந்திர பூமியில் ஒரு தரிசனம்'

கவிதை

வில்லுப்பாட்டு : 'மாவீரர் புகழ் பாடுவோம்'

சிறுவர் நடனம்

நடனம்

நாடகம் : 'திடம்'

விடுதலை இசை கானங்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள் - டென்மார்க் கிளை

---

சுவிசில்

## மாவீரர் நாள்

27.11.1994 ஞாயிறு பிற்பகல் 3 மணி

Albis Guetli மண்டபம்,

Uetlibergstr. 41, 8045 Zurich

(Zurich பிரதான புகையிரத நிலையத்திலிருந்து Albis Guetli நோக்கிச்செல்லும் 13 ஆம் எண் Tram கடைசித் தரிப்பிடம்.)



மொட்டவிழும் பூவினிலே முகம் தெரியும்
கல்லறைக்குக் கிட்டவர
உங்கள் கண்கள் தெரியும்
வீசுகின்ற காற்றினிலே மூச்சுக் கலந்து
எம்மை உயிர்ப்பிக்கும்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

தமிழீழ விடுதலைப் புலிகள்

(சுவிஸ் கிளை)

அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில்

# மாவீரர்நாள்

1. மெல்பேர்ண் (Melbourne).
   இடம் : University High School,
   Story Street,
   Parkville. (Melway Ref. 43 F3)
   காலம்: 26.11.1994 சனிக்கிழமை,
   மாலை 6.30 மணி.
2. சிட்னி (Sydney).
   இடம் : Burwood Girls High School,
   Cnr. of Cheltnam Road and Victoria Street,
   Sydney.
   காலம்: 03.12.1994 சனிக்கிழமை,
   மாலை 6.30 மணி.
3. மேற்கு அவுஸ்திரேலியா (Western Australia).
   இடம் : Lecture Theatre One,
   Murdoch University,
   Western Australia, (Car Park No. 3).
   காலம்: 27.11.1994 ஞாயிற்றுக்கிழமை,
   மாலை 3.00 மணி.
4. கன்பெரா (Canberra).
   இடம் : Erindale Leisure Centre,
   Erindale,
   Canberra.
   காலம்: 17.12.1994 சனிக்கிழமை,
   மாலை 6.00 மணி.
5. நியூசிலாந்து
   இடம் : Johnson Ville School
   Morgan Street
   Wellington
   காலம்: 27.11.1994 ஞாயிற்றுக்கிழமை,
   மாலை 5.00 மணி.

இலண்டனில்

## மாவீரர்நாள் 94

காலம்: 27.11.1994 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6 மணி.

இடம் : Walthamstow Assembley (Town) Hall,
Forest Road, Walthamstow,
London, E 17.

Walthamstow Central (Victoria line)

### நிகழ்ச்சிகள்



- ☆ தேசியக்கொடி ஏற்றல்.
- ☆ மெளன அஞ்சலி.
- ☆ விடுதலைப் பாடல்கள்.
- ☆ மாவீரர் உரைகள்.
- ☆ நடனம்.
- ☆ புல்லாங்குழல் இசை.
- ☆ "களத்தில்" – சிறுவர் நாடகம்.
- ☆ "மாவீரன் பண்டிதர்" – நாட்டுக்கூத்து.
- ☆ "இனி நெருப்பு எழும்" – நாடகம்.
- ☆ தேசியக்கொடி இறக்கல்.

எமது இனத்தின் சுதந்திரத்திற்காக,
கௌரவத்திற்காக, உயர்விற்காக,
பாதுகாப்பிற்காக தம்மினிய உயிரைத்
தற்கொடையாக ஈய்ந்துள்ள எம்மறவர்களின்
மாவீரம் போற்ற வாரீர்!

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம் - பிரித்தானியக் கிளை.
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

# புலம்பெயர்ந்த நாடுகளில் மாவீரர் நாள் 94 நிகழ்ச்சிகள்

பிரான்சில்



## மாவீரர்நாள் - 94

எங்கள் தமிழீழத் தேசத்தின் தேசிய எழுச்சிநாள்.

ஈழத்தமிழரின் சுதந்திர வேட்கையின் சத்திய சாட்சிகளை தொழுதுபற்றும் நாள்!
குனிந்துகிடந்த தமிழரைத் தட்டி, நிமிர்! என்று பணிக்கும் எழுச்சித் திருநாள்!
கல்லாய் மனங்களைக்கொண்டவர்கூட, கரைந்து உருகும் உணர்ச்சிப் பெருநாள்!

'மாவீரர்நாள்'

தமிழீழத் தேசத்தின் எல்லாச் செழுமையும், வனப்பும், வளமும், உயிர்ப்பும், உயிர்வகை யாவும்
எழுச்சிகொள்ளும் ஈழப்பெருநாள்!!

அன்பார்ந்த பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களே!

எம்தேசத்தின் கடுமையான இருள் சூழ்ந்த வரலாற்றை தம் உயிராலும், உடலாலும், உதிரத்தாலும் மாற்றி எழுதி, எங்கள் தேசத்திற்கு ஒளியேற்றிச்சென்ற அந்த உத்தமரைக் கௌரவிக்க வாருங்கள்! அஞ்சுதலும், கெஞ்சுதலும் இல்லா அகண்ட பெருவாழ்வில் நாம் நெஞ்சு நிமிர்த்துதற்கு, தம்மையே தந்தவரை மனங்களில் தாங்கி வாருங்கள்! தமிழரின் உரிமைக்காக உயிர்தந்த மாவீரரின் நினைவு சுமப்போம்! அற்புதமான வீரவரலாற்றுச் சிற்பிகளை தொழுது நிமிர்வோம் வாருங்கள்!!

காலம்: 27.11.1994 ஞாயிற்றுக்கிழமை
மாலை 7.00 மணி

இடம்: Le Trianon, 80, Bld., Rochechouart, 75018 Paris.
Metro: Anvers.

யேர்மனியில்,

## மாவீரர்நாள்



நிகழ்ச்சிநிரல்

- கொடியேற்றல்
- தொகுப்புரை
- சிறுவர் உரை
- கவியரங்கம்
- நாட்டிய நாடகம்
- தீபமேற்றல்
- தலைமையுரை
- சிறுவர் கவிதை
- நடனம்
- மெல்லிசை

காலம்: 26.11.1994 சனிக்கிழமை, 16:00 மணிக்கு.
இடம்: Sport Halle - Glockenspitz.
Glockenspitz, 348 - 350,
47809, Krefeld.

மாவீரர் தியாகத்தை ஆராதிக்க ஒன்றுகூடுவோம்.
தமிழீழ விடுதலைப் புலிகள், - யேர்மன் கிளை

நோர்வேயில்

## மாவீரர் நாள்

### நிகழ்ச்சிகள்



- ☆ அஞ்சலி நிகழ்வு
- ☆ 'தாய் நிலத்தை மறக்கலாமா' - நடனம்
- ☆ கூத்து
- ☆ மக்கள் அரங்க நாடகம் (Forum Theatre)
- ☆ காற்றுவெளி - குறும்படம்
- ☆ மாவீரர் நினைவுகள் - அஞ்சலிப் பாடல்கள்

நிகழ்சிகள் நடைபெறும் இடங்களும் காலமும்.

**ஒஸ்லோ:**
காலம்: 27.11.94 ஞாயிறு மாலை 6 மணி.
இடம்: Bul teater Salen
Rosenkrantz gt 8.

**பேர்கன்:**
காலம்: 27.11.94
இடம்: Internasjonal Kultur Senter

**ஸ்ரவங்கர்:**
காலம்: 26.11.94 சனி மாலை 6 மணி.
இடம்: Turnhallan
Asen Veien 68, 4050 Sola.

**துரண்ணியம்:**
காலம்: 26.11.94 சனி மாலை 7 மணி
இடம்: Katedral Skole

**வார்டோ (வடநோர்வே):**
காலம்: 26.11.94 சனி மாலை 6 மணி
இடம்: Hulturhus

**புளோறோ:**
காலம்: 26.11.94 சனி மாலை 6 மணி
இடம்: Samfunshuset

எமது எதிர்கால நல்வாழ்விற்காய் தமது இனிய உயிர்களை
அர்ப்பணித்த மாவீரர்களை நினைவுகூர அணிதிரள்வோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

# பூநகரிச் சமரின்
# ஓராண்டின் வெற்றிவிழா நினைவாக...




**சங்கு முழங்கடா தமிழா ! இந்த சாதனை பாடடா கவிஞா!**
**பொங்கும் புலிகளின் போர்த்திறன் பாடியே பூநகர் வெற்றியை வாழ்த்துங்கடா!**




**அட நாகதேவன்துறை வேகப்படகுகள் நம்கையில் வந்ததடா!**
**பகை ஏவிய பீரங்கி யாவுமே எங்களின் காலில் கிடக்குதடா!**




**அட பாயும் புலிகளின் கையில் எதிரியின் பாசறை வீழ்ந்ததடா !**
**பாசி பஞ்சு பறந்தது போல பறந்தது வந்த படைகளடா!**


U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers,